Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு


THINAMURASU

R.R.R Advertising

K.K.S வீதி இணுவில் எனும் முகவரியில் இயங்கிவந்த கிளை தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை தெரிவிக்கின்றோம். 0785226818 எனும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 25 வெள்ளிக்கிழமை (10.07.2015) பக்கங்கள் 20 ஓசை – 283

# அபிவிருத்திப் பணிகள் தொடர பொருத்தமான தலைமை வேண்டும்



மக்கள் நலன்சார்ந்த அபிவிருத்திச் செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு சரியானதொரு அரசியல் தலைமைக்கு மக்கள் வாக்களிக்க வேண்டியது அவசியமானது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

பருத்தித்துறை நகர கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்திற்கு அருகாமையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது மக்களின் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதே எமது நோக்காகும்.

கடந்த காலங்களில் நாம் முன்னெடுப்பது போன்று எதிர்காலத்திலும் தொடர்வதற்கு எமக்கு மக்களின் பலமும் ஆதரவும் அவசியமாகவுள்ளது.

அந்த வகையில், பல்வேறு அபிவிருத்தி சார்ந்த செயற்றிட்டங்களை எதிர்காலத்திலும் தொடர்வதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம்.

அதற்கான ஆற்றலும் அக்கறையும் எம்மிடமேயுள்ளது. நாம் எப்போதும் மக்கள் நலன் சார்ந்த செயற்றிட்டங்களையே முன்னெடுத்திருக்கின்றோம்.

அதுபோன்று எதிர்காலங்களிலும் நிச்சயம் நாம் தொடர்வதற்கு நாம் தயாராகவிருக்கின்றோம் என்றும் சுட்டிக்காட்டிய செயலாளர் நாயகம், அதற்கு மக்கள் ஒன்றிணைந்த ஆதரவை எமக்கு வழங்கி முழுமையான

(19) ஆம் பக்கம் பார்க்க

## சட்டமா அதிபர் இன்று யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

சட்டமா அதிபர் வை.ஏ.டபிள்யு.விஜயதிலக மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி குழுவொன்றும் இன்று யாழ்ப்பாணத்திற்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இவர்களின் வருகை தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகம், கணேசராஜா மற்றும் யாழ்.மாவட்ட சட்டத்தரணிகளும் இணைந்து இவர்களின் வருகைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இச்சட்டத்தரணி குழுவினர் யாழ்ப்பாணத்தின் தற்போதைய

(19) ஆம் பக்கம் பார்க்க

## திருமலையில் எலும்புக்கூடுகள் 10 மீட்பு

திருகோணமலை நகரத்தில் மனிதப்புதைகுழி என சந்தேகிக்கப்பட்ட இடத்தில் நடக்கும் அகழ்வுப்பணிகளில் தொடர்ந்து மனித எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன.

நேற்று மேலும் 6 மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்து இதுவரை இங்கே கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்துள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பல்கலைக்கழக மாணவி மரணம்

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்குள்ளான யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட 3 ஆம் வருட மாணவி சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

செல்வபுரம் முல்லைத்தீவைச் சேர்ந்த ற.லோறன்ஸ் அனா எப்சிபா (வயது-25) என்ற மாணவியே இவ்வாறு தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரைக் காப்பாற்ற முயற்சித்த மாணவியின் கணவரான வைத்தியர் றயித் (வயது-26) தீக் காயங்களுக்கு ஆளாகியுள்ளார்.

வைத்தியரான றயித்தும், எப்சிபாவும் கடந்த 2013 இல் பதி

(19) ஆம் பக்கம் பார்க்க

## பொதுமக்களை பாதுகாக்க தவறிவிட்டது ஐ.நா.

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தில் பலியான தமிழர்கள் உட்பட்ட பொதுமக்களை பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் இடம்பெற்ற பொஸ்னிய இனப்படுகொலை தொடர்பான விவாதத்தின் போது, வீடியோ கொன்பரன்ஸ் மூலமாக் அவர் இதனைக் கூறியுள்ளார்.

படுகொலைகளில் இருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை ஒன்றுபட்டிருக்க வேண்டும்.ஆனால் தவறிவிட்டது. தற்போது சூடான், புருண்டி மற்றும் மியன்மார் போன்ற நாடுகளிலும் இந்த நிலைமை காணப்படுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கொலைக் குற்றவாளிக்கு மரண தண்டனை

சாவகச்சேரி பகுதியில் கடந்த 2008ஆம் ஆண்டு மனைவியை மண்ணெண்ணெய் ஊற்றி கொலை செய்தவருக்கு யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் கனகா சிவபாதசுந்தரம் மரண தண்டனை விதித்து, நேற்றுத் தீர்ப்பளித்தார்.

கடந்த 2008ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தவமணி மகான் என்ற பெண் கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் அவரது கணவர் வேலன் மகான், சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் நடத்தப்பட்டு வந்த இந்த வழக்கு கடந்த 2011ஆம் ஆண்டு டிசம்பர் 14ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்றத்துக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் மாற்றப்பட்

(19) ஆம் பக்கம் பார்க்க

## சந்திரிகா லண்டன் பயணம்.

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் மகிந்த ராஜபக்ஷவுக்கு இடமளிக்கும் விவகாரத்தில், தெற்கு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு ஏற்பட்டுள்ள சூழலில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திடீரென பிரித்தானியாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நெருங்கிய அரசியல் சகாவான சந்திரிகா, அண்மைய அரசியல் நிலைவரங்கள் குறித்து அதிருப்தி அடைந்திருந்

(19) ஆம் பக்கம் பார்க்க

## சுயேட்சையாக களம் குதிக்கிறார் அனந்தி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி நாடாளுமன்றத் தேர்தலில் சுயேட்சையாகக் களமிறங்கவுள்ளார்.

தேர்தல் செயலகத்தில் நேற்றைய தினம் கட்டுப்பணம் செலுத்தியுள்ள நிலையில் அவர் வேட்புமனுவைப் பெற்றுக்கொண்டதோடு, எதிர்வரும் 13 ஆம் திகதி அவர் வேட்புமனுத்தாக்கல் செய்யவுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரர் பட்டியலில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## வேட்புமனுவில் ஒப்பமிட்டார் மகிந்த


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, குருநாகல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடுவதற்காக நேற்றுக் காலை வேட்புமனுவில் கையெழுத்திட்டுள்ளார்.

இந்தத் தகவலை தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கொழும்பில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வாவும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

முன்னதாக, நேற்று முன்தினமே மகிந்த ராஜபக்ஷ வேட்புமனுவில் கையெழுத்திட்டு விட்டதாக பசில் ராஜபக்ஷவை மேற்கோள்காட்டி தகவல்கள்

(19) ஆம் பக்கம் பார்க்க




சகோதரத்துவம்

# சுதந்திரமாக தொழில் செய்ய வழியேற்படுத்தியவர் டக்ளஸ்

## கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாக தொழில் செய்வதற்கு வழிவகுத்து தந்தவர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா என பருத்தித்துறை கொட்டடி நகர கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சுகிர்தராசா தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகர கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்திற்கு அருகாமையில் நேற்றைய தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு பட்ட இடர்பாடுகளை எதிர்கொண்டிருந்தோம் அக்கால கட்டங்களிலெல்லாம் எமக்காக குரல் கொடுத்தவர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமேயொழிய வேறு ஒருவருமல்ல.

அதுமட்டுமன்றி எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டும் உயர்த்தும் பொருட்டும் பல்வேறு திட்டங்களை வகுத்து அவற்றை திறம்பட செயற்படுத்தியவர் டக்ளஸ் தேவானந்தர் என்றும் சுட்டிக்காட்டினார்.

இம் மக்கள் சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பான கருத்துக்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எடுத்து விளக்கினார்.

இதில் ஈ.பி.டி.பியின் வடமராட்சி பிரதேச அமைப்பாளர் சிறிரங்கேஸ்வரன், ஈ.பி.டி.பியின் வடமராட்சி கரையோர இணைப்பாளர் ரட்ணகுமார் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# வாகனம் மோதி சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் வீதியைக் கடக்க முயன்ற சிறுவன் ஒருவனை பிக்கப் ரக வாகனம் மோதியதில் அச்சிறுவன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாவாந்துறையைச் சேர்ந்த மரியதாஸ் றிசான் (வயது - 11) என்ற நாவாந்துறை வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவனே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

நாவாந்துறையிலிருந்து நாவற்குழியிலுள்ள அப்பம்மாவின் வீட்டிற்கு தாயாருடன் சென்ற பிரஸ்தாப மாணவன் பேருந்திலிருந்து இறங்கி ஏ-9 வீதியை கடக்க முற்பட்டபோதே இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் 11.30 மணியளவிலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாக விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சிங்கள தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வருடம் தோறும் வலய மட்டத்தில் நடாத்தப்பட்டு வரும் சிங்கள தினப் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடமிருந்து வலயக் கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

சிங்கள மொழியிலான பேச்சு, வாசிப்பு, எழுத்தாக்கம், நாட்டார்பாடல் ஆகிய போட்டிகளுக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன. இப்போட்டிகள் வலய மட்டத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதால் மேற்படி தினத்திற்கு முன்னர் வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவப் பிரிவுக்கு விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

வாசிப்புப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள், தமது தரத்திற்கு சிற்ப சிங்கள மொழி வாசிப்பு நூல்களைக் கொண்டு வரவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (06)

## மூவருக்கு விளக்க மறியல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிமன்றத்தில் சந்தேகநபர்கள் மூவர் நேற்று ஆஜர்படுத்தப்பட்டபோது நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் இந்த விளக்கமறியல் உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

கொடிகாமம் - ஏ9 வீதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் விபசாரம் இடம்பெற்றுவருவதாகக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் இரவு விடுதியைச் சுற்றிவளைத்த கொடிகாமம் பொலிஸார் மூன்று சந்தேகநபர்களை கைது செய்தனர்.

வரணியைச் சேர்ந்த விடுதியின் உரிமையாளர், வவுனியாவைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் மற்றும் நுவரெலியாவைச் சேர்ந்த இளைஞர் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கைது செய்யபபட்ட அவர்களிடமிருந்து ஆபாச இறுவட்டுக்கள் மற்றும் அனுமதியின்றி விற்பனை செய்யப்பட்ட அரச மதுபானங்கள் ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

இந்நிலையில், குறித்த சந்தேகநபர்களை இன்று சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியபோது, கொடிகாமம் பொலிஸார் சந்தேகநபர்கள் மீது மூன்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

ஆபாசப்பட இறுவட்டுக்களை தம்வசம் வைத்திருந்தமை மற்றும் அனுமதியின்றி அரச மதுபானத்தை விற்பனை செய்தமை ஆகிய குற்றங்களுக்காக நீதிமன்றத்தால் இரு ஆண்களுக்கும் தலா ஒரு இலட்ச ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

மேலும், விபசாரம் நடத்திய வழக்கில், குறித்த சந்தேகநபர்கள் மூவரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உவர் நீர் தடுப்பு அணைக்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

(பூநகரி)

கடல் நீர் உள்வருவதிலிருந்து பூநகரி மேற்குப் பிரதேச விவசாய நிலங்களைப் பாதுகாப்பதற்கான உவர் நீர் தடுப்பு அணையை நீர்மாணிக்கும் பணிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

முதற்கட்டமாக குமுழமுனை வடக்கு வண்ணப்பிட்டியிலிருந்து கிராஞ்சிக்கான ஆற்றுப்பகுதி வரை சுமார் ஏழு கிலோ மீற்றர் நீளத்துக்கு இவ்வணை நிர்மாணிக்கப்படவுள்ளது.

சுமார் 20 ஆண்டுகளாக இந்த தடுப்பு அணையை நிர்மாணித்து தருமாறு பூநகரி தெற்கு விவசாயிகள் விவசாயத் திணைக்களத்திடமும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையிடமும் வலியுறுத்தி வந்த நிலையில் தற்சமயம் இப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குமுழமுனை கமக்காரர் அமைப்பின் உறுப்பினர் மத்தேசுப்பிள்ளை செபமாலை தெரிவித்தார்.

இத்திட்டத்தை முன்னரே ஆரம்பித்திருந்தால் பல ஆயிரணக்கான நெற் செய்கை நிலங்கள் தரிசாவதைத் தடுத்திருக்கலாமென அவர் குறிப்பிட்டார்.

கடல் பெருக்கெடுக்கும் காலங்களில் உவர் நீரின் வருகையானது நீண்ட காலச் செய்கை பண்ணப்பட்டு வந்த எமது நெற்செய்கை நிலங்களை விட்டு இடம்பெயரச் செய்துள்ளது. இந்த நிலையில் தொடர்வது இடை நிறுத்தப்படவேண்டும் என அவர் கூறினார்.

கடற்கரையை அண்டியதாக பூநகரி பிரதேசத்தை சூழவுள்ள அனைத்து வயல் நிலங்களும் இந்த ஆபத்தை எதிர்கொண்டுள்ளமையால் இத்திட்டத்தை விரைந்து முன்னெடுப்பது அவசியமென அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## ஏழாலையில் விபத்து

(யாழ்ப்பாணம்)

ஏழாலையில் நேற்று இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

காலை 8.30 மணியளவில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் விசுவமடு றெட்பானாவைச் சேர்ந்த ஆரு. கரிகரன் (வயது - 21) என்ற இளைஞரே படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

## ஓய்வூதிய முரண்பாட்டிற்கு தீர்வு

(யாழ்ப்பாணம்)

இளைப்பாறிய ஓய்வூதியர்களுக்கான ஓய்வுதிய முரண்பாடு நீக்கல் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார்.

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் கடந்த 6ஆம் திகதிக்குரிய 5/2015 இலக்க ஓய்வூதியச் சுற்று நிருபத்திற்கமைய 01-01-2006 இற்கு முன்னர் அரச சேவையிலிருந்து இளைப்பாறிய ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய முரண்பாடு சிக்கல்ளே தீர்க்கப்பட்டு வருகின்றன.

குறித்த திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அவ்வுத்தியோகத்தர்களது இறப்பின் பின் தற்போது விதவை, அநாதை ஓய்வூதியம் பெறுவோர், தங்களது பிரிவிற்கான கிராம சேவையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள படிவத்தை பூரணப்படுத்தி எதிர்வரும் புதன்கிழமைக்கு முன் கிராம சேவையாளரின் ஒப்பத்துடன் அப்படிவத்துடன் என்.எவ்.சி. ஓய்வூதியர் அடையாள அட்டை அறிமுகப்படுத்துவற்கேதுவாக தேசிய அடையாள அட்டைப் பிரதி, வங்கிப் புத்தகத்தின் பிரதி என்பவற்றையும் ஒப்படைப்பதுடன் தேசிய அடையாள அட்டைப் பிரதியில் வலது, இடது கைப்பெருவிரல் அடையாளங்களையும் இட்டு கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்படுவதனையும் உறுதிப்படுத்திக்

# பசுபதி நிதியம் அங்குரார்ப்பணம்





(ஊரெழு)

ஊரெழுவில் அமரர் சின்னட்டியன் பசுபதி ஞாபகார்த்தமாக பசுபதி நிதியம் யாழ். மாவட்ட முதியோர் பேரவையின் தலைவர் இ. மயில்வாகனம் தலைமையில் அண்மையில் இடம்பெற்

இந்நிகழ்வில் அமரர் கல்வி கற்ற ஆரம்ப பாடசாலையான ஊரெழு கணேச வித்தியாலய பரிசளிப்பு விழாவிற்காக பதினையாயிரம் ரூபாவும் ஊரெழு நாவலம்பதி ஞானவைரவர் திருப்பணிக்கு பத்தாயிரம் ரூபாவும், ஊரெழு வீரகத்தி விநாயர் ஆலயத்துக்கு பத்தாயிரம் ரூபாவும் ஊரெழு வளர்பிறை பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டிக்கு பத்தாயிரம் ரூபாவும், ஊரெழு வளர்பிறை சன சமூக நிலையம் சார்ந்த பகுதியில் உள்ள தரம் ஐந்தாம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மூவாயிரம் ரூபாவும் க. பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாவும் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கு ஐயாயிரம் ரூபாவும் வைபவ ரீதியாக நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் துறைத் தலைவர் இ. இரட்ணம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் எஸ். லலீசன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஓய்வுநிலை அதிபர் கே. கணபதிப்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர். (08)





புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பலகாலமாக எவ்வித கொடுப்பனவுகளும் இல்லாமல் பணியாற்றிக் கொண்டிருக்கும் 10 முன்பள்ளி ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காக தனது பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையின் கீழ் துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்தார் வட மாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன். (40)

## பாடசாலைகளின் குடிநீர் பரிசோதிப்பு நீர்வழங்கல் சபையால் நிதி வழங்கல்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் உள்ள குடிநீர்க் கிணறுகளில் கழிவோயில் கலந்திருப்பது தொடர்பில் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினால் நீர்ப்பரிசோதனை மேற்கொள்வதற்கான கொடுப்பனவு மேற்படி சபைக்கு வலயக் கல்விப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வலயக்கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள பின்வரும் பாடசாலைகளின் குடிநீர்ப பரிசோதனை மேற்கொள்வதற்காகவே, தலா ஒருபாடசாலைக்கு 1443 வீதம் பதினாறு பாடசாலைகளின் கொடுப்பனவுகள், அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அப்பாடசாலைகளாவன,

கோட்டைக்காடு அ.த.க.பாடசாலை, சங்குவேலி அ.த.க.பாடசாலை, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், ஈவினை அ.த.க.பாடசாலை, ஸ்கந்தவரோதய ஆரம்ப பாடசாலை, சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித் தியாலயம், புன்னாலைக் கட்டுவன் மகாவித்தியாலயம், புதுமடம் றோ.க.த.பாடசாலை, ஏழாலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை, ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம் ஏழாலை சைவமகாஜனா வித்தியாலயம், உடுவில் மல்வத்தை றோ.க.த. பாடசாலை, ஏழாலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை, ஏழாலை புனித இசிதோர் றோ.க.த. பாடசாலை, புன் னாலைகட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயம் என்பனவாகும். (06)

## "கலை நிலம்" நூல் வெளியீடு

(வலிகாமம்)

வலி.தெற்கு (உடுவில்) பிரதேசசெயலகத்தின் கலாசாரப் பேரவையும், வடமாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சும் இணைந்து நடாத்திய பிரதேசத்தின் குறிப்பிடத்தக்க சேவை புரிந்த பெரியோர்களைக்கௌரவிக்கும் நிகழ்வும், பிரதேசத்தின் சிறப்பினைப்பிரதிபலிக்கும், பிரதேச மலரான "கலைநிலம்" புத்தக வெளியீடும் அண்மையில் இணுவில் சிவகாமியம்மன் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றன. (48)

## உதவிப்பணம் வழங்கல்

(வரணி)

வரணிப்பிரசேத்தில் நலிவுற்றவர்கள், விதவைகள் மற்றும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கான மாதாந்த உதவிப்பணம் தற்போது வரணி அஞ்சலகத்தில் வழங்கப்படுகிறது.

உரிய பயனாளிகளை தவறாது பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி அஞ்சலகத்தில் எட்டு கிராம சேவகர் பிரிவு மக்கள் உதவிப்பணம் பெற்று வரு கின்றனர்.

மேலும் இவ் உதவிப்பணம் 70 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களுக்கே வழங்கப்படுகிறது. எழுபது வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கான 2000 ரூபா இன்னும் வழங்கப்படவில்லை. (150)

## தேடல் அரங்கியலின் மூன்றாவது நிகழ்வு நாளை

தேடல் நாடகமும் அரங்கியலுக்குமான பகிர்வுக்களம் மூன்றாவது நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தே.தேவானந்த் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பா.நாடகங்கள் ஒரு பார்வை எனம் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா உரையாற்றவுள்ளார்.


ஈழத்தின் நாடக வரலாற்றில் முக்கியமான நாடகங்களாகக் குறிப்பிடப்படுகின்ற மஹாகவி உருத்திரமூர்த்தி எழுதிய "கோடை", "புதியதொரு வீடு", போன்ற நாடகங்களும் கலாநிதி கவிஞர் முருகையன் எழுதிய "வெறியாட்டு", "உயிர்த்த மனிதர் கூத்து", "எல்லாம் சரிவரும்" போன்ற நாடகங்கள் பற்றிய தனது பார்வையைக் குறிப்பிட்டு அதன் கட்டமைப்பு கவிதையாப்பமைப்பு போன்ற விடயங்களையும் காட்சிப் பெறுமானங்களையும் விரிவாக விளக்குவதாக இந்தக் கருத்தரங்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

செயற்றிறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்படும் இந் நிகழ்வில் நாடக அரங்கியல் துறை சார்ந்த மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் பங்கு பற்ற முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிமனை திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் புதிய மாகாண பணிமனை நேற்றுமுன் தினம் நண்பகல் 12 மணியளவில் இலக்கம். 340, ஆனைப் பந்தி, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம் என்னும் சம்பிரதாய பூர்வமாக பால் பொங்கல் நிகழ்வு இடம் பெற்றது.



இது வரை காலமும் யாழ்ப்பாணம் கைதடியில் இயங்கி வந்த மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம் எதிர்வரும் ஆவணி மாதம் முதலாம் திகதி முதல் புதிய பணிமனையில் தமது பணிகளை ஆரம் பிக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நிகழ்விற்கு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் டி.சிவராசலிங்கம் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (40)

## மாணவிகளுடன் சேஷ்டை ஆசிரியருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

மாணவிகளுடன் அங்க சேஷ்டைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஆசிரியர் ஒருவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மருதங்கேணி குடத்தனை பகுதி பாடசாலையொன்றில் கற்பிக்கும் இவ் ஆசிரியர் அங்கு கல்விபயிலும் 7ஆம், 8ஆம் ஆண்டு மாணவிகளுடன் சேஷ்டையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு பெற்றோர் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து செயலகத்தின் அதிகாரிகள் இவ்விவகாரத்தை பருத்தித்துறை பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இதனை அடுத்து குறித்த சந்தேக நபரான ஆசிரியரை கைது செய்த பொலிஸார் நேற்றுமுன்திகம் நீதிமன்றில் ஆஜர் செய்தபோது நீதவான் இந்த விளக் கமறியல் உத்தரவை பிறப்பித்தார். (18)

## தாளையம்பதி துர்க்காதேவியின் வருடாந்த மஹோற்சவம்

சாவகச்சேரி விளைவேலி தாளையம்பதி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவப் பெருவிழா அடுத்தமாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 12 தினங்கள் இடம்பெறவுள்ளன.

திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றமும், 9 ஆம் திருவிழாவான வேட்டைத்திருவிழா அடுத்தமாதம் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளதுடன் மறுநாள் புதன்கிழமை இரவு 8 மணிக்கு சப்பறத்திருவிழாவும் நடைபெறும்.

11 ஆம் திருவிழாவான தேர்த்திருவிழா அடுத்தமாதம் 13 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெற்று மறுநாள் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம் பெற்று மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. பூங்காவன உற்சவம் மறுநாளான சனிக்கிழமை இரவு 08.30 மணிக்கு இடம்பெறும். தினமும் காலை 05.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசையுடன் நிறைவு பெறும். பின்னர் மாலை 5 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி இரவு 9 மணிக்கு நிறைவு பெறும். இம் மஹோற்சவப் பெருவிழா ஆலய தர்மகர்த்தா ம.பரமேஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ)

## கர்ப்பிணிகளுக்கான சத்துணவாக மீன்ரின்

(யாழ்ப்பாணம்)

கர்ப்பிணிப் பெண்களுக்கான சத்துணவு விநியோகத்தில் SLS தரச் சான்றிதழ் பெற்ற eeg fish மீன்ரின்னும் உள்ளடக் கப்பட்டிருப்பதாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

"உத்தமப்" எனும் போசாக்கு நிகழ்ச்சித்திட்டமொன்றை மகளிர விவகார அமைச்ச நாடு முழுவதும் தற்போது மேற் கொண்டுள்ளது.

இத்திட்டத்திற்கிணங்க குடா நாட்டில் விநியோகிக்கப்படும் சத்துணவுகளில், இந்த மீன்ரின்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதாக இக்கூட்டுத்தாபனத்தின் பருத்தித்துறை பிராந்திய முகாமையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வித இரசாயன பதார்த்தங்களோ கலப்படங்களோ அற்றதாக உறுதிப்படுத்தப்பட்ட இந்த மீன்ரின் தற்சமயம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கர்ப்பிணித் தாய் மார்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. (அ)

நீ எதை முடியாது என்று சொல்கிறாயோ, அதைத்தான் இன்னொருவர் செய்து கொண்டிருக்கிறார். - லௌகீகக் கவிராயர்-

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## ஊடகப் பொறுப்பு என்பது என்ன?

உலகளாவிய ரீதியில் நாம் இன்று அறிந்து கொள்ளும் செய்திகள் எல்லாம் ஒருதலைப்பட்சமானவையே. பி.பி.சி. ஆகட்டும், சி.என்.என். ஆகட்டும் மற்றுமற்றும் உலகளாவிய செய்திச் சேவைகள் ஆகட்டும் எல்லாமே அமெரிக்கா, பிரிட்டன் உட்பட்ட மேற்கு நாடுகளின் கண்ணோட்டத்தை ஊதிப் பரப்புபவையே.

அவை தரும் செய்திகளிலிருந்தே நம் கருத்துக்கள் உருவாகின்றன. அரபு நாடுகளிலும் ஆபிரிக்க நாடுகளிலும் மக்களைப் பாதுகாத்து, சுதந்திர ஜனநாயகச் சூழலை மேற்கு நாடுகள் அங்கு ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன போன்ற கதைகளுக்குள் நாமும் சிக்கிக் கொள்கிறோம்.

உலகளவில் தகவல் ஏகாதிபத்தியம் இவ்வாறு நடந்து கொண்டிருக்கிறதென்றால், உள்ளூரிலும் ஒரேவிதமான தகவல்களை விழுங்கியபடிதான் நாம் இருக்கிறோம். நீரோடுகிற திசையின் போக்கில் பொம்மைக் கப்பல்களை விட்டே பழக்கப்பட்டவை நமது ஊடகங்களும். மக்களிடம் விற்கக் கூடிய சரக்காக விறுவிறுப்புச் செய்திகளை மட்டும் எழுதிக் கொண்டிருப்பதில் களிபேருவகை கொள்ளக் கூடியவை.

ஜனநாயகத்தின் காவலர்களாக, மாற்றத்தின் தூதுவர்களாக இருக்க வேண்டிய ஊடகங்கள் மக்களது உணர்ச்சிகளை உசுப்பி, அவர்களை அடுத்த கட்டத்துக்கு நகர விடாமல் தடுத்து அப்பட்டமாக, லாபத்தைத் தேடுவதையே ஒரே குறிக்கோளாக்கி விட்டன.

அரசதிகாரத்தின் மூன்று தூண்களாக உள்ள ஆட்சிமன்றம், நாடாளுமன்றம், நீதிமன்றம் ஆகியவற்றோடு, ஊடகம் நான்காவது தூணாகக் கருதப்படுகிறது. இவற்றில் முதல் மூன்று தூண்களும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏதாவது ஒரு வகையில் மக்களுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டவை.

ஆனால், இந்த மூன்றையும் கேள்வி கேட்கக்கூடிய நான்காவது தூணாகிய சுதந்திர ஊடகம், எந்தவகையிலும் மக்களுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கவில்லை என்பதுதான் வேடிக்கை! அதனால் எப்படி வேண்டுமானாலும் மக்களைத் தவறாக வழிநடாத்துவதையும் ஒரு உரிமையாக எடுத்துச் செயற்பட முடிகிறது.

ஊடகம் தன் மீது நம்பிக்கை வைத்துள்ள மக்களுக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டதாக இருக்க வேண்டாமா? அந்தப் பொறுப்பை ஊடகங்கள் தாங்களாகவே உருவாக்கிக் கொள்ள வேண்டாமா?

அந்த ஜனநாயகக் கடமையைத் தட்டிக்கழிக்கின்றன என்பதே நாம் கண்டுகொண்டிருப்பது. வறிய நிலையில் வாழ்வாதாரங்கள் இல்லாத நிலையில் மக்கள் வாடுகிறார்கள் என்பதான யதார்த்த நிலைமைகளை இவை வெளிப்படுத்துவதில்லை. அல்லலுறும் அடித்தள மக்களின் குரலாய், அவர்களின் தேவைகளைப் புரிந்து வெளிப்படுத்துவதற்கு மாறாக, சமுதாயத்தில் மிகச் சிறியதொரு பகுதியினரின் நலன்களைப் பாதுகாக்கிற, அவர்களது ரோசங்களையும் வீம்புகளையும் முன்னிலைப்படுத்துகிற வேலையைத்தான் இந்த ஊடகங்கள் செய்கின்றன.

மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு மேலாக அரசியல் உணர்ச்சிகரச் செய்திகளையே ஊடகங்கள் பிரதானப்படுத்துவதைக் கவனிக்க முடியும்.

அதேபோல, எந்த நடைமுறைச் சாத்தியமான கோரிக்கைகளையும் மேலெழுப்பாமல் வெறும் உணர்ச்சிகரமாகப் பொங்கும் எதிர்ப்புக் கோஷங்களிலேயே மக்களை ஏமாற்றுகின்றன; மீண்டும் வீண் கனவுகளை மக்களுக்கு ஊட்டும் விதமான உணர்ச்சித் தீவிரங்களையே பிரபலப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

நாட்டு மக்கள் மேலும் மேலும் ஜனநாயக உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டவர்களாக இருப்பதை விட, அவர்களை வெறும் ஆவேசத்தில் பொங்கிக் கொண்டு, அழுத்திச் சுமை சுமப்பவர்களாக மாற்றுவதற்குத்தான் இந்த ஊடகங்கள் செயல்படுகின்றன.

ஊடகங்களின் சுதந்திரத்திற்கு முன்பாக ஊடகங்களிடமிருந்து சுதந்திரத்தை நாம் பெற்றாக வேண்டும்.

# மைத்திரி - மகிந்த ஆட்சியே இந்த நாட்டிற்குத்தேவை

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இணைந்த ஆட்சியே இந்நாட்டிற்குத் தேவையென, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாரஹென்பிட்டி அபயராம விஹாரையில் நேற்று நடைபெற்ற செய்தியர் சந்திப்பிலேயே, அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்-

"இந்த நாட்டின் தலையெழுத்தை மாற்றியெழுதும் தீர்மானமிக்க ஒரு தேர்தலே, எதிர்வரும் ஆகஸ்ட் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதன்போது மைத்திரி - ரணில் ஆட்சியா அல்லது மைத்திரி - மகிந்த ஆட்சியா தேவையென்பதை, இந்நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும்.

இந்த நாட்டின் தேசியத்திற்கும், எதிர்காலத்திற்கும், சௌபாக்கியத்திற்கும், மைத்திரி - ரணில் ஆட்சியை விட, மைத்திரி - மகிந்த ஆட்சியே அவசியமாகும். இதனை உணர்ந்தவே, இந்நாட்டு மக்கள் ஒன்றுதிரண்டுள்ளனர்" என தெரிவித்தார்.

# நகைத்திருட்டில் ஈடுபட்ட தம்பதியினர் கைது

(வவுனியா)
வவுனியாவில் பல்வேறு நகைத் திருட்டு சம்பவங்களில் ஈடுபட்ட தம்பதியினரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இடம்பெற்ற கல்யாண நிகழ்வுகள், கோவில் திருவிழாக்கள் மற்றும் சனநெரிசல் மிக்க இடங்களில் நகை திருட்டில் ஈடுபட்ட பெண்ணும் அவருக்கு உதவிய கணவருமே இவ்வாறு வவுனியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்று வவுனியா சுகாதார பணிமனைக்கு சிகிச்சைக்காக கடந்த ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வருகைதந்த போது பெண் குழந்தை ஒன்றின் கழுத்திலிருந்த தங்கச்சங்கிலி திருடப்பட்டது.

அதேபோன்று, கடந்த 5 ஆம் திகதி வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற திருமண நிகழ்வில் 2 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகள் திருடப்பட்டிருந்தன.

இந்த திருட்டுச் சம்பவங்கள் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து வவுனியா பொலிஸாரால் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் மூலம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தம்பதியினர் கிளிநொச்சியில் வைத்து கைது செய்தததுடன், அவர்களிடம் இருந்து தங்க நகைகள், பணம் என்பனவும் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான கணவன், மனைவி ஆகிய இருவரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வுள்ளதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜனநாயகக்கட்சி தனித்துப்போட்டி

# கொழும்பில் சரத்பொன்சேகா கம்பஹாவில் அனோமா பொன்சேகா

(கொழும்பு)
ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல சரத் பொன்சேகா எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளார்.

பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா, ஜனநாயகக் கட்சியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட உள்ளதாக அந்த கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த மானவடு கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளும் ஊழல் மற்றும் மோசடியாளர்களுக்கு வேட்புரிமை வழங்கியுள்ளதால், ஜனநாயகக் கட்சி தேர்தலில் தனித்து போட்டியிடும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு 90 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுபானசாலைகளுக்கு இன்று மூடுவிழா

(கொழும்பு)
நாட்டில் அதிகரித்துவரும் போதைப் பாவனையை கட்டுப்படுத்தும் வகையில் விசேட திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அந்த வகையில் நேற்று முதல் ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதை நிவாரண மாதத்தை முன்னிட்டு இன்று நாடு பூராகவும் உள்ள மதுபானசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவித்தலை இலங்கை மதுவரித் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. இதேவேளை போதையற்ற நாடொன்றை உருவாக்குவதற்கு இளைஞர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்புவிடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் மா அதிபர் நாடுமுழுவதும் பயணம்

பொலிஸாரின் தேர்தல் கடமைகளை கண்காணிப்பதற்கு பொலிஸ் மா அதிபர் என்.கே. இளங்கக்கோன் நாடு முழுவதிலும் பயணம் செய்யவுள்ளார்.

தேர்தல் காலத்தில் எவ்வாறு கடமையாற்ற வேண்டும் என்பது குறித்து பொலிஸ் மா அதிபர், பிராந்தியங்களுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

உரிய முறையில் சட்டத்தை அமுல்படுத்தாத அதிகாரிகள் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

முதல் கட்டமாக பொலிஸ் மா அதிபர் இளங்ககோன், மத்திய மாகாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

பொலிஸ் மா அதிபரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பொலிஸ் தலைமையகத்தில் தேர்தல்கள் செயலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அளுத்கம கலவர வழக்கு மனுவை விசாரிக்க நீதிமன்றம் தீர்மானம்

(கொழும்பு)
அளுத்கம கலவரத்தின் போது பொலிஸார் கலவரத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளதாக நீதிபதி பிரசாத் டெப் அறிவித்துள்ளார்.

தர்காநகர் கலவரத்தை தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் பாரிய உயிர் சொத்துச் சேதம் ஏற்பட்டதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

எனினும் கலவரத்தை தடுக்க பொலிஸார் கடும் முயற்சி எடுத்ததாக அரச சட்டத்தரணி வாதிட்டார்.

கலவரத்துடன் தொடர்புடைய 47 பேர் மற்றும் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 300 பேர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

முன்வைக்கப்பட்ட கருத்துக்களை பரிசீலித்த உயர் நீதிமன்ற மூன்று நீதிபதிகள் குழு, மனுவை 2016 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானித்துள்ளது.

# மன அழுத்தம்

**பொதுவாகவே மன அழுத்தம் பலவித நோய்களை விளைவிக்கிறது என்று நம் அனைவருக்குமே தெரிந்தாலும் நம்மையறியாமலேயே ஏதோ ஒரு ஓட்டத்துக்குள் நுழைந்துவிடுகிறோம் - ஆசைகள், ஆர்வங்கள் நிறைவேற்ற வேண்டிய குறிக்கோள்கள் என்று நம்மை ஓட வைக்கும் இந்தப் பட்டியல் வெகு நீளம். ஆனால் ஒரு நிமிடம் நின்று நிதானித்து மன அழுத்த சுழல் காற்றில் சிக்காமல் படிப்படியாக நமது குறிக்கோள்களையும் ஆசைகளையும் நிறைவேற்றிக் கொள்ளலாமே?**

அருணா ஸ்ரீனிவாசன்

"வரிக்குதிரைகளுக்கு ஏன் அல்சர் போன்ற வியாதிகள் வருவதில்லை - Why Zebras don't get Ulcers" என்ற புத்தகத்தை எழுதிய றொபேர்ட் எம் சபோல்ஸ்கி (Robert M Sapolsky) என்ற ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகப் பேராசிரியரின் ஆராய்ச்சி, மன அழுத்தத்தினால் இதயக் கோளாறுகள், நீரிழிவு, நரம்புத்தளர்ச்சி, கான்சர் போன்ற உடல் உபாதைகள் வருகின்றன என்று தெரிவிக்கிறது.

அலுவலகத்தில் ஏற்படும் எரிச்சல் அல்லது தகாத வார்த்தைகள் போன்றவை நம் காதுகளில் விழுந்தவுடனேயே அவை மூளையில் உள்ள செல்களை பாதிக்கின்றன. க்ளூகொகோர்டிகொய்ட்ஸ் (Glococorticoids) என்ற ஓமோன் உற்பத்தி அதிகரித்து உபாதைகளை விளைவிக்கிறது என்றும் இந்த ஆராய்ச்சி விளக்குகிறது.

பலர் நினைப்பதுபோல் மன அழுத்தம் என்பது ஒரு மன நிலையோ அல்லது ஒரு உணர்ச்சியோ அல்ல. தாங்கள் எதிர்நோக்கும் சவால்களையும் சந்திக்கும் சூழ்நிலைகளையும் ஒருவர் மனதால் அணுகும் முறையும், எதிர்கொள்ளும் முறையும்தான் இப்படி மன அழுத்தமாக வெளிப்படுகிறது என்று மன நல மருத்துவர்கள் கூறுகின்றனர். "மன அழுத்தத்திற்கு பல காரணங்கள் உள்ளன." என்று குறிப்பிடுகிறார் பி.பி. பக்ஷி என்ற மன நல மருத்துவர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இந்தக் காரணங்கள் வேறுபடும். ஒவ்வொருவரும் தாங்கள் வளர்ந்த சூழ்நிலை அல்லது மனத் திண்மை போன்றவற்றை பொறுத்து ஒரே விதமான காரணம் பலவித வித்தியாசமான விதங்களில் விளைவுகளை ஏற்படுத்தும்.


உதாரணமாகக் காலை வேலை அவசரம் அல்லது ஒரு குறிப்பிட்ட காலகெடுவுக்குள் முடிக்க வேண்டும் என்று கட்டாயம் போன்றவை சிலருக்கு அழுத்தம் கொடுக்கும். "ஆனால் இது போன்ற அழுத்தங்கள் எனக்கு ஒரு பொருட்டே அல்ல" என்கிறார் நிர்வாகத்துறையில் ஆலோசகராக இருக்கும் ஒரு பெண். "இது போன்ற அழுத்தங்கள் ஒரு சவால் போல. நம் மூளைக்கும் சுறுசுறுப்புக் கிடைக்கும். தவிர இவை ஆக்கபூர்வமான அழுத்தங்கள். ஒரு குறிக்கோளை நோக்கிச் செல்கிறோம் என்று மனதில் ஒரு ஆர்வம் அல்லது கடமையுணர்வு இருக்கும். சாதிக்கும் உணர்வும் இருக்கும். அதனால் இது போன்ற அழுத்தங்கள் உடல் நிலையை பாதிக்கும் என்று கூற மாட்டேன். என்னைப் பொறுத்தவரையில் மன அழுத்தம் என்பது எந்த ஒரு முடிவும், என்ன ஆகும் என்று தெரியாத ஒரு சூழ்நிலை. ஒரு uncertainty அல்லது vagueness நிலை எனக்கு ஏகப்பட்ட மன அழுத்தத்தைக் கொடுக்கும்." என்கிறார் இவர். இவரது தந்தை சமீபத்தில் காலமானபோது மிகுந்த மன அழுத்தம் இருந்தது என்கிறார் இவர்.

சமூகச் சூழ்நிலைகளில் அழுத்தம் உண்டாக்கும் காரணங்களில், இன்னும் அதிகம் சம்பாதிக்க வேண்டும் அல்லது ஆசைப்படுவதெல்லாம் கையில் கிடைக்க வேண்டுமென்ற மனோபாவமும் மிக முக்கியமான ஒன்று என்று கருதப்படுகிறது. தங்கள் தேவைகளைப் பெருக்கிக் கொண்டு, இன்னும் வேண்டும் அது வேண்டும் இது வேண்டும் என்று ஆசை பேராசையாக உருவெடுக்கும் இந்நாட்களில் இது போன்ற ஆடம்பரப் பொருட்களின் பின்னால் ஓடும் மனோபாவத்தால் பலர் மன அழுத்தத்தில் விழுகின்றனர்.

உளவியல் பேராசிரியராக இருந்து ஓய்வுபெற்ற திரிவேதி, போட்டி மனப்பான்மை மன அழுத்தத்திற்கு வெகுவாக காரணம் என்கிறார். ஆனால் பொருள் திரட்டுவதற்காக, விரும்பியதை வாங்க வேண்டும் என்பதற்காக இப்படி உடல் உபாதைகளை வரவழைத்துக் கொள்ள வேண்டுமா?

"கட்டாயமாக. வேறு வழி? என் மகளுக்கு நல்ல வாழ்க்கையை நான் கொடுக்க வேண்டாமா? நாளைக்கு அவளுக்கு என்று நான் ஏதாவது விட்டுச் செல்ல வேண்டாமா?" என்கிறார் நிர்வாக ஆலோசகரான தாய்.

மன அழுத்தத்தினால் சில சமயம் நல விளைவுகளும் உண்டு. "இன்று மிகவும்



பிரபலமாகவும் வெற்றிகரமாகவும் இருக்கும் பலர் இப்படி ஒரு அழுத்தத்தின் உந்துதலில்தான் பல வெற்றிப் படிகளைத் தாண்டியுள்ளார்கள்" என்கிறார் டாக்டர் பக்ஷி. இந்த மாதிரி மனோபாவம் உள்ளவர்களுக்கு மன அழுத்தம் ஒரு தூண்டுகோல். இது இல்லையென்றால் இவர்கள் வேலை செய்யும் திறன் குறைந்துவிடும்... என்று . இவர் விளக்குகிறார்.

"சிலருக்கு ஓய்வு என்பதே பிடிக்காது. அதேபோல் வேலை செய்யும் இடங்களில் இவர்களது ஆர்வத்துக்கும், மனத் தேவைக்கும் சவால்கள் இல்லாமல் இருக்கும்போது இவர்கள் விரைவிலேயே சலித்து விடுவார்கள். அதுவே கூட அவர்களுக்கு வேறு விதமான மன அழுத்தத்தைக் கொடுக்கும்" என்கிறார் பக்ஷி. மலையேறுவது, பந்தயங்களில் பங்கு பெறுவது போன்ற வீர சாகச செயல்கள் செய்பவர்கள் இது போன்ற அழுத்தம் விரும்பிகள் என்கிறார் இவர். workaholic எனப்படும் வகையைச் சேர்ந்தவர்கள் இப்படிப்பட்ட அழுத்தத்தை விரும்புவார்கள். சவால்களும், சாகசங்களும் சிலருக்கு விருப்பமாக இருப்பதற்கு காரணம், அந்த சவால்களைத் தீர்க்கும் ஆர்வமும், சாதிக்கும் ஆர்வமும்தான். நமக்குப் பிடித்த எதையும் செய்யும்போது அது டென்ஷனாக இருந்தாலும் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தாது.

ஆனாலும் சில சமயம் அப்படிப்பட்ட பொசிட்டிவ் மன அழுத்தங்களும் கூட உடல் நிலையை பாதிக்கும் என்கிறார் டாக்டர் திரிவேதி. அழுத்தம் நம்மை முன்னேற்றுகிறது என்று வைத்துக்கொண்டாலும், உடல் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதில் சந்தேகமில்லை என்கிறார் இவர். இந்த மாதிரி நபர்களுக்கு வேலையிலிருந்து ஓய்வு பெற்றவுடன் "சும்மா" இருக்கும் மன அழுத்தம் பாதிக்கும். இது பல விதத்தில் உடல் நலத்தைப் பாதிக்கும் என்பதோடு, வாழ்க்கையில் ஒரு பிடிப்பின்மையையும் உண்டாக்கும்.

மன அழுத்தத்திற்காக வேலையைத் தேடித் தேடிச் செய்து பழகியவர்கள் ஓய்வு பெற்றவுடன் தங்கள் காலுக்கடியில் கம்பளம் உருவப்பட்ட உணர்வில் தவிப்பார்கள்.

"எப்படி இந்த மன அழுத்தம் உடல் நிலையை பாதிக்கிறது? Fight or Flight என்ற முறையில் நம்முள் இயற்கையாகவே பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளன. ஏதோ ஒரு அழுத்தம் என்ற நிலை மூளையில் பதிவு செய்யப்பட அடுத்த நொடியில் இந்த பாதுகாப்புப் படை இயங்க ஆரம்பிக்கிறது. இதற்கு முக்கிய சேனாதிபதி, மூளைக்கு அடியில் இருக்கும் பிட்யூட்டரி சுரப்பி. ஓமோன்கள் உற்பத்தி செய்தபடி இருக்கும் என்டோக்ரின் (Endocrine) சுரப்பிகள் இப்போது இன்னும் வேகமாகவும் அதிகமாகவும் சப்ளை செய்ய ஆரம்பித்து இரத்த ஓட்டத்தில் கலக்கும். Stress Harmones எனப்படும் cortisol, epinephrine என்ற ஓமோன்கள் அதிக அளவில் சுரக்கும்போது அவை நமது உடலில் பல செயற்பாடுகளை பாதிக்கும். அல்சர், இரத்த அழுத்தம் போன்ற வியாதிகள் வர ஆரம்பிக்கும்." என விளக்குகிறார் டாக்டர் வர்மா.

வயிற்றுக்கும், நம் உணர்வுகளுக்கும் நேரடித் தொடர்பு உண்டு. வயிற்றைக் கலக்கும் டென்ஷன்களும், வயிற்றில் பட்டாம்பூச்சி பறக்கும் உணர்வுகளும் நமக்கு மிகப் பழக்கமானவையே. அதேபோல், அதிகம் பசியாகவோ அல்லது வேறு ஏதோ உடல் உபாதையில் இருந்தால்கூட, ஒரு சந்தோஷமான விஷயம் காதில் விழுந்தவுடன், அல்லது நமக்குப் பிடித்த நபரின் வருகை என்ற நிகழ்வுகள் நடக்கும்போது பசியோ உடல் உபாதையோ காணாமற் போய்விடும். இதனால், வயிற்றுப்புண் வியாதிக்கும் மன அழுத்தத்திற்கும் தொடர்பு உண்டு.

மன அழுத்தத்தால் கோபம் ஏற்பட்டு மூளையில் உள்ள இரத்த நாளங்கள் வெடித்து உயிருக்கு ஆபத்தான உதாரணங்கள் அநேகம். எக்கச்சக்கமாக இரத்த நாளங்கள் சுருங்கி விரியும் வேலையைச் செய்தால், இதயத்துக்கு இரத்தம் கொண்டு போகும் இரத்த நாளங்கள் சுருங்கிப்போகும்.

சுருங்கிய இரத்த நாளம் வழியாக இதயத்துக்கு இரத்தம் செல்லும் அளவு குறைந்துவிடும். நாளடைவில் இந்த இரத்த நாளம் மிகவுமே சுருங்கும்போது அது அந்த மனிதரின் முடிவில் கொண்டுவிடும்.

நாம் உண்ணும் உணவில் இருக்கும் சக்தியை புரதச் சத்தாகவும், க்ளூகோசாகவும் மாற்றும் ஸ்ட்ரெஸ் ஓமோன்கள் அளவுக்கதிகமாக சுரக்கும்போது வெல்ல அளவு இரத்தத்தில் அதிகமாகி நீரிழிவு உருவாகிறது.

பொதுவாகவே மன அழுத்தம் பலவித நோய்களை விளைவிக்கிறது என்று நம் அனைவருக்குமே தெரிந்தாலும் நம்மையறியாமலேயே ஏதோ ஒரு ஓட்டத்துக்குள் நுழைந்துவிடுகிறோம் - ஆசைகள், ஆர்வங்கள் நிறைவேற்ற வேண்டிய குறிக்கோள்கள் என்று நம்மை ஓட வைக்கும் இந்தப்பட்டியல் வெகு நீளம். ஆனால் ஒரு நிமிடம் நின்று நிதானித்து மன அழுத்த சுழல் காற்றில் சிக்காமல் படிப்படியாக நமது குறிக்கோள்களையும் ஆசைகளையும் நிறைவேற்றிக் கொள்ளலாமே?

கட்டாயம் முடியும் - மனது வைத்து ஒருமுகமாக செயற்பட்டால். நமது வாழ் முறையையும் உணவுப் பழக்கங்களையும் இன்னும் இயற்கையோடு ஒத்ததாகவும், உடல் நலக் கேடுகள் வராமலும் இருக்கும் வகையில் அமைத்துக் கொள்ளலாம். நம் ஓட்டத்தில் மன் அழுத்தம் தவிர்க்க முடியாததா? பரவாயில்லை. அவ்வப்போது நின்று நிதானித்து பயணப்படலாம். இளைப்பாறி, பயணத்தைத் தொடரலாம். மனதுக்கு பிடித்த விஷயங்களில் - இசை, நண்பர்களுடன் அரட்டை, அல்லது வழக்கமாகச் செய்யும் வேலையிலிருந்து ஏதும் வித்தியாசமான ஆர்வம், என்று பல வித மாற்று வழிகளில் நடுநடுவே மனதை செலுத்தலாம்.

American Heart Association செய்த ஒரு ஆராய்ச்சியில் atherosclerosis என்ற இதய நோயை வாழ் முறையை மாற்றிக்கொள்வதன் மூலமும் உணவுப் பழக்கத்தில் மாறுதல் செய்வதன் மூலமும் மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வரலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மருந்தே அவசியமில்லை.

உடல் பயிற்சிகளும் ஒரு அருமையான Stress busters. அந்த நிர்வாக ஆலோசகர் பெண், "சில சமயம் வீட்டில் தரையை நன்றாகத் துடைப்பது என் மன அழுத்தத்திற்கு சரியான வடிகாலாய் உணருகிறேன்." என்கிறார். யோகா, தியானம், ஏரோபிக்ஸ் என்று உடல் பயிற்சிகளும் பலவகை. ஒன்றுமேயில்லாமல் வெறுமே நடைப் பயிற்சி கூட சிறந்த பலனையளிக்கும். ●

# வெற்றிப்பாதையில் நாடு செல்ல அனைவரும் கைகோர்க்க வேண்டும்

## ஜனாதிபதி வேண்டுகோள்



(கொழும்பு)

பொறாமை, கோபம், குரோதம் என்பவற்றை ஒதுக்கிவிட்டு நட்புறவுடனும் கூட்டொருமைப் பாட்டுடனும் நாட்டை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்வதற்கு அனைவரும் கைகோர்த்துக் கொள்ள வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் இடம பெற்ற தேசிய இப்தார் நிகழ்வில் உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டின் அனைத்து இனங்களுக்குமிடையிலும் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பி கூட்டொருமைப் பாட்டுடனும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் செயலாற்றுகின்ற இலங்கை நாடொன்றை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தில் இத்தகைய மத வைபவத்தை அனைவரையும் சேர்த்துக் கொண்டு கொண்டாடுவது முக்கியமானதாகும் என்றார்.

இஸ்லாமிய மதத் தலைவர்களும் முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்தி இஸ்லாமிய பக்தர்கள் பெருந்தொகையானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். அத்துடன் தேசிய நல்லிணக்கத்திற்காக ஜனாதிபதி முன்னெடுக்கின்ற வேலைத் திட்டத்தை அவர்கள் பாராட்டினர். நாட்டின் சமாதானம், ஒற்றுமை என்பவற்றைப் போன்று தேசிய நல்லிணக்கத்திற்காகவும் அவர்கள் ஆசீர்வதித்தனர். அமைச்சர்கள், உறுப்பினர்கள், தூதர்கள் ஆகியோருடன் அதிதிகள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# வேட்புமனு வழங்காது இருக்க காரணங்கள் எதுவும் கிடையாது

## மேர்வின் சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

எனக்கு எதிராக ஊழல் மோசடி குற்றச் சாட்டுக்கள் கிடையாது. எனக்கு வேட்பு மனு வழங்காமல் இருப்பதற்கு காரணங்கள் எதுவும் கிடையாது என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நீதிமன்றில் வழக்குகள் தொடரப்படவில்லை, கட்சியின் ஒழுக்காற்று குழு என்னை குற்ற மற்றவர் என அறிவித்துள்ளது.

இதனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு எனக்கு வேட்பு மனு வழங்காமல் இருக்க எவ்வித காரணமும் இல்லை.

வேட்பு மனு வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கின்றேன். நான் உள்ளிட்ட சிலருக்கு வேட்பு மனு வழங்கப்படாது என செய்யப்படும் பிரசாரங்கள் வெறும் வதந்திகளாகும்.

வேட்பு மனு வழங்கப்படாது என இதுவரையில் எனக்கு எவ்வித அறிவிப்பும் வழங்கப்படவில்லை.

கடந்த காலங்களில் சுதந்திரக் கட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட காரணத்தினால் மூன்று குடும்ப உறுப்பினர்களை இழந்திருக்கின்றேன் என்றார்.

# ரணில் அதிகாரத்திற்கு வந்தால் சிங்கள இனம் இல்லாமல் போய்விடும்

## குணதாச அமரசிங்க கவலை

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மீண்டும் அதிகாரத்திற்கு வந்தால் எதிர்காலத்தில் இந்த நாட்டில் சிங்கள இனம் இல்லாமல் போய்விடும் என தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின் அமைப்பாளர் டாக்டர் குணதாஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.



தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்

நாட்டின் அதிகாரத்தை மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்க அவரை பிரதமராக்குவது சகல தேசிய சக்திகளதும் கடமையாகும்.

இந்த அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்ததுடன் வடக்கிலிருந்த இராணுவ முகாம்களை அங்கிருந்து அகற்றியது. புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது மற்றும் இந்த நாட்டில் மனித படுகொலை இடம்பெற்றதாக விக்கினேஸ்வரன் கூறிய வார்த்தைகளுக்கு உந்துசக்தி கொடுத்தது இவையனைத்தும் நாட்டை பிரிப்பதற்கே இந்த அரசாங்கம் ஒத்துழைப்பு கொடுத்து வந்தது. இவ்வாறான நிலையில் மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தால் எதிர்காலத்தில் இந்த நாட்டில் சிங்கள இனம் இல்லாமற் போய்விடும்.

எனவே இவற்றை கருத்திற் கொண்டு நாட்டின் எதிர்காலத்தை மகிந்த ராஜபக்ஷவின் கரங்களுக்கு வழங்குவதற்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவரை பிரதமராக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது சகல தேசிய சக்திகளதும் கடமையாகும் எனக் கூறினார்.

# சமல் ராஜபக்ஷ தேர்தலில் போட்டி

(கொழும்பு)



முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சமல் ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடாது அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ளப் போவதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. எனினும், கடந்த 7ஆம் திகதி சமல் ராஜபக்ஷவின இல்லத்தில் நடைபெற்ற திஸ்ஸமஹாராம தொகுதி சுதந்திரக் கட்சி கூட்டத்தில், சமல் தேர்தலில் போட்டியிட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கைகளுக்கு இணங்க தேர்தலில் போட்டியிட சமல் ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, வீ.கே. இந்திக்க, தென் மாகாண சபையின் ஆளும் கட்சி பிரதம கொறடா அஜித் ராஜபக்ஷ, தென மாகாண மீன்பிடித்துறை அமைச்சர் டி.வீ. உபுல் உள்ளிட்ட சிலர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர். எனினும், இந்தக் கூட்டத்தில் அமைச்சர் மகிந்த அமரவீர மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# அரச நிறுவனங்களில் தொழில்வாய்ப்பு அதிக முறைப்பாடுகள் பதிவு

## தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தல் அறிவிக்கப்பட்டதை அடுத்து அரச நிறுவனங்களினூடாக தொழில்வாய்ப்பு பெற்றுக் கொடுப்பது குறித்து அதிக முறைபாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பதவி உயர்வு, புதிய நியமனங்கள் மற்றும் அரச வளங்களை தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துதல் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பின் தேசிய அமைப்பாளர் ரசாங்க ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

கிடைத்துள்ள தகவல்களின் பிரகாரம் தேர்தல்கள் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் ரசாங்க ஹரிச்சந்திர கூறியுள்ளார்.

இதேவேளை, வடமத்திய மாகாணத்தில் புதிய நியமனங்கள் அதிகமாக பதிவாகியுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

மேலும் தேர்தலை இலக்காகக கொண்டு பலருக்கு தொழில் வாய்ப்புகள் அரச நிறுவனங்களில் வழங்கப்பட்டுள்ளதாக, நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பான கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஜாதிக ஹெல உறுமயவின் விலகலுக்கு ரணில் விக்கிரம சிங்கவே காரணம்

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்மைப்பிலிருந்து ஜாதிக ஹெல உறுமய கட்சி பிளவடைந்தமைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே காரணம் என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடப் போவதில்லை என ஜாதிக ஹெல உறுமய கட்சி அண்மையில் அறிவித்திருந்தது.

கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கும் முயற்சிகளை ஜாதிக ஹெல உறுமய கட்சி மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலின் பின்னர் மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கும் நோக்கில் ஜாதிக ஹெல உறுமய கட்சி செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார.

# நலிவுற்ற மக்களின் நலனுக்கு உதவினார் முன்னாள் எம்.பி. சந்திரகுமார்

## கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு


(கிளிநொச்சி)

நலிவுற்ற மக்களின் நலனுக்காகவும், அவர்களின் மேம்பாட்டிற்காகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்ந்தும் மக்கள் பிரதிநிதியாக இருக்க வேண்டும் அதற்கு நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் என கரைச்சி பிரதேச சபை உறுப்பினரும், முன்னாள் கிளிநொசசி மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான ப.இ ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் கருத்துத் தொவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்

இனத்தின் விடுதலைக்காக மட்டுமல்ல சமூக விடுதலைக்காகவும் மக்கள் பிரதிநிதிகள் போராட வேண்டும் அதுதான் ஒரு இனத்தின் முழுமையான விடுதலையாக கருதப்படும். ஒரு இனத்திற்குள் ஏராளமான சமூக மற்றும் பிரதேச வேறுபாடுகள், பாகுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் என்பவற்றை வைத்துக்கொண்டு ஒரு இனத்தின் விடுதலையை பெற்றுவிடுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. இன்றும் எங்கள் மத்தியில் ஏராளமான சமூக ஏற்றத்தாழ்வுகள் காணபபடுகின்றன. இது சமூகத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும் எனக்குறிப்பிட்ட அவர் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுபபினர் சந்திரகுமார் நலிவுற்ற, ஒடுககப்பட்ட மக்களின் நலனுக்காக குரல கொடுத்தும், உழைத்தும் வருகின்ற ஒரேயொரு மக்கள் பிரதிநிதியாக செயற்பட்டு வருகின்றார். இதனை நாம் இங்கே கூறிதான் நீங்கள் அறிய வேண்டும் என்று இல்லை ஒவ்வொரு வரும் அனுபவ ரீதியாக உணர்ந்த விடயம். மீள்குடியேற்றத்திற்கு முன்னரும் அதற்கு பின்னரும் எங்களுடைய நிலைமைகளை ஒப்பிட்டு நோக்கினால் ஏற்பட்டுள்ள மாற்றம் வெளிப்படையாகவே தெரியும்.

எனவே தான் நாம் அன்புரிமையோடு எல்லோரிடமும் வலியுறுத்துக்கின்றோம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் இந்த மாவட்டத்தில் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும் அதற்காக நாம் எங்களின் முயற்சியையும் உழைப்பினையும் செலுத்த வேண்டும் கிளிநொச்சி மாவட்ட பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்திற்கும் அதன அங்கத்தவர்களின் முன்னேற்றத்திற்கும் அவர் ஆற்றிய சேவை மறக்க முடியாதது இதனால் தான் இன்றும் எங்கள் சங்கத்தின் அங்கத்தவர்களின் மனங்களில் நிலைத்திருக்கின்றார். எனவும் தெரிவித்தார்.



கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் துரைசிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மதனரூபன் மற்றும் சங்கத்தின் அங்கத்தவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# லயன்ஸ் கழகத்தால் சப்பாத்து வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலும் தாய், தந்தையரை இழந்த ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு சங்கானை லயன்ஸ் கழகம் நேற்றுமுன்தினம் சப்பாத்துக்களை வழங்கியது. சங்கானை லயன்ஸ் கழகத்தின் தலைவர லயன். ஜெயச் சந்திரமூர்த்தி றஜீவன், செயற்றிட்ட இயக்குநர் திருமதி லயன் பெண்மணி மயூரிக்கா றஜீவன் மற்றும் சங்கானை லயன்ஸ் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டு சப்பாத்துக்களை வழங்கி வைத்தனர்.

இதன்போது மாணவர்களுக்கு உரையாற்றிய சங்கானை லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன். ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், கண்ணுக்கு தெரியாத மனித நேயம் மிக்க மனிதர்கள் செய்யும் இந்த உதவிகள் இப்பொழுது உங்களுக்கு கிடைத்திருக்கின்றது. உங்கள் முகம் காணாமல், உங்கள் நல்வாழ்வுக்காக உதவி செய்யும் அந்த நல்ல மனிதர்களை நெஞ்சில் நிறுத்தி அவர்களின் ஆசையான சிறந்த கல்வி கற்று நல்ல பிரஜைகளாக வரவேண்டும் என்ற கனவை பாடசாலை மாணவர்களாகிய நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

# வலய மட்ட ரீதியில் பண்ணிசைப் போட்டி

வலிகாமம் கல்வி வலயத்தினால் நடாத்தப்படவுள்ள வலய மட்டப் பண்ணிசைப் போட்டிகள் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இன்று காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி போட்டிக்கு விண்ணப்பித்துள்ள வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களைக் குறித்த நேரத்திற்கு போட்டிகளில் பங்கேற்கச் செய்யுமாறு அதிபர்களையும், பொறுப்பாசிரியர்களையும் வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (06)

# ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா

(சுன்னாகம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் கல்லூரி ஒறேற்றர் சுப்பிரமணியம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது

இந் நிகழ்வில் கல்லூரி வாசலில் இருந்து பிரதம விருந்தினர் கனடா நாட்டின் நிதிய மைச்சின் வரிக்கணக்காய்வாளர் கே.மகேந்திரலிங்கம் பாரியார் கனடா நாட்டின் நிதிக்கட்டுப்பாட்டாளர் திருமதி ஜெயமலர் மகேந்திரலிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக உடுவில கல்விக்கோட்ட கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுலகுமாரன் முன்னாள் அதிபர் ஆர்.ஈஸ்வரதாசன கல்லூரி மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள்

மங்கள விளக்கேற்றும் நிகழ்வைத் தொடர்ந்து நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் கே.ஞானபாஸ்கரன் நிகழ்த்தினார். விருந் தினர்களின் உரைகளைத் தொடர்ந்து மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (48)

# "குழந்தைகள் உலகம்" முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா

கோண்டாவில் மேற்கில் அமைநதுள்ள "குழந்தைகள் உலகம் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிகிழமை பி.ப 1.45 மணிக்கு கோண்டாவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளிப் பொறுப்பாளர் கி.சதீஸ்குமார் தலைமையில் .நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்விவலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி. விக்னேஸ்வரி கந்தசாமிக் குருககள் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கோண்டாவில் இந்துக்கல்லூரி அதிபர் ந.சிவனேசன், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் இ.துரைசிங்கம் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக ஆசிரியை திருமதி ஜெயப்பிரியா பத்மனேசன, ஆசிரியர் செ.சிவபால சுந்தரம், கிராம சேவகர் திருமதி. குணரஞ்சிதம் பிரதாபராஜன கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையினை கோண்டாவில் உப்புமடம் பிள்ளையார் கோவில் குருக்கள் பிரம்ம ஸ்ரீ சிறிஸ கந்தராஜா வழங்கவுள்ளார். (06)

# ரோந்து நடவழக்கை அதிகரிப்பு

(வரணி)

வரணி, வடவரணிபிரதேசத்தில் தற்போது இரவு வேளைகளில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கை அதிகரித்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

தேவையற்றமுறையில் இரவு வேளைகளில் நடமாடுவோர் மற்றும் மதுபோதையில் செல்வோர் கலகம் விளைவிப்போரை உடனடியாக கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்படுகின்றனர்.

பொலிஸாரின் இத்தகைய ரோந்து நடவடிக்கையை அப்பகுதி மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளதுடன் அசம பாவிதங்கள் அப்பகுதியில் நடைபெற்றால் உடனடியாக தொலைபேசியூடாகவும் தெரியப்படுத்தி பொலிஸாரின் உதவியை நாடியும் வருகின்றனர். (150)

## முரசின் இன்றைய பலன்

(10.07.2015 வெள்ளிக்கிழமை

மன்மத வருஷம் ஆனி மாதம் 25 ஆம் திகதி.

மரண யோகம் / நவமி திதி

அஸ்வினி நட்சத்திரம் பின் இரவு - 4.50 வரை பின் பரணி

இராகுகாலம் 10.28 - 11.58 வரை சுப நேரம் 5.58 -7.28 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — ஆவணங்களின் குறைபாட்டினால் போக்குவரத்தில் தண்டம் ஏற்படல்

**ரிஷபம்** — களவுபோன பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்ட செய்தி பொலிஸார் மூலம் அறிதல்

**மிதுனம்** — இலக்கியத் துறையில் வெளியீடுகள் செய்ய ஆர்வம் காட்டுதல்

**கடகம்** — நிறைவேற்றி வைக்கப்பட்ட திருமண தரகர் கூலி பெறமுடியாது முறையிடச் செல்லல்

**சிம்மம்** — இயந்திரக் கோளாறினால் குறித்த நேரத்திற்கு சமூகமளிக்காது விடல்

**கன்னி** — இரவில் காணாக் கழயினால் தேக சுகம் பாதிப்படைதல்

**துலாம்** — அநாமதேய தொலைபேசி மிரட்டலினால் அச்சமும் பதகளிப்பும் ஏற்படல்

**விருச்சிகம்** — எதிரியால் ஏற்பட்டுக் கொண்டிருந்த தொல்லையினின்றும் விடுபட முறைப்பாடு செய்தல்

**தனுசு** — சம்பளப் பற்றாக்குறையினால் தொழிலைக் கைவிட்டு வெளிநாடு செல்ல எத்தனித்தல்

**மகரம்** — கையூட்ட பெறும் எண்ணமிருந்தும் அச்சத்தினால் கைவிட்டு விடல்

**கும்பம்** — பிரச்சினைகளுக்கு காரணம் அறிய காண்டம் வாசிப்பவரை நாடுதல்

**மீனம்** — கணக்கில் தில்லு முல்லு இருப்பதை அறிந்து வாடிக்கையைக் கைவிடல்

# ஆஷஸ் யுத்தம் ஆரம்பம்
# ரூட்டின் சதத்தின் உதவியுடன்
# சரிவிலிருந்து மீண்டது இங்கிலாந்து

(கார்டிப்)

ரூட்டின் சதத்தின் மூலம் ஆஷஸ் கிரிக்கெட்தொடரின் முதல் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 343 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் யுத்தம் என்று கருதப்படும் ஆஷஸ் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. இங்கிலாந்தின் கார்டிப் நகரில் நடைபெறும் முதல் போட்டியில் இங்கிலாந்து நாணயச்சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது

கப்டன் குக், லைத் தொடக்க ஆட்டகாரர்களாக களமிறங்கினாரகள். ஆனால் இருவரும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து இரசிகர்களை ஏமாற்றினார்கள். ஆனால் கரி பலன்ஸ், ஜோ ரூட் சிறப்பாக ஆடி அணியை சரிவிலிருந்து மீட்டார்கள். பலன்ஸ 61 ரன்களில் அவுட் ஆக, ரூட்



அதிரடியாக ஆடி 134 ரன்கள் குவித்தார். முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இங்லாந்து அணி 7 விக்கெட் இழப்புக்கு 343 ரன்கள் குவித்தது.

துடுப்பாட்டத்தில் மொயின் அலி 26 ஒட்டங்களுடனும் பிராட் ஓட்டங்கள் எதுவுமற்ற நிலையிலும் ஆட்டமிழக்காமல் உள்ளனர். அவுஸ்ரேலியா தரப்பில் ஸ்டார்க், ஹாசில்வூட் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்கள்.

# எதிர்வரும் ஜனவரியில் ஆஸி. செல்லும் இந்தியா

(சிட்னி)

இந்திய கிரிக்கெட் அணி ஜனவரி மாதம் அவுஸ்ரேலியாவிற்கு செல்லவுள்ளது. 5 ஒருநாள், 3 ரி 20 போட்டிகளில் விளையாடும் வகையில் ஜனவரி மாதம் இந்தியா அவுஸ்ரேலியா செல்லும் என்பதை உறுதிபடுத்தியுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அதற்கான போட்டி அட்டவணையையும் வெளியிட்டுள்ளது.

ஒருநாள் போட்டிக்கான அட்டவணை:-ஜனவரி 12- முதல் ஒருநாள் போட்டி- பெர்த்.

ஜனவரி 15- 2ஆவது ஒருநாள் போட்டி - பிரிஸ்பேன் ஜனவரி 15- 3ஆவது ஒருநாள் போட்டி - மெல்பேர்ன் ஜனவரி 20- 4ஆவது ஒருநாள் போட்டி- கன்பெர்ரா ஜனவரி 23- 5ஆவது ஒருநாள் போட்டி- சிட்னி

ரி 20 போட்டிக்கான அட்டவணை:-

ஜனவரி 20- முதல் ரி 20 போட்டி- அடிலைய்ட் ஜனவரி 29- 2ஆவது ரி20 போட்டி- மெல்பேர்ன் ஜனவரி 31- 3ஆவது ரி20 போட்டி- சிட்னி

# விம்பிள்டன் ரென்னிஸ் போட்டி நேரில் பார்த்த வில்லியம்ஸ் தம்பதி



(லண்டன்)

லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் டென்னிஸ் காலிறுதிப் போட்டிகளை நேரில் பார்த்து ரசிப்பதற்காக பிரித்தானிய கேம்பிறிட்ஜ் இளவரசர் வில்லியம்ஸ் மற்றும் அவரது மனைவி கதரின் ஆகியோர் நேற்று முன் தினம் விம்பிள்டன் அரங்கிற்கு சென்றிருந்தனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவிற்கான காலிறுதிப் போட்டியை நேரில் பார்த்து இரசிப்பதற்காகவே இவ்விருவரும் அரங்கிற்கு சென்றிருந்தனர்.

இதன்போது அரங்கில் ராஜ அதிகாரம் உள்ளவர்களுக்கு என ஒதுக்கப்பட்ட இடத்தில் அமர்ந்து போட்டிகளை கண்டுகளித்தனர்.

பிரித்தானிய வீரர் அன்டி முர்ரே மற்றும் கனேடிய வீரர் வாசக பொஸ்பிசில் ஆகிய இருவரும் மோதிய காலிறுதிப் போட்டியினையும் சேர்பிய வீரர் நோவாக் ஜேகோவிச் மற்றும் மரின் சிலிச் மோதிய காலிறுதிப் போட்டியை யும் இவர்கள் பார்த்து இர சித்துள்ளனர்.

இப்போட்டிகளில் அன்டி முர்ரே மற்றும் நோவாக் ஜோகோவிச் ஆகியோர் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பறிக்கப்படாது உரிமம்

சர்வதேச கால்பந்து சம்மேளனம் எதிர்நோக்கியுள்ள ஊழல் பிரச்சனைகளால் எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்து போட்டிகளை நடாத்துவதற்கான உரிமம் ரஷ்யாவிடமிருந்து பறிக்கப்படும் என்று அஞ்சத்தேவையில்லை என ரஷ்ய விளையாட்டுத் துறை அமைச்சர் விட்டலி முட்கோ Vitaly Mutko தெரிவித்துள்ளார்.

மொஸ்கோவில் இடம்பெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின் போது FIFA நிர்வாக குழு உறுப்பினரான அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

. இதன்போது 2018 ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ண கால்பந்து தொடரை நடாத்துவதற்கான உரிமத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது என தான் நிச்சயமாக கூறுவதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் FIFA தொடர்பான பல சர்ச்சைகள் மற்றும் பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வரும் நிலையில் இது நிர்வாகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் செயற்பாடுகளிலும் பின்னடைவை ஏற்படுத்துகின்ற போதிலும் இவை அச்சுறுத்தலாக இல்லை என குறிப்பிட்டுள்ளார்.


FIFA அமைப்பு தொடர்பில் ஏற்பட்டுள்ள களங்கத்தை மாற்றி இயல்பாகவே ஒரு நல்லெண்ணத்தை கட்டியெழுப்ப வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

செப் பிளாட்டர் தலைவராக இருந்த காலம் உள்ளிட்ட கடந்த காலங்களில் உலகில் சக்தி வாய்ந்த அமைப்புக்களில் ஒன்றாக FIFA உருவாகியதாக தெரிவித்துள்ள ரஷ்ய விளையாட்டுத் துறை அமைச்சர், இதன் மூலம் கால்பந்து விளையாட்டு பல முன்னேற்றங்களை கண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரு தசாப்த காலங்களாக FIFA அமைப்பில் ஊழல இடம்பெற்றதாக குற்றஞ் சாட்டப்பட்டு FIFA அதிகாரிகள் பலர் அமெரிக்க அமுலாக்க பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். அத்துடன் தொடர்ந்தும் பலர் விசாரணைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் எதிர்வரும் 2018 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்து தொடருககாக தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் மாற்றம் ஏற்படலாம் என எதிர் பார்க்கப்பட்ட நிலையில் ரஷ்ய விளையாட்டுத்துறை அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# தந்தையாகும் கிளார்க்



மைக்கல் கிளார்க் - கைலி தம்பதி தங்களது முதல் குழந்தையின் வருகைக்காக ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் டெஸ்ட் தலைவர் கிளார்க, மொடல் அழகியான கைலியை காதலித்து 2012 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்.

இதனையடுத்து அவரது மனைவி கைலி கர்ப்பமாக இருக்கிறார். இவர் தனது முதல் குழந்தையை விரைவில் பெற்றெடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் கைலி, இன்ஸ்ட்ராகிராம் சமூக வலைத்தளத்தில் வெளி யிட்டுள்ள செய்தியில், 'எங்களுக்கு முதல் குழந்தை பிறக்க உள்ளது. குழந்தையை எதிர் பார்த்து ஆவ லோடு காத்திருக்கிறோம். இந்த மகிழ்ச்சியான தகவலை உங்க ளுடன் பகிர்ந்து கொள்கிறோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

# பிரெஞ்ச் சம்பியன் வாங்ரிங்கா காலிறுதியில் தோல்வி

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் பிரெஞ்ச் ஓப்பன் சம்பியன் வாவ் ரிங்கா காலிறுதியில் தோல்வியடைந்தார்.

விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் காலிறுதி போட்டி ஒன்றில் பிரெஞ்ச் ஓப்பன் சம்பியன் வாவ்ரிங்கா 21ஆம் நிலை வீரரான காஸ்குயட்டை சந்தித்தார். இதில் யாரும் எதிர் பார்க்காத வகையில் 4ஆம் நிலை வீரரான வாவ்ரிங்கா 4-6, 6-4, 6-3, 4-6, 9-11 (2-3) என்ற



செட் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார்.

முதல் செட்டை இழந்த வாவ்ரிங்கா அதன்பின் சுதாகரித்துக் கொண்டு அடுத்த இரண்டு செட்டுக்ளைத் தொடர்ச்சியாக வென்றார் ஆனால், 4ஆவது செட்டை இழந்தார். இதனால் வெற்றியை நிர்ணயிக்கும் ஐந்தாவது செட்டில் வாவ்ரிங்காவுக்கு காஸ்குயட் கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால் அந்த செட் டை பிரேக்கர் வரை சென்றது. இறுதியில் காஸ்குயட் 11:9 என கைப்பற்றி அரையிறுதி போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில் முதல்நிலை வீரர் ஜோகோவிக் சிலிச்சை 6-4, 6-4, 6-4 என்ற நேர்செட் கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். அரையிறுதியில் ஜோகோவிக் [illegible] எதிர்கொள்கிறார்

# அரையிறுதியில் சானியா ஜோடி



விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் சானியா - ஹிங்கிஸ் ஜோடி அரை இறுதிக்கு தகுதி

விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா (இந்தியா), மார்ட்டினா ஹிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) ஜோடி,- (அமெரிக்கா), யரோசுலவா (கஜகஸ்தான்) ஜோடியுடன் காலிறுதியில் மோதியது.

இந்தப் போட்டியில் 7:5, 6:3 என்ற நேர் செட் கணக்கில் (அமெரிக்கா), யரோசுலவா (கஜகஸ்தான்) ஜோடியை வீழ்த்தி அரைஇறுதிக்கு தகுதி

# ஆபிரிக்க நாடுகளுக்கான தொடர் மக்கலம், சௌத்திரிக்கு ஓய்வு

(வெலிங்டன்)

சிம்பாப்வே மற்றும் தென்னாபிரிக்க தொடர்களில் நியூசிலாந்து அணித்தலைவர் பிரெண்டன் மக்கலம் வேகப்பந்து வீச்சாளர் ரிம் சௌத்தி ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு பதிலாக இஸ்சோகி, டக்பிறேஸ்வெல் உட்பட காயம் காரணமாக நீண்ட நாள் அணியில் இடம்பிடிக்காத அடம் மிலன் மற்றும் ஜேம்ஸ் நீசம் ஆகியோருக்கும் கொலின் முன்றோவிற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி கேன் வில்லியம்சனை அணித்தலைவராக கொண்ட நியூசிலாந்து அணி விபரம் வருமாறு

கிரான்ட் எலியொட்,மார்ட்டின் குப்ரில்,மட்ஹென்றி, ரொம்லதாம் மிச்சல்,மக்லினகன், நதம் மக்லம், அடம் மிலன், கொலின் முன்றோ,ஜேம்ஸ் நீசம், லூக் றோஞ்சி, மிக்சல் சான்ரர்,றோஸ் ரெய்லர்,பென்வீலர்,டக் பிறேஸ் வெல்(தென்னாபிரிக்க தொடருக்கு மட்டும்) இஸ் சோகி (சிம்பாப்வே தொடருக்கு மட்டும்)

# வலிகாமம் வலய கரப்பந்து மகாஜன,விக்ரோறியா சம்பியன்

(வலிகாமம்)

வலிகாமம் வலய பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் மாவட்ட சம்பியனான மகாஜன, மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவானது.

மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 13 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் இளவாலை மெய்கண்டானை எதிர்த்து தெல்லிப்பளை மகாஜன மோதியது.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் இரு அணி வீராங்கனைகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்ற வண்ணமிருந்தனர். இதனால் போட்டி விறு விறுப்பாக இருந்தது. இந்த நிலையில் முதல சுற்றை 15:13 என்ற செற் அடிப்படையில் தெல்லிப்பளை மகாஜன கைப்பற்றியது.

இரண்டாவது சுற்றும் பரபரப்பிற்கு குறைவில்லாமல் நடைபெற்றது. இதிலும் இரு அணி வீராங்கனைகளும் சிறப்பாகச் செயற்பட்டனர். இதிலும் தெல்லிப்பளை மகாஜன 15:12 என்ற செற் கணக்கில் வென்று 2:0 என்ற ரீதியில் மாவட்ட சம்பியனாகியது. இப் போட்டியில் மூன்றாமிடத்தை அளவெட்டி அருணோதயா பிடித்தது.

13 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் சுழிபுரம் விக்ரோறியா - சங்கானை சிவப்பிரகாசம் பாடசாலைகள் மோதின. இதில் முதல் சுற்றை 15:10 என கைப்பற்றிய விக்ரோறியா, இரண்டாவது சுற்றையும் 15:12 என கைப்பற்றியது.

எனினும் மூன்றாவது சுற்றில் எழுச்சி கொண்ட சிவப்பிர வீரர்கள் 15:12 என கைப்பற், இறுதியில் சுழிபுரம் விக்ரோறியா 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று மாவட்ட சம்பியனானது. அளவெட்டி அருணோதய மூன்றாவது இடத்தை பெற்றுக் கொண்டது.

(93)

# இந்தியா – இலங்கை டெஸ்ட் தொடர் ஒளிபரப்பு எம்.எஸ்.எம். இந்தியாவிடம்

இந்திய, இலங்கை அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நேரடி ஒளிபரப்பு செய்வதற்கான வர்த்தகசார் உரிமையை எம்.எஸ்.எம். இண்டியா நிறுவனத்திற்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் வழங்கியுள்ளது.

பிரபலமான ஆசிய விளையாட்டுத்துறை அலைவரிசையான சொனி சிக்ஸ் நிறுவனமே எம்.எஸ்.எம். இண்டியாவின் உரிமையாளராகும். இலங்கைக்கு வெளியே உலக நாடுகளில் ஒளிபரப்பு செய்வதற்கான உரிமையை எம்.எஸ்.எம்.மிற்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் வழங்கியுள்ளதாக நிறுவனத்தின் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

அத்துடன் ரேடியோ இன்டர்நெட், மொபைல் ஆகிய உரிமைகளும் அதற்கு வழங்கப்பட்டுள்ளது.இந்திய டெஸ்ட் சுற்றுப்பயணத்திற்கான அனுசரணை உரிமையும் எம். எஸ். எம் மிற்கு வழங்கப்பட்டுள்ளது.

போட்டிகளை ஒளிபரப்பு செய்வதற்கு மனு செய்திருந்த ஒரே ஒரு நிறுவனத்தின் விலைகோரல் மனு மிகவும் குறைவாக இருந்ததால் எம்.எஸ்.எம்.மிற்கு ஒளிபரப்பு உரிமையை வழங்க ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிறுவனம் தீர்மானித்தது.

# இலங்கை – இந்திய டெஸ்ட் போட்டி அட்டவணை அறிவிப்பு

இந்திய அணியின் இலங்கை சுற்றுப் பயணத்துக்கான போட்டி அட்டவணையை ஒளிபரப்பு நிறுவனமான சொனி சிக்ஸ் வெளியிட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதன் முதல் டெஸ்ட் போட்டி ஆகஸ்ட் 12ஆம் திகதி காலிளளயில் தொடங்குகிறது. 2ஆவது டெஸ்ட் போட்டி 20ஆம் திகதி கொழும் பிலும், 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் ஆகஸ்ட் 28 ஆம் திகதி பல்லேகலவிலும் நடக்கிறது.

இந்த டெஸ்ட் தொடரின் ஒளிபரப்பு உரிமத்தை சொனி நிறுவனம் பெற்றுள்ளதால் அந்த நிறுவனம் போட்டி அட்டவணையை வெளியிட்டுள்ளது. இருப்பினும் இந்திய கிரிக்கெட் சபை இந்தப் போட்டி அட்ட-வணையை இன்னும் உறுதிப்படுத்தவில்லை.

# பாகிஸ்தானுடனான தோல்வி ஜீரணிக்க காலம் தேவை

## வேதனையுடன் மத்யூஸ்



பாகிஸ்தானுடனான 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அடைந்த தோல்வியை ஜீரணிக்க சில காலம் செல்லும் என இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத்யூஸ் தெரிவித்துள்ளார்.

"பல்லேகலையில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 377 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நிர்ணயித்த போது நாங்கள் சிறந்த நிலையில் இருந்ததாக நான் கருதினேன்.

எனினும் இறுதியில் அடைந்த தோல்வியை ஜீரணிப்பதற்கு நிச்சயமாக சில காலம் செல்லும்.

எமது அணியினரிடமிருந்து இத்தகைய ஆற்றல் வெளிப்பாடுகளை நாங்கள் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை.

பாகிஸ்தான் அணியினரோ கடைசி இனிங்ஸில் சிறப்பாக விளையாடினர் என மத்யூஸ் குறிப்பிட்டார்.

"ஆடுகளத்தில் ஓரளவு புல் இருந்ததால் எமது அணியில் மூன்று வேகப்பந்து வீச்சாளர்களை இணைத்துக் கொண்டோம்.

எனினும் இலங்கையில் நான்காம், ஐந்தாம் நாள் ஆட்டங்களின் போது வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக ஆடுகளம் அமையும் என்று எதிர்பார்க்க முடியாது.

மேலும் துரதிர்ஷ்டவசமாக தரிந்து கௌஷால் திறமையாக பந்துவீசவில்லை.

இதன் காரணமாக பாகிஸ்தானியர் மீது எம்மால் அழுத்தத்தை திணிக்க முடியாமல் போனது.

பாகிஸ்தானை விட 376 ஓட்டங்கள் அதிகமாக எடுக்க நாங்கள் கடுமையாகப் போராடினோம்

ஆனால் அதன் பின்னர் தோல்வி அடைவோம் என நாங்கள் எண் ணவே இல்லை" என்றார் அவர்.

ரங்கன ஹேரத்தை அணியில் சேர்க்காதது ஒரு தந்திரோபாய தீர்மானம் எனக் குறிப்பிட்ட அவர், முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ரங்கன ஹேரத்தின் பந்துவீச்சை பாகிஸ்தான் துடுப்பாட்டக்காரர்கள் பதம் பார்த்ததே அவரை நீக்குவதற்கு காரணம் எனவும் தெரிவித்தார்.

சிரேஷ்ட வீரர்களான உபுல் தரங்க, ஜெஹான் முபாரக் ஆகிய இருவரும் எதிர்பார்த்தளவு கணிசமான ஓட்டங்களைப் பெறத் தவறினர்.

"அனுபவம் கலந்து மூத்த வீரர்களான இவர்கள் இருவரும் பெரிய அளவில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடாத போதிலும் உளளூர்ப் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தியிருந்ததை மறக்கலாகாது.

இரண்டாவது இனிங்ஸில் அவர்கள் இருவரும் அழுத்தங்களை எதிர் கொண்ட போதிலும் அவர்களது இணைப்பாட்டம் அணி 376 ஓட்டங்கள் முன்னிலையில் இருப்பதற்கு உதவியது.

நீண்ட கால இடை வெளிக்குப் பின்னர் விளையாடிய அவர்கள் இருவரும் அதிகபட்ச ஆற்றலை வெளிப்படுத்தினர்" என மத்யூஸ் மேலும் கூறினார்.

லஹிரு திரிமான்னவைப் பற்றி கருத்து வெளியிட்ட அவர், "அவர் ஒரு திறமை வாய்ந்த வீரர் என்பதால் அவருக்கு ஆதரவு வழங்குகின்றோம்.

எல்லோரையும் குமார் சங்கக்காரர்களாகவோ மஹேல ஜயவர்தனாவாகவோ எதிர்பார்க்க முடியாது.

ஒரு துடுப்பாட்டக்காரர் சரிவடையும் போது அவரைக் குறை கூறக்கூடாது. அவர் நிச்சயம் எதிர்நீச்சல் போடுவார்" என்றார்.

இதேவேளை, "கடந்த 15 வருடஙளகளாக மஹேலவும் குமாரும் விளையாடியதைக் கண்ணுற்றோம்.

அவர்களுடன் இளையோரை ஒப்பிட்டு எடைபோடக்கூடாது. அவர்களில் ஒருவர் பிரகாசிக்கத் தவறினால் மற்றையவர் பெரும்பாலும் சதம் குவித்து ஆற்றலை வெளிப்படுத்துவார்.

தற்போதைய அணியைப் பொறுத்த மட்டில் நாம் அமைதியைப் பேணவேண்டும்.

நாங்கள் எல்லோரும். கற்றுக் கொண்டிருக்கின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

# மகாஜனவின் அதிரடியில் வீழ்ந்தது கிளிநொச்சி இந்து



கனிஸ்ரன்

(தெல்லிப்பளை)

கனிஸ்ரன், தனிஸ்ரன் ஆகியோரின் அதிரடி சதத்தின் மூலம் 17 வயதுப்பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையிலான 50 ஓவர் போட்டியொன்றில் தெல்லிப்பளை மகாஜனவின் ஓட்டக்குவிப்பும், சிறந்த பந்து வீச்சும் கைகொடுக்க 327 ஓட்டங்களால் கிளிநொச்சி இந்துக் கல்லூரியை மகாஜன வெற்றி கொண்டது.

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கு இடையிலான துடுப்பாட்டப் போட்டியொன்றை நடாத்தி வருகின்றது. இதில் பிரிவு 3 இற்கான போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மகாஜன முதலில் துடுப்பெடுத்தாடியது.

அவ்வணி வீரர்களின் ஓட்டக் குவிப்பால் அவ்வணி 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக் களை இழந்து 445 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக கயிஸ்ரன் 130 பந்துகளை எதிர்கொண்டு 20 பவுண்டரிகள், 6 சிக்சர்கள் அடங்கலாக 165, கனிஸ்ரன் 47 பந்துகளை எதிர்கொண்டு 15 பவுண்டரிகள், 2சிக்ஸர்கள் அடங்கலாக 110, பிரணவன் 99 பந்துகளை சந்தித்து 8 பவுண்டரிகள் அடங்கலாக 67 துலக்ஷன் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரதீபன் 10 ஓவரகள் பந்துவீசி 67 ஓட்டங்களுக்கு 2, தர்சன் 5 ஓவர்கள் பந்துவீசி 37 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 446 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி மகாஜன வீரர்களின் பந்துவீச்சிற்கு ஈடு கொடுக்க முடியாமல் விக்கெட்டுக்களை பறி கொடுத்தது. இறுதியில் அவ்வணி 28 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்று 326 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.



தனிஸ்ரன்


அவ்வணி சார்பாக தீபன் 36, அனுசன் 38 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் யசிந்தன் 6 ஓவர்கள் பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு 4, துலக்ஷன் 4 ஓவர்கள் பந்துவீசி 5 ஓட்டங்களுக்கு 3, சரண்ராஜ் 6 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

(93)

# நீண்ட நாள் கனவு நனவாகியது

## மிஸ்பா மகிழ்ச்சி



இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரை 2:1 எனக் கைப்பற்றியதன் மூலம் தங்கள் கனவு நனவாகி விட்டதாக பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் கூறியுள்ளார்.

இதற்கு முன்னரான பாகிஸ்தான் அணிகள் செய்ய முடியாத சாதனையை தற்போதைய பாகிஸ்தான் அணி செய்ததன் மூலம் கனவு நனவாகியுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணிக்காக சுமார் 3 தடவைகள் இலங்கைக்கு வந்து விளையாடியுள்ளதாகத் தெரிவித்துள்ள மிஸ்பா அப்போதெல்லாம் தொடரை இழந்ததாகவும் தற்போது இந்த தொடரை வென்றதன் மூலம் நீண்ட நாள் கனவு தற்போது நனவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை சுழற்பந்தை தமது அணி வீரர்கள் திறமையாக எதிர் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# ஆபத்து வித்தியாவுடன் முடிந்துவிடவில்லை!



**பு**ங்குடுதீவில் வித்தியா என்ற பள்ளி மாணவி சமூக விரோதிகள் சிலரால் காட்டுமிராண்டித்தனமாக கூட்டு வன்புணர்ச்சிக்கு உள்ளாக் கப்பட்டதுமல்லாமல், கொலையும் செய்யப்பட்ட சம்பவம், தமிழ் மக்களை மட்டுமின்றி, இலங்கை யின் அனைத்து இன மக்களின தும் கோபத்தைக் கிளறியது.

முன்பும் இப்படியான சம்பவங் கள் சில தமிழ்ப் பகுதிகளில் நடந் திருந்தாலும் கூட, இந்தச் சம்பவத் துக்கு எதிராக ஏற்பட்ட பொதுமக் களின் ஆவேச உணர்வு வேறு எதற்கும் எதிராக ஏற்படவில்லை எனச் சொல்லலாம். அதுமட்டு மின்றி, முன்னைய சம்பவங்கள் பலவற்றுக்கு இராணுவத்தினர் மீது அல்லது "ஒட்டுக்குழுக்கள்" மீதுதான் உடனடியாக விரல்கள் நீட்டப்படுவது வழமை. ஆனால் வித்தியாவின் விடயம் மிகவும் வித்தியாசமானது. சம்பவம் தமிழர்களான ஒரே இனத்தவரால், ஒரே ஊரவர்களால், ஒரே சொந்த உறவுக்காரர்களாலேயே நடத்தப் பட்டுள்ளது.

30 வருடப் போர் பெரும்பாலான தமிழர்கள் மத்தியில் அராஜக மனோ நிலை, பழிவாங்கும் எண்ணம், கட்டறுந்த மன நிலை, அச்சம், விரக்தி, துயரம், கையறு நிலை, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மை போன்ற இன்னோரன்ன நிலைமை-களைத் தோற்று வித்திருக்கிறது. மனோ தத்துவவியல் நிபுணர்களே தமிழர்களில் பலபேர் போர் காரணமாக மனோவியாதி யால் பீடிக்கப்பட்டிருக்கி றார்கள் எனச் சுட்டிக்காட்டி வந்திருக்கிறார்கள்.

அத்துடன் வெளிநாட்டுப் பணம், தாராளமான வங்கிக் கடன்கள், புதிய வேலை வாய்ப்பு வருவாய் என்பன புதியதொரு நுகர்வுக் கலாச் சாரம் ஒன்றை உருவாக்கியுள்ளதுடன், போதை வஸ்துப் பாவனை, தென் னிந்திய மற்றும் ஆங்கில மூன்றாந்தரச் சினிமாக்களின் கலாச்சாரத் தாக்கம் போன்றவையும் இன்றைய தமிழ் சமூகத்தை மிகவும் ஆக்கிரமித்துள்ள சமாச்சாரங்களாகும்.

இந்த நிலைமை முன்னரே சிலரால் அவதானிக்கப்பட்டு வந்துள்ளது. யுத்தத்தின் பின்னர் அதிகரித்து வந்த பாலியல் சம்பவங்கள், அடிதடிகள், வாள்வெட்டுகள், வழிப்பறி, பண மோசடி, ஏமாற்று, அடாவடித்தனங்கள் என இவை படிப்படியாக வளர்ந்து வந்துள்ளன. உண்மையில் இப்படியான நிலைமை ஏற்படாது தடுப்பதில், அரசாங்கத்தின் சட்டப் பாதுகாவலர்-களை விட தமிழ் சமூகத்துக்குப் பாரிய கட்மை இருக்கின்றது.

தமிழ் அரசியல் கட்சிகள் அதிலும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கல்விமான்கள், மத அமைப்புகள், கலாச்சார நிறுவனங்கள், என்பன இவற்றைக் கட்டுப்படுத்துவதிலும், இளைஞர்களை நல்வழிப்படுத்துவதிலும் முக்கியமான பங்கை வகித்திருக்க வேண்டும். ஆனால் அவை அக்கறை செலுத்தவில்லை.

தமது சமூகம் உள்ளூர உக்கி, புழுத்து நாற்றமெடுக்க, அவர்கள் தமது அரசியல் இலாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு சிங்கள எதிர்ப்பு, அரச எதிர்ப்பு என்ற ஒற்றை விடயத்திலேயே முழுக் கவனத்தையும் செலுத்திச் செயற்பட்டனர். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் போன்றவையே தமது சமூகக் கடமையை மறந்து இனவாதச் சகதிக்குள் புரண்டன.

எல்லாவற்றையும் கோட்டைவிட்டு விட்டு, மாகாண அமைச்சர் ஐங்கர நேசன், பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், "உதயன்" பத்திரிகை போன்றவர்கள் "புலிகள் இருந்திருந் தால் இப்படியான சம்பவங்கள் நடைபெறாது" என இப்பொழுது சப்பைக்கட்டுக் கட்டுகிறார்கள். அவர்க-ளது கூற்றின்படி இந்த நிலைமையை தமிழ் சமூகத்தில் உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்த புலிகளின் மறுபிறப்பே இதற்கான பரிகாரம் என்பதுதான் அவர்களது வாதம்.

இந்த மிருக வெறி உணர்வு இன்று தமிழ் சமூகத்தில் பல படி நிலைகளிலும் ஆழமாகவும் அகலமாகவும் வேரூன்றி இருக்கிறது என்பதுதான் உண்மை. இந்த அநீதி யை இழைத்தவர்கள் மத்தியிலிருந்து மட்டும் அது வெளிப்படவில்லை. இந்த அநீதிக்கு எதிராக பொதுமக்களிடம் ஏற்பட்ட நியாயமான கோபாவேச ஆர்ப்பாட்டங்களைத் திசை திருப்பி, நீதிமன்றம் மற்றும் பொலிசார் மீதான தாக்குதல், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல் போன்றவற்றிலும் அது வெளிப்பட்டது.

அதாவது குற்றமிழைத்தவர்களும், குற்றத்தைக் கண்டிப்பதாகச் சொன்ன வர்களும் என, இருபகுதியினருமே அராஜகவாதிகளாகச் செயற்பட்டிருக் கிறார்கள். இது ஒரு ஆபத்தான நிலைமை. அதுமட்டுமல்ல, இந்த விடயத்தில் பொதுமக்கள் என்ற போர்வையில் சில குறுகிய நோக்கம் கொண்ட அரசியல் சக்திகள் திரைம றைவில் நின்று செயற்பட்டிருக்கின்றன. பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் உரையாற்றிய சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறீகாந்தா, சில சிறிய கட்சிகள் இந்தக் கலகங்களின் பின்னணியில் செயற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே அரசாங்கத்துக்கும், சட்டம் ஒழுங்கைப் பேணும் பொலிசாருக்கும் பல கடமைகள் இருக்கின்றன. வித்தியா மீது வன்முறையைப் பிரயோகித்த காட்டுமிராண்டிகளைச் சட்டத்தின் முன்னிறுத்தி அவர்களது குற்றங்களுக் காக அதிக பட்ச தண்டனை வழங்குவதுடன், ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் திட்டமிட்ட வன்முறையில் அவர்களைத் திரைமறைவில் நின்று தூண்டிவிட்ட சக்திகளையும் இனம் கண்டு தண்டிக்க வேண்டும்.

மறுபுறத்தில், அரசை மட்டும் நம்பியிராமல், தமிழ் சமூகத்தில் உள்ள நலன் விரும்பிகள், புத்திஜீவிகள், பொறுப்பு வாய்ந்த சக்திகள் என்பவர் கள் தமிழ் மக்கள் மத்தியில், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஒரு சமூக - கலாச்சார மறுமலர்ச்சி இயக்கத்தை கிராமங்கள் நகரங்கள், பாடசாலைகள். அலுவலகங்கள் என அனைத்து மட்டத்திலும் உடனடியாக ஆரம்பித்து நடாத்த வேண்டும்.

இல்லையேல் தமிழ் சமூகம் வெளி எதிரிகள் எவருமின்றி, தனது சவக்குழியைத் தானே வெட்டுவதைத் தடுத்து நிறுத்த முடியாமல் போகும்.

- யாதவன்

(நன்றி: வானவில் 54)

# உலகின் இரண்டாவது மசூதி!

- பி. பரிணாமன் -

**கே**ரளத்தில் கொடுங்கல்லூர் நகரத்தில் உள்ளது சேரமான் மசூதி. கி.பி.621-இல் ஏற்படுத்தப் பட்டதாகச் சொல்லப்படும் இந்த மசூதி, உலகிலேயே இரண்டாவதாக ஏற்படுத்தப்பட்டது என்றும், இந்தியா வில் முதல் மசூதி என்றும் பெயர் பெறுகிறது.

இஸ்லாம் மதத்தின் இறைத்தூதர் முகம்மது நபி அவர்கள், உலகின் முதல் மசூதியை மதீனா நகரில் கட்டினார்கள்.

உலகின் இரண்டாவது மசூதி, இஸ்லாம் பிறந்த சவுதி அரேபியாவின் மக்கா, மதீனாவிலிருந்து பல்லாயிரம் கி.மீ. தூரத்தில் இந்தியாவில் அதுவும் கேரளத்தில் இருக்கும் கொடுங்கல்லூரில் ஏன் ஸ்தாபிக்கப்பட வேண்டும்?

கொடுங்கல்லூர் மசூதியின் பெயரில் இருக்கும் சேரமான் என்கிற அடைச் சொல்லில் ஒரு சரித்திரமே அடங்கியுள்ளது.

கி. மு. 400 கால கட்டத்திலேயே கேரளத்தில் குறிப்பாக கொடுங்கல்லூரில், ரோமர், கிரேக்கர், அராபியர், வளைகுடா நாட்டவர்கள், சீனர், யூதர் ஆகியோர் வியாபாரம் செய்து வந்தார்கள். அதன் காரணமாக பன்னாட்டு கலாசாரத்தின் தொட்டிலாக, கொடுங்கல்லூர் மாறியிருந்தது.

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் கொடுங்கல்லூரைத் தலைநகராக்கி சேரமான் பெருமாள் என்ற மன்னன் ஆண்டு கொண்டிருந்தான். ஒருநாள், மன்னனின் கனவில், வானத்து பூரணச் சந்திரன் இரண்டாகப் பிளந்து விழுவதாகக் காட்சி வந்தது. சேரமான் மனதுக்குள் பலவிதக் குழப்பங்கள் ஏற்பட்டன. சந்திரன் இரண்டாகப் பிளந்து விழுவதாகக் கனவு எனக்கு ஏன் வரவேண்டும்? கனவின் பொருள் என்ன? எதை உணர்த்த இந்தக் கனவு வந்தது? இதைப் பற்றி அமைச்சர்களிடம், பல ஜோதிடப் பண்டிதர்களிடம் அரசன் விளக்கம் கேட்க, அவர்கள் தந்த விளக்கம், மன்னனின் சந்தேகங்களைப் போக்குவதாக இல்லை.

உலகின் முதல் மனிதன் என்று சொல்லப்படும் ஆதமின் கால் பாதங்கள் பதிந்த இடம் இலங்கை யில் இருக்கிறது. (அந்த இடம் அமைந்திருக்கும் மலை ஸ்ரீபாத மலை என்றும் சிவனொளிபாத மலை என்றும் அழைக்கப்படுகிறது) அதைத் தரிசிக்க வந்த அராபியர்கள், கொடுங்கல்லூரில் ஓய்விற்காக இறங்க.... அவர்களுக்கு மன்னனின் சந்தேகம் தெரிய வர... விளக்கம் தருவதற்காக மன்னனைச் சந்தித்தார்கள்.

"அரபு நாட்டில் இறைத் தூதர் முகம்மது நபி அவர்கள் இஸ்லாம் என்னும் புதிய மதத்தைப் பரப்பி வருகிறார்கள். சந்திரனை வைத்துத் தான் அவர்கள் மாதங்களைக் கணக்கிடுகிறார்கள். புதிய மதம் தோன்றியிருப்பதை சூசகமாக உங்களுக்கு உணர்த்தவே சந்திரன் இரண்டாகப் பிளந்து விழுவதாகக் கனவு உங்களுக்கு வந்திருக்கிறது" என்று விளக்கம் சொல்ல, மன்னனுக்கு அந்த விளக்கம் ஏற்புடையதாக இருந்தது.

"நீங்கள் தந்த விளக்கம் பொருத்தமாக எனக்குத் தெரிகிறது. நான் முகம்மது நபி அவர்களைச் சந்திக்க வேண்டும்... என்னை அரேபியாவுக்கு அழைத்துச் செல்லுங்கள்..." என்று மன்னர் அந்த அராபிய வணிகர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

"மன்னா... நாங்கள் இலங்கை சென்று, ஆதம் கால் பாத தரிசனம் நடத்தி மீண்டும் கொடுங்கல்லூர் வருவோம். நீங்கள் அதற்குள் பயணத்திற்கான ஏற்பாடுகள் செய்து தயாராக இருங்கள்... உங்களை அராபியாவிற்கு அழைத்துச் செல்கிறோம்" என்றார்கள்.

"அதுவும் சரிதான்..." என்று ஒப்புக்கொண்ட மன்னன், தனது ராஜ்ஜியத்தைப் பிரித்து, தனது சந்ததியர் மன்னர்களாக ஆட்சி செய்ய கொடுத்துவிட்டு, பயணத்திற்குத் தயாரானார்.

இலங்கையிலிருந்து திரும்ப வந்த அராபியர் களுடன், மன்னர் அராபிய பயணம் செய்தார். மதீனா சென்று முகம்மது நபி அவர்களைச் சந்தித்து, இஸ்லாமியராகி அங்கு கொஞ்ச நாள் தங்கி, மீண்டும் தாயகம் வரும்போது, பயணத்தில் பெருங்காய்ச்சல் தாக்க ஓமானில் ஓய்வு எடுக்க வேண்டி வருகிறது. தான் பிழைக்க மாட்டோம் என்று தெரிந்ததும், தன்னுடன் துணையாக வந்த மாலிக் பின் தினார் என்பவரிடம் தனது சந்ததிகளுக்கு கடிதங்களைக் கொடுத்து அனுப்பி வைக்கிறார். கடிதங்களில், "தான் இஸ்லாம் மதத்தைத் தழுவி விட்டதாகவும், கேரளத்தில் இஸ்லாம் மதத்தவர்கள் இறை வழிபாடு நடத்த மசூதிகள் கட்டிக் கொள்ள அனுமதியும், உதவிகளையும் செய்ய வேண்டும்" என்று எழுதியிருந்தார். சேரமான் பெருமாள் ஓமானில் துபார் என்ற இடத்தில் இறக்க அங்கேயே மன்னனின் பூத உடலை இஸ்லாமிய முறையில்



# வீட்டு வைத்தியம்!



❊ வாய்ப்புண் குணமாக நெருஞ்சி இலைச் சாற்றை நீரிட்டுக் காய்ச்சி வாய் கொப்பளிக்க புண் ஆறும்.

❊ தலைவலி குணமாக லவங்கத்தை பால்விட்டு அரைத்து நெற்றியில் பற்றுப் போட்டு வரலாம்.

❊ கண் எரிச்சல் நீங்க அதிமதுரம், கடுக்காய், திப்பிலி, மிளகு சேர்த்து வறுத்துத் தூளாக்கி தேன் அல்லது வெந்நீரில் கலந்து சாப்பிட கண் எரிச்சல் நீங்கும்.

❊ தொண்டைப்புண் ஆற வேப்பம் பூவை கொதி நீரில் போட்டு அதன் ஆவியைத் தொண்டையில் படுமாறு ஆவி பிடித்தால் விரைவில் குணமாகும்.

❊ நெஞ்சுச் சளிக்கு தேங்காய் எண்ணெய்யில் கற்பூரம் சேர்த்துச் சூ வைத்து நெஞ்சில் தடவ சளி, கபம் தீரும்.

❊ தொப்பை குறைய வாரம் இரண்டு தினங்கள் சுரைக்கா சமைத்துச் சாப்பிட்டு வரலாம்.

❊ தேகம் கட்டமைப்புப் பெற முருங்கைப் பூவை பசும்பாலில் போட்டுக் காய்ச்சி 41 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வர தேகம் கட்டமைப்புடன் ஆரோக்கியமாக இருக்கும்.

❊ உடல் சதை குறைய வாழைத்தண்டுச் சாறு குடித்து வரலாம்.

# இணையத்தை அச்சிட்டால் என்னாகும்?

இணையத்தில் எப்போதாவது தேவைப்படும் தகவல்களை இணையப் பக்கங்களாக நீங்கள் அச்சிட்டுக்கொண்டிருக்கலாம். ஆனால் எப்போதேனும் மொத்த இணையத்தை அச்சிட முயன்றால் எவ்வளவு காகிதங்கள் தேவைப்படும் என நினைத்துப் பார்த்ததுண்டா? பிரிட்டனின் லீஷயர் பலைகலைக்கழக மாணவர்கள் ஜோர்ஜ் ஹார்வுட் மற்றும் இவாஞ்சிலைன் வோக்கர் இந்தக் கேள்வியைக் கேட்டு அதற்கான பதிலையும் கணக்கிட்டு சொல்லியிருக்கின்றனர்.

வெள்ளிவிழா கண்ட இணையம் (வைய விரிவு வலை) 2014 ஆம் ஆண்டில் வேகமாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. இணையத்தைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதுடன் இணையத்தில் இடம்பெறும் தகவல்களும் அதிகரித்துள்ளன என்று இந்தக் கேள்விக்கு விடை அளிக்கும் ஆய்வுக்கட்டுரையின் துவக்கத்தில் குறிப்பிட்டுள்ளனர். இந்த இரண்டும் சேர்ந்துதான், இணையத்தை அச்சிட்டால் என்ன ஆகும் எனும் கேள்வியை உண்டாக்கியதாகவும் தெரிவித்து இதற்கான பதிலை விவரித்துள்ளனர்.

பதில் என்ன தெரியுமா? 136 பில்லியன் காகிதங்கள் தேவைப்படும் என்பதுதான். இந்த எண்ணிக்கையை உருவகப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றால் இந்த எண்ணிக்கை காகிதங்களை உருவாக்க 16 மில்லியன் மரங்கள் தேவைப்படும்.

முதலில் விக்கிபீடியாவின் பக்கங்களை அச்சிட எவ்வளவு பக்கங்கள் தேவைப்படும் என அனுமானித்துக்கொண்டு அதன் பிறகு இணையத்தின் 4.5 பில்லியன் இணையத்தளங்களை அச்சிட எவ்வளவு காகிதங்கள் தேவை என கணக்கிட்டுள்ளனர்.

இந்தக் கணக்கு பற்றிய ஆய்வுக்கட்டுரை இதோ: http://www.physics.le.ac.uk/jist/index.php/JIST/article/view/100/57



அடக்கம் செய்கின்றனர்.

மன்னனின் கடிதங்களுடன், மாலிக் பின் தினார் தனது குழுவினருடன் கடல் மார்க்கமாக கொடுங் கல்லூர் வந்திறங்கி, ஆட்சி செய்யும் சேரமான் பெருமாளின் வாரிசைச் சந்தித்து, மன்னனின் கடிதங்களைச் சேர்ப்பிக்க.... மன்னனின் விருப்பத்தை நிறைவேற்றச் சம்மதித்தார்கள்.

கொடுங்கல்லூரில், கவனிக்க, வழிபட யாரு மில்லாமல் கிடந்த பழைய புத்த கோயிலை மசூதியாக மாற்றிக் கொள்ள அனுமதி கிடைக் கிறது. இது நடந்தது கி.பி. 621இல். இந்த மசூதி ஸ்தாபிக்கப்பட்ட பிறகே, ஈராக், எகிப்து, சிரியா, துனிசியா போன்ற மற்ற நாடுகளில் இதர மசூதிகள் உருவாக்கப்பட்டன.

இந்த சேரமான் மசூதி பலமுறை புனரமைப்புச் செய்யப்பட்டு, அதேசமயம் மசூதியின் உள் பகுதியில் எந்த மாற்றமும் செய்யப்படாமல் பழமை அப்படியே பாதுகாக்கப்பட்டு வருகிறது.

வெளிப்பகுதி மட்டுமே விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

மசூதியின் உள்ளே சமயச் சொற்பொழிவு நடத்தும் மிம்பர் எனப்படும் மேடை கலை நுணுக்கத்துடன் மரத்தில் செய்யப்பட்டுள்ளது. அந்தக் காலத்தில் இரவு நேர வழிபாட்டிற்கு (தொழுகைக்கு) வெளிச்சம் வேண்டும் என்பதற்காக பெரிய விளக்கு ஒன்றைத் தொங்கவிட்டு திரியில் எண்ணெய் ஊற்றி எரியச் செய்தார்கள். அந்த தீப விளக்கு, அன்று எந்த இடத்தில் இருந்ததோ, அதே இடத்தில் இன்றைக்கும் இருக்கிறது. அந்த விளக்கில், கொடுங்கல்லூர் ஜுமா பள்ளி என்று எழுதப்பட்டுள்ளது.

இந்த மசூதியிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் தான் புகழ்பெற்ற கொடுங்கல்லூர் பகவதி என்று அழைக்கப்படும் கண்ணகி கோவிலும் திருவஞ்சைக்களம் என்று அழைக்கப்படும் சிவத் தலமும் இருக்கிறது. சுந்தரமூர்த்தி நாயனார் திருவஞ்சைக்களம் சிவாலயத்தில்தான் ஈசனுடன் கலந்தார் என்பதும், திருக்கயிலாய ஞான உலா எழுதிய சேரமான் பெருமாள்தான் சுந்தரமூர்த்தி நாயனாரின் நண்பராகவும், வஞ்சி மாநகரை ஆண்ட சேரமன்னராகவும் இருந்தார் என்றும் கூறப்படுகிறது. சுந்தரர் நண்பரான சேரமான் பெருமாள் மிகச்சிறந்த சிவபக்தர். பன்னிரு திருமுறையில் பதினோராம் திருமுறையில் இவர் பாடல்கள் உள்ளன. 63 நாயன்மார்களுள் இவரும் ஒருவர் என்பதால் இவர் வேறு; அவர் வேறு என்றும் கூறுவர்.

# ஊரும் உலகமும்

## தேசிய உடையில் பற்று



யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் ஸ்தாபகர்களில் ஒருவரான ஹன்டி பேரின்ப நாயகம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்தவர். யாழ்ப்பாணக் கல்லூரியில் “லண்டன் இன்ரர் ஆட்ஸ்” பரீட்சையில் தேறிய முதல் இரண்டு மாணவர்களாக இவரும் வைமன் குலதுங்கம் என்பவரும் விளங்கினர்.

சித்தியெய்திய இரண்டு மாணவர்களும் பரிசளிப்பு விழாவில் உரையாற்ற வேண்டும். இது மாணவர்களுக்கு அளிக்கப்படும் சிறப்பான கௌரவம். பற்றிக் கெலட்டா செமினறியின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்ட காலம் என்பதால் (1922) இக்கௌரவம் மேலும் சிறப்புப் பெறுகின்றது.

அந்த நிகழ்வுக்குத் தேசிய உடையிலேயே செல்லப்போவதாக ஹன்டி பேரின்பநாயகம் கூறினார். இதைக் கேள்விப்பட்ட கல்லூரி அதிபர் பிக்நெல் ஹன்டியை அழைத்து ஆங்கிலேய பாணி உடையிலேயே உரையாற்ற வேண்டும் என்றும் அவ்வாறில்லை என்றால் அவருக்கு அந்தக் கௌரவத்தை வழங்க முடியாது என்றும் கூறினார். ஹன்டி பேரின்பநாயகம் தனது முடிவில் உறுதியாக நின்றதால் பரிசளிப்பு நாள் உரையை ஆற்றும் கௌரவம் அவருக்குக் கிடைக்கவில்லை.

பிற்காலத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய ஹன்டி பேரின்பநாயகம் எப்போதும் தேசிய உடையையே அணிந்தார்.

## பண்டாவின் சாதனை



1956ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தல் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயகவைப் பதவிக்குக் கொண்டு வந்தது. அவரது கூட்டணியான மக்கள் ஐக்கிய முன்னணி நிறுத்திய 60 வேட்பாளர்களில் 51பேர் தெரிவு செய்யப்பட்டனர். இந்தத் தேர்தலில் பண்டாரநாயக்க தனிப்பட்ட முறையிலும் சாதனை படைத்தார். அத்தனகல தொகுதியில் 45,016 வாக்குகள் பெற்ற அவர் 42,000 இற்கு மேற்பட்ட பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட இரண்டு வேட்பாளர்களும் கட்டுப்பணம் இழந்தனர்.

## இந்தியாவின் முதலாவது மொழிவாரி மாநிலம்



சுதந்திர இந்தியாவின் ஆரம்ப நாட்களில் இன்றைய தமிழ்நாடும் ஆந்திராவும் கேரளத்தின் ஒரு பகுதியும் சென்னை மாகாணம் என்ற பெயரில் ஒரே மாநிலமாக இருந்தன. ஆந்திராவைத் தனியாகப் பிரித்துத் தெலுங்கு பேசும் மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு வந்தது. மொழிவாரி மாநிலங்களை உருவாக்க ஜவஹர்லால் நேரு விரும்பவில்லை.

இந்த நிலையில் சுதந்திரப் போராட்ட வீரரான பொட்டி ராமுலு ஆந்திரா மாநிலக் கோரிக்கையை வலியுறுத்தி 19.10.1952இல் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்தார். ஐம்பத்தெட்டாவது நாள் அவர் மரணமடைந்ததும் ஆந்திரப் பிரதேசத்தில் வன்முறைகள் வெடித்தன. இந்திய அரசாங்கம் வேறு வழியின்றி ஆந்திர மாநிலம் அமைப்பதற்குச் சம்மதித்தது.

1953 ஒக்ரோபரில் ஆந்திர மாநிலம் நடைமுறைக்கு வந்தது. அதைத் தொடர்ந்து பல மொழிவாரி மாநிலங்கள் உருவாகின.

# பயபக்தியும், பண்பாடும் கொண்ட பகட்டு அதிகம் இல்லாத எளிமை மிக்க மக்கள் வாழும் ஊர் மீசாலை

இந்து மாவாரியின் நித்திலமென வர்ணிக்கப்படும் இலங்கையின் ஈழமணித் திருநாட்டில் தலையாய யாழ்ப்பாணத் திற்கு கிழக்கே உள்ள தென்மராட்சியில் நடுநாயகமாக இருப்பது மீசாலை.

யாழ்ப்பாணம் - கண்டி வீதி இவ்வூரின் ஊடாகச் செல்கிறது இவ்வீதியின் வழி சாவகச்சேரியில் இருந்து இவ்வூர் சுமார் 3 கிலோமீற்றர் தொலைவிலும், கொடிகாமத்தில் இருந்து சுமார் 4 கிலோமீற்றர் தொலைவிலும் உள்ளது. இவ்வீதிக்கு இணையாக ஒரு தொடர்வண்டிப் பாதையும் இருந்தது டன் இவ்வூரில் ஒரு தொடர்வண்டி நிலையமும் அமைந்தி ருந்தது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தெற்கு வடக்காகப் பிரிக்கப்பட்டிருந்த இவ்வூர், இப்பொழுது வடக்கு, கிழக்கு, மேற்காகப் பிரிக்கப்பட்டுள்ளது. வடக்கே கொடிகாமம் "திருவாரம்"மந்து விலையும், கிழக்கே அல்லாரையையும், தெற்கே சாவகச்சேரியையும், மேற்கே மட்டுவில் சரசாலையையும் தனது அயற் கிராமமாகக் கொண்டுள்ளது. மீசாலை வடக்கில் கல்லடிவெட்டை, வேம்பிராய் என இரு சிற்றூர்கள் உண்டு. கல்லடி வெட்டை கல்நிலமாக உள்ளது. மீசாலை தென் கிழக்கில் கொக்கட்டியங்காடு என ஒரு பகுதி உண்டு. வரணி, சாவகசேரி டச்சு வீதி, புத்தூர், மீசாலை வீதி, கண்டி , யாழ்ப்பாணம், நெடுஞ் சாலை, மீசாலை, கச்சாய் வீதி ஆகிய பெருந்தெருக்களாகும். இவை களை இணைக்கும் பல குறுக்கு வீதிகளும் உள்ளன. சங்கிலியனின் ஆட்சிக்கும் மீசாலைக்கும் தொடர்பு இருப்ப தாகக் கதைகள் உண்டு. அவை ஆய்வு செய்யப்படு கின்றன.

ஏறத்தாழ 1250 குடும்பங்களைக் கொண்ட இக்கிராமத்தில் 5000 மக்கள் வரை வாழ்கின்றனர். எழுத்தறிவு இல்லா தவர்கள் உண்டெனினும் அனுபவ அறிவு நிறைந்துள்ளனர். கல்வியில் பாண்டித்தியம் அடைந்தோர் குறைவென்றாலும் பள்ளி சென்றவர்கள் தொகை அதிக மாகும். பயபக்தியோடு பழகிடும் பண்பாட்டுடன் பகட்டு அதிகம் இல்லாத எளிமை மிக்க மக்கள் வாழும் ஊர் மீசாலை.

**விதையில் வண்டிருக்கும் செம்பாட்டான் பழம்**

மீசாலை என்பது மீன்சாலை குறுகி மீசாலை ஆனதென்றும் மாசாலை என்றதில் அரவு மக ரத்தின் மேலே றிய மாற்றத் தால் மீசாலை என்று வந்த தென்றும் கதைகள் உண்டு. ஆதா ரம் பெரிதாக ஒன்றுமில்லை.


மீசாலை கிழக்கில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்பவர்கள் உண்டு. அக் கிராமத்தில் ஊர் மாமரங்கள் பல இருந்தன. பல மிக இனிப்பானவை, சில புளிப்பானவை, பெரிய கமுகம் பாக்களவு பழங்கள் உடையனவும் உண்டு

மீசாலை சோலையம்மன் கோயில் ஆனது சாதாரண கோயில்களைப் போல் அல்லாது பிரமிப்பாகவும் வியப்பாகவும் அத்தகைய இயற்கைச் சூழலில் அமைந்திருக்கிறது அக்கோயில். பெயருக் கேற்றால் போலவே அக் கோயிலை கருநாவல், கிஞ்சா, கூகைமா, மகிழமரம் போன்ற மரங்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்திருந்தது. அங்குள்ள இயற்கைச் சூழல் ஒருவிதமான அமைதியை அளிக்கக் கூடியது. கோயிலின் சூழலில் அமைந்திருந்த ஆலமரமும் அதுசார் பகுதியும் இக் கோயிலுக்கு மேலும் அழகை கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இம்மட்டுக்கும் கோயிலின் அமைப்பும் அளவும் பாரியதாக இல்லையாயினும் இங்கிருக்கும் இயற்கையே கோயிலுக்கு பிரமிக்கத் தக்க வடிவையும் சிறப்பையும் வழங்கியுள்ளது.

மீசாலை சோலையம்மன் கோயில் இவ் வாலயத்தின் தோற்றுவாய் பற்றி சரியாக அறிய முடியவில்லை ஆயினும் கி.பி. 1600 ஆம் ஆண்டிலிருந்து இக் கோயிலின் வரலாறு குறித்த சான்றுகள் கிடைக்கப் பெறுகின்றமை குறிப்பிடதக்கது




## யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை
## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2014 இல் சாதனை படைத்தோர்












# ஆலயங்களில் மிருக பலியிடலைத் தவிர்க்க அரச அதிபருக்கு எழுத்து மூல ஒப்புதல்

(யாழ்ப்பாணம்)

ஆலயங்களில் மிருகபலியிடலை மேற்கொள்வதில்லை என்ற எழுத்து மூல ஒப்புதல் ஒன்று குறித்த ஆலயங்களின் நிர்வாகிகள் யாழ். அரச அதிபருக்கு வழங்கியுள்ளனர்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி மிருகங்களைப் பலியிடும் ஆலய நிர்வாகிகளுக்கென யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பொன்றிலேயே இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர ஞான சம்மந்த பரமாச்சாரீய சுவாமிகள் சின்மையா மிஷன் யாழ். வதிவிட ஆச்சாரி மற்றும் ஆறுதிருமுருகன் துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எல்லா உயிர்களையும் நேசிக்க வேண்டும் மிருக பலியிடல் இந்து மதத்தின் கோட்பாட்டுக்கு விரோதமானது,இது நாகரிகமற்ற ஒரு செயல் மிருகங்களைப் பலியிட்டு அவற்றை ஏலம் விடுவது பாதகமான செயலென இச்சந்திப்பில் கலந்து கொண்ட மதகுருமார்கள் எடுதது்க் கூறினர்.

அனைத்துக் கருத்துக்களையும் செவிமடுத்த ஆலய நிர்வாகத்தினர் இறுதியில் இந்த பலியிடலை தொடர்ந்து முன்னெடுப்பதில்லை என்ற தீர்மானத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இதற்கான ஒப்புதலை வழங்க ஒருசில ஆலய நிர்வாகிகள் ஆலய பொதுமக்களுடன் கலந்துரையாடி நல்ல முடிவுக்கு வருவதாகத் தெரிவித்தனர்.

இது விடயத்தில் அனைத்து ஆலயங்களும் ஒரு முடிவுக்கு வர எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதாக யாழ்.அரச அதிபர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூக்குக்கண்ணாடி வழங்கல்



(புதுக்குடியிருப்பு)

காலம் சென்ற சிவமணி செல்வராசாவின் ஞாபகார்த்தமாக மூக்குக்கண்ணாடி நிகழ்வு புதுக்குடியிருப்பு ஆதிபராசக்தி ஆலய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. லண்டனில் வசிக்கும் சி.தவசீலனின் அனுசரணையுடன் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் வைத்திய கலாநிதி சி. சிவமோகன் கலந்து கொண்டு இலவச மூக்குக்கண்ணாடிகளை வழங்கி வைத்தார்.

குறித்த நிகழ்விற்கு பெருந்திரளான மக்கள் வருகை தந்ததுடன் தங்களின் கண்களை பரிசோதித்து தங்களுக்குரிய மூக்குக் கண்ணாடிகளையும் பெற்றுக்கொண்டனர். (40)

## திருமறைக்கலாமன்றின் ஆடித்திங்கள் பொற்தூறல்

(யாழ்ப்பாணம்)

பொன் விழா ஆண்டை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடாத்தி வருகின்ற பொற்தூறல் நிகழ்ச்சித் தொடரின் இம்மாதத்துக்கான நிகழ்வு ஆடித்திங்கள் பொற்தூறல் என்னும் பெயரில் நாளை மாலை 6.30 மணிக்கு, இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில். அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர், பேராசிரியர் ஏ.என்.கிருஸ்ணவேணி கலந்து சிறப்பிக்கவுள்ளார் நிகழ்சிகளாக அ.அமிர்தலோஜனன் மற்றும் அ.அமிர்த சிந்துஜன் ஆகியோரின் இசைகச்சேரியும் திருமறைக் கலாமன்ற இசைநாடகப்பிரிவு வழங்கும் குசேலர் இசை நாடகமும் இடம்பெறும்.

## பதிவிறக்கப் பெட்டகம்

தமிழ் ஒற்றுமை என்பதற்கு ஒரேயொரு வரைவிலக்கணம் தான் இதுவரை இருந்துள்ளது. அதாவது, எல்லாத் தமிழரும் [அதாவது, வடக்கிலும் கிழக்கிலும் தமிழரை பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரே கட்சி என்று உரிமை கோருகிற கட்சி, வேட்பாளர்களை நிறுத்தியுள்ள தொகுதிகளில் வாக்குரிமையுடைய தமிழர்கள் எல்லாரும்] ஒற்றுமையாக அவர்களுடைய 'ஏகப்பிரதிநிதிகட்கு' வாக்களிக்க வேண்டும். அதன் பிறகு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று கேட்கப்படாது. மீளக் கேட்பவர் எவராயினும் அவர் தமிழரின் ஒற்றுமையைக் குலைக்க வந்த இனத் துரோகி, குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு, எட்டப்பன், காக்கை வன்னியன் என உணர வேண்டும். இது தமிழ்ச் சமூகத்தின் தலைவிதி.

– கோகர்ணன்

இலங்கையில் வாழும் மக்களின் பிரச்சினைகள் பொதுவானவை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுவதற்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறுவதற்கும் இடையே பாரிய வேறுபாடுகள் இல்லை.

தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் திருகோணமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பித்தது அமரர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தான். அத்துடன் திருகோணமலை மாவட்டத்துக்கான அரசாங்க அதிபரையும் சிங்களவராக நியமித்ததும் ஜே.ஆர்.தான். ஆனால் அப்போது எதிர்க்கட்சியாக இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதனை எதிர்த்தது. ஆனால் 1994ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான சந்திரிகாவின் பொதுஜன மக்கள் முன்னணி அரசாங்கம் சிங்கள அரசாங்க அதிபரை மாற்றி தமிழர் ஒருவரை நியமிக்கவில்லை.


அதேபோன்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங் கத்தில் ஜனாதிபதியாக பதவி வகித்த மகிந்த ராஜபக்ஷ முற்று முழுதாக தமிழ் மக்கள் வாழுகின்ற வவுனியா, மன்னார் மாவட்டங்களில் சிங்கள அரசாங்க அதிபரை நியமித்தார். 2015ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி நல்லாட்சி என்று ஆட்சிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் ஆறு மாதங்களாகவும் மாற்றங்கள் எதனையும் செய்யவில்லை. இரண்டு மாவட்டங்களின் அரச அதிபர்களையும் தமிழர்களாக நியமிப்போம் என்று ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்குறுதி வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்ததும், வடக்கு – கிழக்கு மாகாணத்தை தொடர்ந்தும் இராணுவ நிர்வாகத்திலேயே நடத்தி வருகிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மக்கள் பிரச்சினை என்று கூறி தமிழர்களின் அரசியல் பிரச்சினையை பத்தோடு பதினொன்றாக மாற்றவே முற்படுகின்றனர்.

– அ.நிக்ஸன்

இலங்கையின் ஆளும் தரப்புகளாக அரங்கிற்கு வந்தவர்களும் அவர்களுடன் இணங்கி நின்றவர்களும் இலங்கையின் உயர் வர்க்க உயர் சாதிய மேட்டுக்குடி வழி வந்தவர்களே என்ற உண்மை ஜனநாயகம் என்ற மாயத்திரையால் மூடி மறைக்கப்பட்டுள்ளது. இந்த ஜனநாயகம் என்பது மக்களது பங்குபற்றல் ஜனநாயகம் அல்லளு வெறும் புள்ளடி மூலமான பிரதிநிதித்துவ ஜனநாயகமே ஆகும். இதனால் வாய்ப்பு வசதிகள் இலாபங்கள் அடைந்தவர்கள் ஒரு சிறு தொகையினரான மேற்தட்டினரே ஆவர். இவர்கள் எவரும் தாங்கள் பேசி முழங்கிய இன, மத, மொழி, பிரதேச எல்லைகளுக்குள் நின்று மக்கள் நலன்களுக்காகப் பணியாற்றியவர்கள் அல்லர். வாக்குகளைப் பெறுவதற்காக இனவாதம், இனவெறி, பிரதேசவாதம் கிளப்பி மக்களை இனஉணர்வு உசுப்பேற்றி விட்டு பாராளுமன்றத்தில் சிங்கள ஆளும் வர்க்க சகபாடிகளோடு உறவாடித் தத்தமது காரியங்களைச் சாதித்தவர்களாகவே இருந்து வந்துள்ளனர்.

இதன் காரணமாகவே இந்நாட்டில் இன, மத, மொழி, பிரதேச அடிப்படையிலான அடையாள அரசியல் மேலே கொண்டுவரப்பட்டது. அது மக்களைப் பிளவுபடுத்தி மோதலுக்குள்ளாக்கும் அரசியலாக வளர்ந்தது. தெற்கே சிங்கள–பௌத்த மேலாதிக்கப் பேரினவாத அரசியலாகியது. வடக்கு, கிழக்கிலே தமிழ்த் தேசியம் என்ற பெயரிலும் குறுந்தேசிய வெறுப்புணர்வுகள் தமிழ் மக்களுக்கு ஊட்டப்பட்டன. வெறும் பிரதிநிதித்துவம் என்ற பெயரில் எல்லா இனங்கள் மத்தியிலும் இனக்குரோதங்களும் பரஸ்பர வெறுப்புகளுமே விதைக்கப்பட்டு இன்று அவை அறுவடையாக்கப்பட்டு வருகின்றன.

வெள்ளி நற்சிந்தனை...



## தர்மத்திற்கு இரண்டு வடிவங்கள் - 2

தர்மத்திற்கு இரண்டு சொரூபங்கள் உண்டு. ஒன்று சனாதன தர்மம் மற்றது யுக தர்மம். சனாதன தர்மமென்பது எல்லா யுகங்களுக்கும் பொதுவானவை யுக தர்மம் காலத்துக்கேற்றவாறு மாறியமைகிறது. இராம கிருஷ்ண பரமகம்சர் இதனை ஓர் உபமானத்தின் மூலம் விளக்குகிறார்.

பொன் ஒரு விலையுயர்ந்த பொருள், எல்லாக் காலங்களிலும் அதற்கு மதிப்புண்டு. அந்தப் பொன்னினால் செய்யப்படும் காசுக்கு ஒவ்வொரு மன்னர் காலத்திலும் ஒரு புதிய முத்திரை வந்து விடுகிறது. ஒரு மன்னர் காலத்திலும் ஒரு புதிய முத்திரையை மற்றொரு மன்னர் காலத்தில் அங்கீகரிக்கப்படுவதில்லை. பொன்னுக்கு மதிப்பிருக்கும் பொற்காசு மட்டும் செல்லுபடியாகாது.

சனாதன தர்மம் என்பது பொன்னைப் போன்றது அது உருவெடுக்கும் வெவ்வேறு முத்திரைகளைப் போன்றது. யுக தர்மம் ஒரு யுகத்திற்கு உதவுகின்ற தர்மம் இன்னொரு யுகத்திற்கு உதவாமல் போய்விடக் கூடும். எந்த யுகத்தில் என்ன தர்மத்தை சிறப்பாக அனுஷ்டிக்க வேண்டுமென அந்த காலத்தில் வரும் பெரியோர்கள் வழிகாட்டியுள்ளனர்.

உங்களிடமே நீங்கள் நம்பிக்கை வையுங்கள் ஒரு காலத்தில் நீங்கள் வேத காலத்தை சேர்ந்த ரிஷியாக இருந்தீர்கள் இப்போது நீங்கள் வேறு வித வடிவம் தாங்கி வந்திருக்கிறீர்கள் அவ்வளவு .தான் விடயம்.எங்கள் அனைவரிடமும் எல்லையற்ற ஆற்றல் புடி கொண்டிருப்பதை ட்ட பகல் வெளிச்சத்தைப் போல அவ்வளவு தெளிவாக நான் பார்க்கிறேன்.

ஆடைகளை வரித்துக் கட்டிக்கொண்டு உங்கள் இதயத்தையும் ஆத்மாவையும் முழு அளவில் ஈடுபடுத்தி பணிகளில் மும்முரமாக அளவில் ஈடுபடுங்கள்.நிலையில்லா எந்தப் பொருளையும் புகழையும் வைத்துக் கொண்டு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் நான் என்ன நினைக்கின்றேன் என்று உங்களுக்குத் தெரியுமா? முத்தி, மோட்சம் இவை பற்றி உங்களுக்கு தெரியுமா? பொருட்படுத்தவேயில்லை உங்கள் அனைவருடைய உள்ளத்திலும் இத்தகைய எண்ணங்களை எழுப்பி விடுவது தான் என் வாழ்க்கையின் குறிக்கோள் ஒரே ஒரு மனிதனுக்கு நல்ல வழியை பயிற்சி அளிப்பதற்காக நூறாயிரம் பிறவிகளை எடுப்பதற்கும் நான் தயாராக இருக்கிறேன்.

சுயநலம், சுயநலம் இல்லாமை என்பவற்றைத் தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. கடவுளுக்குத் தெரிந்த அளவுக்கு சாத்தானுக்கும்எல்லாம் தெரியும் கடவுளுக்குச் சமமான ஆற்றல்கள் சாத்தானுக்கும் உண்டு. ஆனால் தெய்வீகத் தன்மையும் கருணையும் அதனிடம் இல்லை எனவே அது சாத்தானாக இருக்கிறது.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் அரச நிறுவனங்களில் நியமனம்

## தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், சில அரச நிறுவனங்களில் நியமனங்கள் வழங்கப்படுவதாக தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கீழுள்ள கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கு சொந்தமான புல்மோட்டையில் அமைந்துள்ள இலங்கை கனிமவள நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி கடந்த சில நாட்களாக வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

புதிய நியமனங்கள் வழங்குவது தொடர்பில் விடுக்கப்பட்ட அழுத்தத்தினால் தாம் நோய் வாய்ப்பட்டதாக அவர் கூறினார்.

புல்மோட்டை கனிமவள நிறுவனத்தின் நிர்வாக அதிகாரியான அனுலா திலகரத்ன, புதிய நியமனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 50 பேரளவில் வருகை தந்திருந்ததாகவும் அவர்கள் தனக்கு அழுத்தம் கொடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 5 ஆம் திகதி அமைச்சில் இருந்து தொலைநகல் ஊடாக 50 நியமனக்கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அதில் எவ்வாறு கையொப்பமிடப்பட்டுள்ளது என தலைவர் என்னிடம் வினவினார். தலைவருக்கு பதிலாக என அதில் கையொப்பமிடப்பட்டுள்ளதாக நான் தலைவரிடம் கூறினேன். நான் அவ்வாறு கையொப்பமிடவில்லை என தலைவர் கூறினார். அவ்வாறு கையொப்பமிடப்பட்டுள்ளவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என அவர் எனக்குத் தெரிவித்தார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் புதிய நியமனங்களை பெற்றுக் கொள்வதற்காக 50 பேரளவில் வருகை தந்திருந்தனர். அவர்கள் தமக்கு நியமனங்களை வழங்குமாறு எனக்கு அழுத்தம் விடுத்தனர். பொலிஸார் வருகை தந்தே என்னை வெளியே அழைத்து வந்தனர். அது உளரீதியில் எனக்கு பாதிப்பை ஏற்படுத்தியது.

இந்த நியமனங்கள் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தாம் நோய் வாய்ப்பட்டிருந்ததாக புல்மோட்டை கனிமவள நிறுவனத்தின் தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர் மகிந்த மொரகொல்லவும் தெரிவித்தார்.

அதில் செயற்பாட்டு பணிப்பாளர் கையொப்பமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சின் ஊடாக சிறிது காலத்திற்கு முன்னர் வழங்கப்பட்ட சில நியமனங்களுக்கே தாம் கையொப்பமிட்டதாக செயற்பாட்டுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை, புல்மோட்டை கனிமவள நிறுவனத்திற்கு 120 ஊழியர்கள், முறையற்ற வகையில் கடந்த மாதம் 25 ஆம் திகதி தற்காலிக ஊழியர்களாக இணைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை ஊழியர் சேவை சங்கம் அறிக்கையொன்றின் மூலம் அறிவித்துள்ளது.


கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீனால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு அவசரமாக நியமிக்கப்படும் அளவிற்கு குறித்த நிறுவனத்தில் ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படவில்லை எனவும், இந்தச் சம்பவத்தினால் 450 நிரந்தர ஊழியர்கள் குழப்பமடைந்துள்ளதாகவும் அகில இலங்கை ஊழியர் சேவை சங்கம் கூறியது.

அவ்வாறான வகையில் நியமனங்கள் வழங்கப்பட முடியாது என தேர்தல்கள் ஆணையாளரினால் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நகைச்சுவை நடிகர்களாக மாறிவரும் அரசியல்வாதிகள்

### ரவூப்ஹக்கீம் கிண்டல்



(கொழும்பு)

நடிகர்கள் அரசியல்வாதிகளாகவும், அரசியல்வாதிகள நகைச்சுவை நடிகர்களாகவும் மாறி வருவதாக அமைச்சர் ரவூப ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சில நடிகர்கள் அரசியலுக்கு வந்த சிறந்த அரசியல்வாதிகளாக மாறுகின்றனர். எனினும், சில அரசியல்வாதிகள் நகைச்சுவை நடிகர்களாக மாறியுள்ளமையை இன்றைய சூழ்நிலையில் காணக்கிடைக்கின்றது.

குறிப்பாக எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் அதிகாரத்தை இழந்ததன் பின்னர் இன்று கோமாளிகளாக நடித்துக் கொண்டு நாடு முழுவதிலும் செல்கின்றார்கள். இது ஓர் சோகமான நிலைமையாகும்.

அரசியல்வாதிகள் இவ்வாறான நிலைக்கு விழக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரணிலின் பதாகைகளை அகற்றுமாறு உத்தரவு



(கொழும்பு)

தனது உருவப்படத்துடன் வைக்கப்பட்டுள்ள கட்டவுட்களை அகற்றுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உத்தரவிட்டுள்ளார். தமது உருவப்படத்துடன் கூடிய சகல கட்டவுட்களும் 100 நாள் திட்டத்தின் முன்னேற்றம் குறித்த கட்டவுட்கள் மற்றும் ஏனைய கட்டவுட்களும் அகற்றப்பட வேண்டும். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னதாக கட்டவுட்கள் அகற்றப்பட வேண்டுமென பிரதமர் அறிவுறுத்தியுள்ளார் என பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தாம் பயன்படுத்தி வரும் குண்டு துளைக்காத வாகனத்திற்கு தேர்தல் காலத்தில் கட்டணம் செலுத்தத் தயார் என ரணில் விக்கிரமசிங்க தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாகன விபத்தில் இராணுவ வீரர் பலி

திருக்கோவில் தம்பட்டைடபிரதானவீதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இராணுவவீரர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். இவ்விபத்தில் அநுராதபுரம் நாச்சியாதீவைச் சேர்ந்த சமன் சிறி பிரேமவன்ச (48 வயது) என்ற இராணுவவீரரே உயிரிழந்துள்ளார். பொத்துவில் பிரதேசத்திலுள்ள மரணவீடொன்றுக்குச் சென்று அநுராதபுரம் திரும்பும் வழியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறி வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதியதில் லொறியில் முன்னால் இருந்து பயணித்த இராணுவ வீரர் உயிரிழந்துள்ளார். குறித்த இராணுவீரரின் சடலம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து இடம்பெற்றபோது, லொறிச் சாரதி நித்திரைக் கலக்கத்தில் இருந்திருக்கலாம் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். லொறியின் சாரதியை கைதுசெய்ததுடன் லொறியையும் கைப்பற்றியுள்ளதாகவும் இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பொதுத்தேர்தலுடன் ஆட்சிமாற்றம் நிச்சயம்

## சுசில் பிரேமஜயந்த நம்பிக்கை



இம்முறை பொதுத் தேர்தலுடன் நிச்சயமான ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படும். மீண்டும் எமது அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றும். இதில் எந்த சந்தேகமும் இல்லை. நாம் மீண்டும் ஆட்சியமைத்தால் சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்ளத் தயார் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியின் செயலாளருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்தரக் கட்சியினால் நேற்றுமுன்தினம் நடாத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை வெளிவருவது தொடர்பில் எமது ஆட்சியில் இருந்தே அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுவந்தன. ஆனால் நாம் எமது ஆட்சியில் சரியான முறையில் சர்வதேச அழுத்தங்களுக்கு முகம் கொடுத்தோம். இவ்வருடம் மார்ச் மாதம் ஐ.நா. விசாரணை அறிக்கை வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டது. எனினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் நிலைமைகளும் சற்று மாற்றமடைந்துள்ளன.


புதிய அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவின் தலைமை உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி மார்ச்சில் வெளிவரவிருந்த விசாரணை அறிக்கையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரையில் பிற்போட வலியுறுத்தினார். அதற்கமைய எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இந்த அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிடவுள்ளது.

ஆனால் இந்த அறிக்கை தொடர்பில் முழுமையான தாக்கத்தையும் புதிய அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். சர்வதேச நாடுகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் ரணில் தலைமையிலான புதிய அரசாங்கத்துக்கே தெரியும். எவ்வாறான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன? ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்புடன் எவ்வாறான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன என்பது எமக்குத் தெரியாது. ஆகவே இந்த அரசாங்கமே இவற்றைக் கையாள வேண்டும்.

அவ்வாறான நிலைமையில் சர்வதேசம் மீண்டும் எமது அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுக்க முயற்சிகளை எடுக்கும் என்பது எமக்குத் தெரியும். ஆகவே இந்நிலையில் எந்த அழுத்தங்களுக்கும் நாம் முகம்கொடுக்க தயாராகவே உள்ளோம் என்றார்.

# எதிர்காலத்தை நோக்கிச்செல்ல இலங்கைக்கு சிறந்த சந்தர்ப்பம்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொள்கை சார்ந்து செயற்படும் போதே வரலாறு உருவாக்கப்படும். எதிர்காலத்தை நோக்கிச் செல்ல இலங்கைக்கு தற்போது பெறுமதிமிக்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இலங்கையின் சமூக சுட்டெண் சிறந்த இடத்தில் உள்ளது. நாட்டின் அரசியல் சுதந்திரம் சரியான விதத்தில் இருக்கும் போதே நாடு ஒன்றின் சுதந்திரம் முழுமையாகும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக்கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் பொருளாதார சுதந்திரம், சமூக சம நிலையை சரியான முறையில் முன்னெடுப்பதும் இதற்கு அவசியமான தாகும். இவற்றில் இலங்கை வலுவின்றிய நிலையிலேயே உள்ளது.

அதிகாரத்திற்கு பின்னால் சென்று கொண்டு எப்படியாவது அதிகாரத்தை பெறுவதற்காக நடவடிக்கைகள் மூலமான முன்னுதாரணத்தால் அந்த எதிர்காலத்தை எம்மால் கட்டியெழுப்ப முடியாது.

இதனை வெற்றிகொள்ள முதலாம் உலக நாடுகளான அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, ஜப்பான் போன்ற எந்த நாடுகளுக்கும் முடியாது போயுள்ளது.

முன்னேற்றமடைந்த சமூகத்திற்கு ஏற்ற முன்னேறிய அரசியல் ஒன்றைக் கட்டியெழுப்ப வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# திஸ்ஸ, டிரான் அலஸ் தேசியப்பட்டியலில்?

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் இருவரையும் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றுக்கு உள்வாங்குவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்கு தேசியப் பட்டியல் உறுப்புரிமை வழங்குவதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிக விருப்பம் கொண்டுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது டிரான் அலஸின் "மவ்பிம" பத்திரிகை மகிந்தவுக்கு ஆதரவாக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.


# க.பொ.த(சா/த) மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை
# G.C.E. (O/L) Examination model Paper
## ( 1 புள்ளி, 2 புள்ளி திட்ட வினாக்கள் )

ஆசிரியர் : த.சுஜிகரன்

பகுதி I

## கணிதம்

01. உருவில் A, B யினால் காட்டப்படும் நேர்கோட்டின் சமன்பாடு யாது?




02. $\frac{1}{2}y = x + 1$ என்னும் நேர்கோட்டின் படித்திறன், வெட்டுத்துண்டு யாது?

03. 6000ஐ நியமவடிவில் தருக?

04. 685.5 என்பதை விஞ்ஞான முறைக்குறியீட்டால் தருக?

05. 0.0021 என்பதை விஞ்ஞான முறைக்குறியீட்டால் தருக?

06. $2.0 \times 10^3$ என்பதை சாதாரண முறையில் தருக?

07. $7.23 \times 10^{-2}$ என்பதை சாதாரண முறையில் தருக?

08. 2888 என்பதை
   i. கிட்டிய 10இற்கு மட்டந்தட்டுக?
   ii. 100 இற்கு மட்டந்தட்டுக?

09. 2.835 என்பதை
   i. கிட்டிய 1ம் தசமத்திற்கு மட்டந்தட்டுக
   ii. கிட்டிய முழு எண்ணிற்கு மட்டந்தட்டுக

10. 2.867 என்பதை
   i. கிட்டிய 2ம் தசமத்திற்கு மட்டந்தட்டுக
   ii. கிட்டிய முதலாம் தசமதானத்திற்கு மட்டந்தட்டுக

11. ரூபா 500 இன் $\frac{2}{5}$ எவ்வளவு?

12. சுருக்குக $(-2) + (-3)$

13. சுருக்குக $(-2) \times (-4)$

14. சுருக்குக $(-2) \times 3$

15. $(-2) \times (-4) \times (-2)$ ஐ சுருக்குக

16. சுருக்குக $8 - (-3)$

17. சுருக்குக $(2-2)^3$

18. சுருக்குக $(-5)^3$

19. சுருக்குக $\frac{(-2)^1 \times (-2)^3}{(-2)^4}$

20. சுருக்குக $\frac{(-5)^3 \times (-2)^2}{(-5)^2}$

21. சுருக்குக $(-3)^2$

22. சுருக்குக $(-3) + 5$

23. சுருக்குக $8 + (-5)$

24. சுருக்குக $8 \times (-4)$

25. பெறுமானம் காண்க $(-2)^5$

26. சுருக்குக $0.22 \times 1.5$

27. சுருக்குக $(-20) \div (-5)$

28. $\sqrt{9}$ இன் பெறுமானம் யாது?

29. $\sqrt{64}$ இன் பெறுமானம் யாது?

30. $\sqrt{625}$ இன் பெறுமானம் யாது?

31. 20 இலும் குறைந்த முக்கோண எண்கள் 03 தருக?

32. வெற்றுக் கூட்டத்திற்கு பொருத்தமான பெறுமானம் காண்க
   3 : 4 = 12 : ☐

33. வெற்றுக் கூட்டத்திற்கு பொருத்தமான பெறுமானம் காண்க?
   5 : ☐ = 25 : 20


34. மணிக்கு 96 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் புகையிரதம் 10 நிமிடங்களில் செல்லும் தூரம் எவ்வளவு?

35. ரூபா 300 இற்கு வாங்கிய பொருள் 25% இலாபத்துடன் விற்கப்பட்டது. விற்ற விலையை காண்க

36. 16g தங்கத்தின் விலை ரூ.96000 ஆகும் 20g தங்கத்தின் விலை யாது?

37. ஒரு மோட்டார் சைக்கிள் $1\frac{1}{2}$ மணித்தியாலயத்தில் 120km தூரம் செல்லும் அதன் வேகத்தை km / h இல் தருக?

38.




தரப்பட்டுள்ள உருவிலே $2y = x + 10$, $x = 5$ ஆகியவற்றின் வரைபுகள் காட்டப்பட்டுள்ளன அதனைப் பயன்படுத்தி C, D என்பவற்றின் ஆள்கூறுகளை காண்க

39. ரூபா 1500 இன் 2/5 எவ்வளவு?

40. வர்த்தகர் ஒருவர் ஒரு குறித்த பொருளை ரூ 3360 இற்கு விற்கும் போது 20% இலாபம் கிடைக்கின்றது. இதன் கொள்விலையைக் காண்க

41. ஒரு பொருளின் கொள்விலை ரூ 4200, விற்பனை விலை ரூ 5000 எனின்
   I. அவர் பெறும் இலாபம் எவ்வளவு?
   II. பெறும் இலாப சதவீதம் யாது?

42. வர்த்தகர் ஒருவர் ரூ 9000இற்கு தேங்காய்களை வாங்கினார். அதில் ஒரு பகுதி பழுதடைந்து விட்டது. எஞ்சிய தேங்காய்களை விற்பதன் மூலம் 3% நட்டம் ஏற்படுகின்றது. இவ்வாறு தேங்காய்களை விற்பதன் மூலம் அவருக்கு கிடைக்கும் பணத்தைக் காண்க?

43. கடிகாரம் ஒன்றை 20% சதவீதம் இலாபம் வைத்து விற்கும் போது அதன் விற்பனை விலை ரூ 2400 எனின் கொள்விலையைக் காண்க?

44. ரூ 8500 என விலை குறிக்கப்பட்டுள்ள பொருள் ரூ 8100 இற்கு விற்கப்படுகின்றது இங்கு வழங்கப்பட்டுள்ள கழிவு சதவீதத்தை காண்க

45. தரகர் ஒருவர் குறித்த காணியை விற்பதற்காக விற்பனை விலையில் 5% தரகராக அறவிடுகிறார். விற்பனை விலை 500, 000 எனின்
   I. பெறும் தரகுப்பணம் எவ்வளவு?
   II. காணி உரிமையாளருக்கு கிடைக்கும் பணம் எவ்வளவு?

46. ரூ 50,000 பணத்தை 12% எளிய வட்டிக்கு கடனாக பெறும் ஒருவர் 3 வருட முடிவில் கடனில் இருந்து விடுபடுகின்றார். எனின் அவர் திருப்பி செலுத்த வேண்டிய மொத்தப்பணம் யாது?

47. ரூ 5000 ஐ கடனாக பெற்ற ஒருவர் ஓர் ஆண்டிற்கு பின்னர் 5900 ஐ கொடுத்து கடனில் இருந்து விடுபடுகின்றார். அவர் கொடுக்க வேண்டிய வட்டி யாது?

48. ரூ 15000ஐ கடனாகப் பெற்ற ஒருவர் ஒரு வருட முடிவில் செலுத்திய வட்டி ரூ 1125 எனின் அவர் செலுத்திய வட்டி வீதம் யாது?

49. ரூ 50,000ஐ வங்கி ஒன்றில் கடனாகப் பெற்ற ஒருவர் 2 ஆண்டுகளின் இறுதியில் கடனில் இருந்து விடுபடுகையில் ரூ 14,000 ஐ வட்டியாக கொடுத்தார். எனின் கடனிற்காக வங்கி அறவிட்ட வட்டி சதவீதம் யாது?

50. ரூ 25,000ஐ 8% ஆண்டு வட்டிக்கு கடனாகப் பெறும் போது எவ்வளவு காலத்திற்கு வட்டி ரூ 4000 ஆகும்

51. ரூ 100இற்கு மாதவட்டி ரூ 2 எனின் வட்டி சதவீதம் யாது?

52. வங்கி ஒன்றில் இருந்து ரூ 60,000ஐ 15% எளிய வட்டிக்கு கடனாகப் பெறும் ஒருவர் வட்டியாக ரூ 9000ஐ செலுத்துகின்றார். இவ்வட்டி எவ்வளவு காலத்திற்கு ஆகும்.

53. நிதிக்கம்பனி ஒன்று 16% எளியவட்டிக்கு கடனை வழங்குவதன் மூலம் ஓர் ஆண்டில் ரூ 224,000ஐ வட்டியாக பெறுகின்றது. அக்கம்பனி கடனாக வழங்கியுள்ள பணத்தைக் காண்க?

54. ஒரு மாதத்திற்கு 18% ஆன கூட்டுவட்டிக்கு ரூ 5000ஐ கடனாக பெறும் ஒருவர் இரண்டாம் மாதத்தில் கொடுக்க வேண்டிய வட்டி முதல் மாதத்தில் கொடுக்க வேண்டிய வட்டியிலும் பார்க்க எவ்வளவால் கூடியது?

55. ஒருவர் 10% ஆண்டு எளியவட்டிக்கு ரூ 2500 ஐக் கடனாக பெறுகின்றார். 3 ஆண்டுகளின் இறுதியில் கடனில் இருந்து விடுபடுவதற்கு அவர் கொடுக்க வேண்டிய மொத்தப்பணத்தைக் காண்க?

56. மோகன் ரூ 20,000 ஐ முதலீடு செய்து ஒரு வியாபாரத்தை ஆரம்பித்தான். 6 மாதங்களுக்குப் பின்னர் கண்ணன் ரூ 25,000 ஐ முதலீடு செய்து அவ் வியாபாரத்திலேயே சேர்ந்தான். வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டு ஓர் ஆண்டிற்குப் பின்னர் அவர்களுக்கு ரூ 13,000 இலாபம் கிடைத்தது. அவர்கள் இருவரும் அத்தொகை பகிரப்பட வேண்டிய விகிதத்தை காண்க

57. ரூ 300 என விலை குறிக்கப்பட்டுள்ள குறித்த பொருள் ஒன்றை விற்கும் போது கடை A ஆனது 25% கழிவை கொடுக்கின்றது. ரூ 310 என விலை குறிக்கப்பட்ட அதே வகைப்பொருள் ஒன்றை விற்கும் போது கடை B 30% கழிவைக் கொடுக்கின்றது இப் பொருளை எக்கடையில் இருந்து வாங்குதல் மிகவும் இலாபகரமானது?

58. ஒரு பிரதேச சபை குறித்த ஒரு வீட்டுக்கு மதிப்பீட்டு வரியாக ஒரு காலாண்டுக்கு ரூ 280ஐ அறவிடுகின்றது. பிரதேச சபை வீட்டின் ஆண்டுப்பெறுமானத்தின் 7% ஐ மதிப்பீட்டு வரியாக அறவிடுகின்றது எனின் வீட்டின் ஆண்டுப்பெறுமதியைக் காண்க?

59. $a = 3$ எனின் $a^3$ பெறுமானம் யாது?

60. $x = \frac{1}{2}$ எனின் $2x$ இன் பெறுமானம் யாது?

61. $x = \frac{1}{2}$ , $y = \frac{1}{3}$ எனின் $2x + 3y$ இன் பெறுமானம் யாது?

62. $a = 3, b = \frac{1}{2}$ எனின் $2a + 3b$ இன் பெறுமானத்தைக் காண்க?

63. $x = -3, y = -3$ எனின் $x^2 + y^2$ இன் பெறுமானம் காண்க?

64. $x = 2,\ y = -4$ எனின் $2x^2 y$ இன் பெறுமானம் யாது?

65. சுருக்குக $(x+3)(x-3)$

66. சுருக்குக $(2p+1)(P+2)$

67. $(x+a)(x+b)$ ஐ சுருக்குக

68. சுருக்குக $(x+7)(x+3)$

69. காரணிகாண்க $5x^2 - 3125y^2$

70. காரணிகாண்க $72 - x - x^2$

71. காரணிகாண்க $x^2 + 1 + x^2 + x$

72. $a = 3$ எனின் $5a$ இன் பெறுமானத்தைக் காண்க

73. $x = 5$ எனின் $x^{-2}$ இன் பெறுமானத்தைக் காண்க

74. ஒருவர் 10% ஆண்டு கூட்டுவட்டியை கொடுக்கும் வங்கியின் கணக்கில் ரூ 12,000ஐ வைப்பு செய்கின்றார். 2 ஆண்டுகளில் இறுதியில் அவருக்கு உரிய மொத்த பணத்தைக் காண்க

75. $x = 5$ எனின் $x^2 - 2$ இன் பெறுமானத்தைக் காண்க

76. $a = 5, p = -3$ எனின் $2a^2 - 3P$ யின் பெறுமானத்தைக் காண்க

77. $s = ut + \frac{1}{2}at^2$ எனின் $u = 5, t = 2, a = 10$ எனின் s இன் பெறுமானத்தைக் காண்க

78. $x = 2$ எனின் $(x-1) + \frac{1}{3}(x+1)$

79. 4l பெற்றோலில் ஒரு வாகனம் 240km தூரம் செல்லும் எனின் 6l பெற்றோலில் எவ்வளவு தூரம் செல்லும்?

80. ஒரு அமெரிக்க டொலரின் விலை ரூ 141 எனின் 8 அமெரிக்க டொலரின் விலை யாது?

81. ஒரு அமெரிக்க டொலர் ரூ 138ஆகவுள்ள போது வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு சென்றுள்ள இலங்கையரின் மாதச்சம்பளம் 400 அமெரிக்க டொலர்களாகும். அவரின் மாதச்சம்பளத்தை இலங்கை ரூபாயில் காண்க

82. வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக

$x^{-10} = (x^{-5})^{\square}$

83. சுருக்குக $\frac{x^3}{y^2}$

84. சுருக்குக $(y^2)^0$

85. பெறுமானம் காண்க $\log_5 3125$

86. பெறுமானம் காண்க $\log_7 1$

87. பெறுமானம் காண்க $\log_3 27$

88. சுருக்குக $\frac{X^2 \times Y^2}{X \times Y}$

89. சுருக்குக $\frac{(XY)^3 \times X^{-2} \times Y^{-2}}{(XY)^{-1}}$

90. சுருக்குக $\frac{(2X)^3 \times X^{-3} \times Y}{8Y}$

91. சுருக்குக $(2X)^3 \times X^{-3} \times Y$

92. தீர்க்குக $\frac{2 - x}{5} = 4$

93. தீர்க்குக $3(3(x+2) = 2(x-1) - 0$

94 தீர்க்குக $2\left(\frac{2(a-1)+3}{2}\right) = 6$

95. ஒரு வட்டத்தின் பகுதி 44cm எனின் அவ்வட்டத்தின் ஆரை யாது?

96. 3.5cm ஆரையுடைய வட்டத்தின் பகுதி யாது?

97. (0,0), (2,3) ஆ ஆகியவற்றின் ஊடாக செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டை காண்க

98. (2,7), (4,13) என்னும் புள்ளிகளை தொடுக்கும் கோட்டின்

I. படித்திறன் யாது?

ii. சமன்பாடு யாது?

99. சார்பு $3y - 2x = 6$ இன் வரைபை வரையாமல்

I. x அச்சை வெட்டும் புள்ளி யாது?

II. y அச்சை வெட்டும் புள்ளி யாது?

100. 40km/h என்றும் கதியில் செல்லும் பேருந்து ஒன்று 2 மணித்தியாலயத்தில் செல்லும் தூரத்தை காண்க

101. $x > 2, x \leq 4$ என்னும் இரு சமனிலிகளையும் திருப்தியாக்கும் x இன் பெறுமானங்களை எழுதுக?

102. ஒரு குறித்த நாளில் 50 ஐக்கிய அமெரிக்கா டொலரிற்கு இலங்கை ரூபாவில் ரூ 5625 கிடைத்தது அன்று ஓர் ஐக்கிய அமெரிக்கா டொலருக்கான செலவாணி வீதத்தை காண்க

103. சுருக்குக $\left(\frac{64}{27}\right)^{\frac{2}{3}}$

104. 2: 3 = 6 : x எனின் x ன் பெறுமானத்தைக் காண்க

105. 4 தலையணை தைப்பதற்கு 2m துணி தேவை எனின் அதே துணியின் 5m இருந்து தைக்கப்படதக்க தலையணைகள் எத்தனை?

## சென்றவாரம் பிரசுரமாகிய க.பொ.த சா/த வினாக்களின் விடைகள்

01. $10110_{இரண்டு}$ 02. $1000010_{இரண்டு}$ 03. $1100100_{இரண்டு}$
04. $121_{நான்கு}$ 05. $10_{பத்து}$ 06. $13_{பத்து}$
07. $1000_{இரண்டு}$ 08. $10010_{பத்து}$ 09. $1010_{இரண்டு}$
10. $R = \frac{a^2 + h^2}{2h}$ 11. $s = \frac{v^2 + u^2}{2f}$ 12. $\frac{2(s - 46)}{t^2}$
13. $t = \frac{v - u}{u}$ 14. $L = \frac{T^2 \cdot 9}{4\pi^2}$ 15. $\frac{11}{12}$
16. 4 17. $\frac{2}{6}$ 18. $11_{இரண்டு}$
19. 80.00 20. $29_{பத்து}$ or $131_{நான்கு}$
21. $\frac{1}{3}$ 22. 0.33 23. $\frac{L - a + 1}{a}$ 24. I. 9 II. 11
25. $\frac{27}{500}$ 26. $x = 2$ 27. 2.745
28. $21_{பத்து}$ 29. வரைந்து காட்டுக 30. வரைந்து காட்டுக
31. எண்கோட்டில் குறிக்க 32. 1, 2, 3 33. $x > -2$
34. $x = (4, 5, 6)$ 35. -1, -2 36. x = இரண்டு A = 0, B = 1
37. $\frac{3P}{x + p}$ 38. $x \geq 1$ 39. 8 40. 11
41. $(1 + 1)^2 - a^2 = x$ 42. 15, 50
43. 51.5kg 44. $x = \frac{1}{2}$ 45. $\frac{1}{10}$
46. $x = 4$
47. 0.92 48. 7 49. $101011001_{இரண்டு}$
50. 1ம் தவணைப்பரீட்சை 51. $y = (2x - 1)$ 52. $(p - 2)(p + 2)$
53. $(x - 6)(x + 6)$ 54. $(2x - 5)(2x + 5)$
55. $2(x + 2)$ 56. $(1 + 2y)(3x + 1)$ 57. $(x + 2)(x + 3)$
58. $a(2 - a)$ 59. $a - (2b + 3)$
60. $(a - b)(a^2 + ab + b^2)$ 61. $(2x - 3)(x + 2)$
62. $(x + y)(x^2 - xy + y^2)$ 63. $y(2x + 1)$ 64. $3(a - 3)(a + 3)$
65. 50 66. 25 67. 9999 68. $x - \frac{14}{15}$
69. 3200 70. $x = a + y^2 - 3$
71. $x + 44(x - 44)$ 72. $(p - 5)(p + 5)$ 73. $3(a - 1)(a + 3)$
74. $2(x - 6)(x + 4)$ 75. $(x + 5)$ 76. $(x + Y)(x - Y)$
77. 960 78. $(x + 3)$ 79. -2
80. குறித்துக்காட்டுக 81. $y = 2$ 82. $x = -3$
83. $m = 2, C = -1$ 84. $m = -\frac{2}{3}, C = -\frac{1}{3}$ 85. $m = 2, C = \frac{7}{2}$
86. $m = 5\ C = 3$
87. - 2 88. $m = \frac{1}{3}, C = 5$
89. $3y = x - 6$
90. $y = 2x - 5$ 91. $(2x + y)(x - y)$ 92. 2
93. $y = 2x - 5$ 94. $y = \frac{1}{4}x - 2$ 95. $\frac{11}{12}$
96. $\frac{1}{3}$

## நேற்றுமுன்தினம் பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01) 01. மரங்கள், செடிகள், கொடிகள் 02. திறந்த வெளிகளில்
03. பச்சைக்கம்பளம் போர்த்தது போன்று 04. களனி
05. காட்சியளித்தன (02) 06. அறிவு நிரம்பியவர்கள் அதிகம் பேசமாட்டார்கள்
07. சண்டை செய்தல் (03) 08. “நீ அதைப்பார்த்தாயா?”என்று கேட்டான்
09. அது என்ன? (04) 10. பாலை / பால் 11. சிறிய
12. விரும்பி (05) 13. Rabbit 14. please give me your ball
(06) 15. நான் இந்த புத்தகத்தை வாசிக்கலாமா?
16. எனது தம்பியின் பெயர் வாசு 17. ஒயாட்ட ஒனே மொனவத?

| | | | | |
|---|---|---|---|---|
| 18. 1 | 19. 1 | 20. 2 | 21. 1 | 22. 3 |
| 23. 1 | 24. 1 | 25. 2 | 26. 1 | 27. 2 |
| 28. 3 | 29. 2 | 30. 3 | 31. 1 | 32. 2 |
| 33. 3 | 34. 2 | 35. 2 | 36. 1 | 37. 3 |
| 38. 1 | 39. 2 | 40. 1 | 41. 2 | 42. 1 |
| 43. 2 | 44. 1 | 45. 9909 | 46. 009001 | 47. 375.00 |
| 48. I. 60.00 | II. 5 | III. 8.50 | IV. 399.50 | 49. 1L 575ml |
| 50. 48 | | | | |

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை பிரசுரமாகும் க.பொ.த (சா/த) வினாத்தாளுக்கான விடைகள் யாவும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பிரசுரமாகும்.

# முழங்காவில் - கிளிநொச்சி வீதி சீரின்மையால் பயணிகள் அவதி

## உடன் புனரமைக்கக் கோரிக்கை

(கிளிநொச்சி)

ஏ 32 வீதியில் பல்லவராயன் கட்டு சந்தியிலிருந்து ஜெயபுரம், வன்னேரி, ஸ்கந்தபுரம் அக்கராயன் ஊடாக கிளிநொச்சி செல்லும் சுமார் 25 கிலோமீற்றர் நீளமான வீதி நீண்டகாலமாக திருத்தப்படாமையால் இவ்வீதியை பயன்படுத்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ்வரும் இவ்வீதியை குறிப்பாக பூநகரி தெற்கு வலயத்தின் கீழ்வரும் 9 கிராம சேவையாளர் பிரிவுகளை சேர்ந்த மக்கள் தமது அனைத்து போக்குவரத்துக்காகவும் இவ்வீதியை பயன்படுத்தி வருகின்றனர்.

கச்சேரி மூலமான பல்வேறு தேவைகள், விவசாயிகளின் நடவடிக்கைகளுக்கான உதவி கோரல், கல்வி அதிகாரிகளுடனான சந்திப்பு என அனைத்து தேவைகளுக்காகவும் இப்பகுதி மக்கள் கிளிநொச்சிக்கு வந்து செல்ல வேண்டிய நிலையில் இப்பகுதி மக்கள் வாழ்ந்து வருவதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

பலவருடங்களாக அவ்வப்போது கிரவல் மூலம் மாத்திரமே இந்த வீதி செப்பனிடப்பட்டு வந்த நிலையில் மழைக்காலங்களின் போது வெள்ள நீர்தேங்கி இவ் வீதி மேடுபள்ளங்கள் நிறைந்ததாகவே காணப்படுவதும இவ் விடத்தில் கவனத்துக்குரியது.

ஏ 32 வீதியில் இருந்து சுமார் 2 மணி நேரம் பயணித்து கிளிநொச்சிக்கு சென்றடையும் போது உடல்முழுவதும் தூசி படிந்த நிலையிலேயே இறங்க வேண்டியுள்ளதாக பிரதேசவாசி யொருவர் தெரிவித்த

இந்த சிரமங்களை தாங்க முடியாது ஏ 32 வீதியூடாக பூநகரி சென்று பரந்தன் ஊடாக சில சமயங்களில் 3 பஸ்களில் ஏறி இறங்க வேண்டியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வலைப்பாடு, கிளிநொச்சி பல்லவராயன்கட்டு, முழங்காவில் நாகபடுவான் நாச்சிக்குடா, ஜெயபுரம் வன்னேரி, ஸ்கந்தபுரம் அக்கராயன் ஆகிய இடங்களைச் சேர்ந்த 3000 இற்கு அதிகமான குடும்பங்களின் போக்குவரத்துக்கு இந்தவீதியே ஒரே மார்க்கமாகவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த வீதியை செப்பனிடுவது குறித்து பல தடவைகள் ஆளும்தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வலியுறுத்தி வந்துள்ளோம். கடந்த ஜனாதிபதி தேர்வுடன் இவ்வீதி திருத்தப்படும் என்கின்ற சொற்ப நம்பிக்கையும் போய்விட்டதாக அவர் தனது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார்.

இப்பகுதி மக்களின் நிலைமையைக் கவனத்தில் கொண்டு நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் தம்மை அடையாளப்படுத்தும் கட்சிகளோ வேட்பாளர்களோ இந்தவீதி விடயத்தில் மேலான கவனம் செலுத்தி உதவவேண்டுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மந்திகை சந்தைக்கு புதிய கட்டடம் திறப்பு



(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபையின் கீழ் வரும் புலோலி மந்திகை சந்தைக்கான புதிய கட்டடம் நாளைமறுதினம் 12 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு திறந்த வைக்கப்படவுள்ளது.

புறநெகும திட்டம், பருத்தித்துறை பிரதேசசபை மற்றும் அப்பிரதேச மக்களின் நிதிப்பங்களிப்புடன் இச் சந்தைக்கான நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

வடக்கு மாகாணசபை ஆளும் தரப்பு உறுப்பினர்கள் மற்றும் பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர்கள் இச்சந்தை திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டனர். (18)

# வாரியபொல யுவதியால் தாக்கப்பட்ட இளைஞர் குற்றவாளியென தீர்ப்பு

குருநாகல் வாரியபொல என்ற இடத்தில் வைத்து திலினி அமலகா என்ற யுவதியினால் தாக்கப்பட்ட இளைஞர் நேற்று குற்றவாளியாக இனங்காணப்பட்டார்

வாரியபொல நீதிமன்றம் அவரை குற்றவாளியாக இனங்கண்டது.

தம்மை, ரொபட் தசன்லேகே சந்திரகுமார என்ற இந்த இளைஞர், கேலி செய்ததாக கூறி திலினியால் வாரியபொல பேரூந்து நிலையத்தில் வைத்து தாக்கப்பட்டார்.

இது சமூக வலைத்தளங்களில் பிரசாரப்படுத்தப்பட்டது.

இந்தநிலையில் இது தொடர்பான வழக்கு நேற்று இடம் பெற்றபோது குறித்த இளைஞரை நீதிமன்றம் குற்றவாளியாக அறிவித்தது.

பாலியல் ரீதியான துன்புறுத்தல் என்ற அடிப்படையிலேயே அவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார்.

இதனையடுத்து அவருக்கான தண்டனை தீர்ப்பு எதிர்வரும் 29 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

# அடிப்படைக் கற்கைநெறி

க.பொ.த உயர்தரத்தில் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கு பொறியியல், விஞ்ஞானத் துறைகளில் பட்டம் பெறுவதற்கான அடிப்படைக் கற்கை நெறியொன்றை இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அறிமுகப் படுத்தியுள்ளது.

இந்த அடிப்படை கற்கை நெறியில் இணைந்த கணிதம், பௌதீகவியல், உளவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

க.பொ.த உயர்தரத்தில் பௌதீகவியல், இரசாயனவியல் பாடங்களில் சித்தியடைந்தோர் இணைந்த கணிதத்தைத் தெரிவு செய்து பொறியியல் துறையில் பட்டப்படிப்பினை தொடர முடியுமென அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நூல் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

யாழ். மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் நூல் வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று மு.ப 10 மணிக்கு பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி லீ.அருளையா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பளை முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.கணேசலிங்கம், மயிலிட்டி மக்கள் ஒன்றிய பிரதிநிதி க.இளங்குமாரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையினை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறுதிருமுருகனும் ஆசியுரையை புதிய உயர்கலைக் கல்லூரியின் இயக்குநர் திருமதி சண்முகநாதன் அருள் நங்கையும் ஆற்றவுள்ளனர். (18)

# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?



### ரிஷபம்

*(கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள் ரோகினி, மிருகசீரிடம் 1,2ஆம் பாதம்)*

கண்டகச்சனி (7இல்) நடைபெற்றுக் கொண்டிருக்கையில் குரு 5/7/2016 வரை 4 இல் நின்று ஈடுபடும் முயற்சிகளில் தடைதாமதங்கள் எற்படுத்தி இறுதியில் வெற்றியை தக்க வைத்துவிடும்.

தொழில் பயணம் முன்னிட்டு குடும்பபிரிவினை எதிர்பாருங்கள் ஒய்விற்குப்பின்னரும் மீள் நியமனம் பெற விண்ணப்பித்தல். ஈகோ மனப்பாங்கினால் குடும்பத்தின் கவின் நிலை பாதிக்கப்படும் விசா பிரச்சினை இழுபடும் இன்ப சுகங்களை அனுபவிக்க முடியாது நோய் வாட்டலாம். ஆவணங்கள் தவறிப்போகலாம். வாகனம் மற்றும் மனைப்பாதுகாப்பில் கவனம் எடுங்கள் கௌரவக் குறைவினால் பங்குத்தொழிலை முறித்தல் சத்திரசிகிச்சையினால் நோயின் உபாதை நீங்கிவிடும். இராகு கேது முறையே 9.01.2016 வரை 5ஆம் 11 ஆம் நிலையிலும் பின் 1/2 ஆண்டுகளுக்கு 4ஆம் 10 ஆம் கோசரத்தில் நின்று புதிய முயற்சிகளில் இலாபத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் வாகனவேகத்தினால் சிலர் விபத்தினை எதிர்கொள்வர்.

ஜோதிர் வித்யா ரத்னா
சாமஶ்ரீ தேச மானிய
வி.ஏ.சிவராசா
(அரச விருது பெற்ற ஜோதிடர்)



# காந்திய கொள்கையை கடைப்பிடித்த பெரியார் அண்ணா நடராசா

காந்திய சிந்தனை மீது பற்றுக் கொண்டு வாழ்ந்து வந்தவரான அண்ணா நடராசாவின் இழப்பு அகிம்சை மீதும் சமூக நலனின் மீதும் பற்றுக்கொண்டு செயற்படுவோருக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். சமூகத்தின் மீதும் சூழலின் மீதும் அக் கறையோடு செயற்பட்ட மில்க் வைற் கனகராசாவின மறைவு ஏற்படுத்திவிட்டிருந்த வெற்றிடத்தை நிரபச் செயற்பட்டு வந்தவர் தொழிலதிபர் பொ.நடராசா.

மகாத்மா காந்தி தமது வேலைத திட்டங்களில் சமூக நிர்மாணத் திட்டங்களுக்கு எவ்வளவு முன்னுரிமை கொடுத்து வந்தாரோ அதேபோன்று சமூகப்பணிகளில் தனது வருமானத்தை செலவிட்டு வந்தவர் அண்ணா நடராசா. எளிமையான வாழ்வு, அமைதியான பேச்சு, எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பான தீர்க்க தரிசனம் மிக்கவராக விளங்கி வந்தார்.

மரநடுகை என்றால் அன்னாருக்கு அலாதிப்பிரியம். கடந்த ஆண்டு யூலை மாதம் மில்க் வைற் கனகராசாவின் நினைவு தினத்தில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்துடன் இணைந்து கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் பனை மரக்கன்றுகளை நடுகை செய்தார். கொக்குவில் இந்துக்கல்லூரி வளாகத்திலும் எமது நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்றுகளை அன்பளிப்பபுச் செய்து சிறப்பித்தார்.

இவ்வாண்டும் மில்க்வைற் நினைவு தினத்திலும் ஒக்ரோபர் 2 காந்தி ஜெயந்தி தினத்திலும் யாழ்ப்பாணத்திலும் பூநகரி கிராஞ்சி கிராமத்திலும் அன்னாரை அழைத்து மரநடுகைத் திட்டங்களை ஆரம்பித்து வைக்கவிருந்தோம். 2019 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி அடிகளாரின் 150 ஆவது பிறந்த தினம் கொண்டாடப்பட இருக்கும் வேளையிலேயே எமது சங்கத்தின் பல்வேறு வேலைத் திட்டங்களிலும் தனது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக பெரியார் பொ.நடராசா உறுதியளித் திருந்தார். அவரின் திடீர் மறைவு எமது சங்கத்திற்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தாலும் கூட அண்ணாருக்குச் செய்கின்ற அஞ்சலியாக எமது திட்டங்கள் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும்.

1959 ஆம் ஆண்டு குடிசைக் கைத்தொழிலாக தொடங்கிய அண்ணா தொழிலகத்தின் முதுகெலும்பாகச் செயற்பட்டவர் பொ.நடராசா. எத்தனையோ சோதனைகள், வேதனைகளை கடந்த காலங்களிலே எதிர் கொண்ட அண்ணா நிறுவனம் இன்று கிளை ப்ரப்பி சமூகத்திற்கு நிழல் கொடுத்துக் கொண்டிருககின்ற ஒரு விருட்சமாக நிற்பதற்கு அன்னாரின் தலை மைதத்துவமும் நிர்வாகததிறனும், மனித நேயமுமே காரணமாகும.

1995 இல் இடம்பெற்ற யாழ்பபாண இடப்பெயர்வு அண்ணா நிறுவனத்தை பெரிதும் பாதித்திருந்தாலும் கூட தென்மராட்சியிலும் வன்னி மண்ணிலும் அவரின் பணி வியாபித்திருந்தது. தனது தொழிலாளர்களை பட்டினி நிலையிலிருந்து காப்பாற்றிய பெருமை அவருக்குரியது.

இப்படியான பெரியாரின் இழப்பு தமிழ்ச் சமுதாயத்திறகு மட்டுமல்ல இந்நாட்டிற்கே பேரிழப்பாகும். அன் னாரின் பிரிவினால் துயருற்றிருக் கும குடும்பத்தினருக்கும் அண்ணா நிறுவனத்திற்கும் அகில இலங்கை காந்தி சேவாசஙகம தனது ஆழ்ந்த அனுதாபஙகளை தெரிவித்துக் கொள்கின்றது.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி எம்.ஏ
(பொதுச் செயலாளர்,
அகில இலங்கை காந்தி சேவா சங்கம்)

# இந்தியாவுடன் போர் ஏற்பட்டால் அணுஆயுதத்தை பயன்படுத்துவோம்

## பாகிஸ்தான் எச்சரிக்கை



இந்தியாவுடன் போர் ஏற்பட்டால் பாகிஸ்தான் இராணுவம் அணு ஆயுதங்களை பயன்படுத்தும் என பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

காஷ்மீர் எல்லை விவகாரம் குறித்து இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே அடிக்கடி தாக்குதல் நடைபெற்று வருகிறது. இதனால், இரு நாடுகள் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகியும், பாகிஸ்தான் இராணுவம் இந்திய இராணுவத்தினர் மீது அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இன்று ரஷ்யாவின் உபா நகரில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டின் போது பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்பை, இந்திய பிரத மர் நரேந்திர மோடி சந்தித்து பேசத் திட்டமிட்டுள்ளார்.

இந்த நிலையில் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் ஹவாஜா முகமது ஆசிப், "எங்களிடம் உள்ள அணு ஆயுதங்கள் வெறுமனே பார்வைக்காக மட்டும் வைக்கப்படவில்லை. அவற்றை எந்நேரமும் பயன்படுத்தவே வைத்திருக்கிறோம். தற்போது இந்தியாவுடன் எவ்வித போர் அபாயமும் இல்லை.

அணு ஆயுதங்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் இந்தியாவுடன் போர் நீளக்கூடாது என பிரார்த்தனை செய்கிறோம். ஒருவேளை போர் ஏற்பட்டால் பாகிஸ்தான் இராணுவம் அணு ஆயுதங்களை பயன்படுத்தும்" என்று கூறியுள்ளார்.

உலகச் செய்திகள்

# தூய்மை இந்தியா திட்டம் 94 கோடி ரூபா செலவு

பிரதமர் நரேந்திர மோடியின் கனவுத்திட்டங்களில் ஒன்றான தூய்மை இந்தியா திட்டத்தை விளம்பரப்படுத்த மத்திய அரசு 94 கோடி ரூபாய் செலவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவை 5 ஆண்டுகளில் தூய்மைப்படுத்தும் நோக்கில் தூய்மை இந்தியா என்னும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 2 ஆம் திகதி ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந்தத் திட்டம் குடிநீர் மற்றும் சுகாதர அமைச்சகத்தின் கீழ் செயற்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் தூய்மைப் பணிக்காக மாநிலங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவி வழங்கப்படுகின்றது.

தூய்மை இந்தியா திட்டம் குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் லக்னோவைச் சேர்ந்த சமூக ஆர்வலர் சஞ்செய் ஷர்மா விளக்கம் கேட்டிருந்தார்.

தூய்மை இந்தியா திட்டத்திற்காக 2014 முதல் 2015 ஆம் ஆண்டில் 94 கோடி ரூபா அரசு செலவிட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

# மகி நூடில்ஸை அழிக்க 20 கோடி ஒதுக்கிய நெஸ்லே




மகி நூடில்ஸ்களை அழிப்பதற்கு ரூ.20 கோடி ரூபாய்களை செலவிட்டு வருவதாக நெஸ்லே நிறுவனம் அறிவித்துள்ளது. நெஸ்லே நிறுவனத்தின் மகி நூடில்ஸில் நச்சுப்பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து கடந்த மாதம் 5 ஆம் திகதி அதற்குத் தடை விதிக்கப்பட்டது.

இதையடுத்து இந்தியா முழுவதும் சந்தையில் இருந்து பெறப்படும் 27,000 தொன் மகி நூடில்ஸ்களை, மகாரஷ்டிரா மாநிலம் சந்திராபூரில் வைத்து அம்புஜா சிமெண்ட்ஸ் நிறுவனம், அழித்து வருகிறது. இதற்காக, அந்த நிறுவனத்திற்கு நெஸ்லே நிறுவனம் 20 கோடி ரூபா கொடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், சந்தையில் இருந்து அனைத்து நூடில்ஸ்களையும் திரும்ப பெற்றுக் கொண்டுவரும் போக்குவரத்துச் செலவு உட்பட அதை அழிப்பதற்கான செலவு மேலும் அதிகரிக்கப்படும் என கூறப்படுகிறது.

# இத்தாலியின் முன்னாள் பிரதமர் குற்றவாளியென அறிவிப்பு



இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லஸ்கோனி இலஞ்சம் வழங்கிய குற்றச்சாட்டில் குற்றவாளியாக காணப்பட்டுள்ளார்.

மத்திய வலதுசாரி அரசாங்கத்தை கவிழ்க்கும் முயற்சியாக செனட் உறுப்பினர் ஒருவருக்கு 2006 ஆம் ஆண்டு பெர்லஸ்கோனி இலஞ்சம் வழங்கியதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

சர்யுதி கிரிகரீயோ என்ற செனட் சபை உறுப்பினருக்கு செல்வந்தரான பெர்லஸ்கோனி 3 மில்லியன் யூரோவை வழங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கில் குற்றவாளியாக காணப்பட்ட பெர்லஸ்கோனிக்கு, மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நாப்பொல்ஸ் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன் ஐந்து வருடங்களுக்கு அரச சேவையில் ஈடுபடவும் பெர்லஸ்கோனிக்கு நீதிமன்றம் ஐந்தாண்டுகள் தடை விதித்துள்ளது.

நான்கு தடவைகள் இத்தாலியின் பிரதமராக பதவி வகித்த பெர்லஸ்கோனி இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ளார்.

பெர்லஸ்கோனி மேன்முறையீடு செய்யும் பட்சத்தில் அந்த வழக்கு விசாரணைகள் நடைபெறும் இவ்வாண்டின் இறுதியில் சட்ட வரையறைகள் தொடர்பான சட்டம் அமுலுக்கு வரவுள்ளதால் அவர் தண்டனையை அனுபவிக்க மாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவத்தை கொன்ற 24 பேருக்கு மரணதண்டனை



ஈராக்கில் கடந்த 2014 ஆம் ஆண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொன்ற குற்றவாளிகள் 24 பேருக்கு ஈராக் நீதிமன்றம் நேற்றுமுன் தினம் மரண தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது.


கடந்த ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதி ஈராக்கின் திக்ரிட் நகர் அருகில் காணப்படும் ஸ்பெய்சர் இராணுவமுகாமுக்குள் புகுந்த ஐ.எஸ்.தீவிர வாதிகள் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டிருந்தனர். இதில் 1500 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் இந்தக் கொடூர தாக்குதலை நடத்திய தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தில் ஈராக் இராணுவத்தினர் 28 பேரை கைது செய்து ஈராக் மத்திய குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இதனைத்தொடர்ந்து தற்போது வழக்கு விசாரணை முடிவடைந்துள்ள நிலையில் 24 பேரின் குற்றச் செயல்கள் நிரூபிக்கப்பட்டு அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தத் தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தின் ஒத்துழைப்புக்கு அனுப்பி வைக்கப்படும் என ஈராக் நீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது. மேலும் இராணுவ முகாமில் தாக்குதல் மேற்கொண்டவர்கள் என்ற சந்தேகத்தில் உள்ள 600 இற்கும் மேற்பட்டவர்கள் தலைமறைவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புளூட்டோ கிரகத்தில் அழகிய காதல் சின்னம்



புளூட்டோ கிரகத்தின் மேற்பரப்பில் பிரமாண்ட காதல் சின்னம் இருப்பதை நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

நாசா விண்வெளி ஆய்வு மையத்திற்கு நேற்றுமுன்தினம் காலை New Horizons probe தனது (LORRI) கமராவில் பதிவு செய்த புகைப்படத்தை அனுப்பியது.

அதில் புளூட்டோவின் மேற்பரப்பில் உலக காதலர்களின் காதல் சின்னமான இதயம் போன்ற தோற்றம் இருப்பதைப் பார்த்து நாசா விஞ்ஞானிகள் ஆச்சரியமடைந்துள்ளனர்.

8 மில்லியன் கிலோ மீற்றர் தூரத்திற்கு பரந்து விரிந்த இந்த காதல் சின்னத்தை "திமிங்கலம்" என்று செல்லமாக விஞ்ஞானிகள் அழைத்து வருகின்றனர்.

விரைவில் இதன் நெருக்கமான புகைப்படத்தை பெறும் முயற்சியில் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

# சிறிய ரக விமானங்கள் மும்பையில் பறக்க தடை

மும்பை பகுதியில் ஆளில்லா சிறிய விமானங்களை பறக்கவிடுவதற்கு ஒரு மாதம் தடை விதிகப்பட்டுள்ளது. மும்பையின் பாதுகாப்பைக்கருத்திற்கொண்டு இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மும்பையிலுள்ள பாபா அணு ஆராய்ச்சி மையம் அருகே, கடந்த திங்கட்கிழமை ஆளில்லா சிறு விமானம் ஒன்றை, ரிமோட் கருவி மூலம் 3 பேர் இயக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு விமானம் பறந்த காட்சி, அருகில் உள்ள ஒரு கல்லூரியின் கண்காணிப்புக் கமராவில் பதிவானதைத் தொடர்ந்து அந்தக் கல்லூரியின் பேராசிரியர் ஒருவர், பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். இந்த விடயம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலிஸார் அந்த சிறு விமானத்தைப் பறக்கவிட்ட சிவகுமார ரஹானே என்பவரை கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து மும்பை நகரத்தில் சிறிய ரக விமானம் பறக்க ஒரு மாதத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

# பொய்யான வாக்குறுதிகளை நம்ப மக்கள் இனியும் தயாராக இல்லை

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை குறித்தும் காணாமற் போனவர்கள் குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலின் பின்னர் தீர்க்கமான முடிவு எடுப்பதாகக் கூறியிருப்பது எதிர்வரும் தேர்தலிலும் எமது மக்களை ஏமாற்றும் இன்னொரு செயற்பாடாகும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பொது மன்னிப்பு அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதிலும் காணாமற் போன உறவுகளைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகள் உடன் எடுக்கப்பட வேண்டும் என்பதிலும் ஈ.பி.டி.பி.யினராகிய நாம் உறுதியுடன் இருக்கின்றோம். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயங்களை வைத்தும் அரசியல் இலாபமே தேட முனைகின்றது.

கடந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது தமிழர் மாகாண சபை உருவாக்கப்பட்டதும் இவ்விடயங்கள் தீர்க்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சொல்லிவந்தது. எதுவுமே நடக்கவில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் இந்த வாக்குறுதியையே கூட்டமைப்பு வழங்கியது.

இதனை நம்பி எமது மக்கள் ஜனாதிபதி மாற்றத்திற்கு வாக்களித்தனர்.

புதிய ஜனாதிபதி பதவியேற்றதன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட புதிய அரசினால் ஏற்படுத்தப்பட்ட தேசிய நிறைவேற்று அதிகார சபையில் பங்கெடுத்து வரும் கூட்டமைப்பிற்கு இந்த விடயங்களைத் தீர்க்க நல்லதொரு வாய்ப்புக் கிட்டியது.

ஆனால், கூட்டமைப்பினர் இந்த விடயங்களைத் தீர்க்காமல் தங்களுக்கு பணமும், சொகுசு வாகனங்களும், சொகுசு வீடுகளும் பெற்றுக் கொண்டனர்.

இப்போது எதிர்வரும் தேர்தலின் பின்னர் இவ்விடயங்கள் தீர்க்கப்படுமென கூட்டமைப்பினர் கூறுகின்றனர்.

இப்படியே தொடர்ந்து [illegible] கூடிய தேர்தல்கள் தோறும் கூட்டமைப்பினரின் இந்த வாக்குறுதிகள் தொடருமே அன்றி எமது மக்களின் பிரச்சினைகள் தீரப் போவதில்லை.

போதிய அரசியல் பலம் எமக்கு இருந்திருப்பின், இப்பிரச்சினைகள் எப்போதே தீர்க்கப்பட்டிருக்கும். எனவே இம்முறை எமது மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனநாயகப் போராளிகள் சுயேட்சையாகப் போட்டி

தமிழ் மக்களினுடைய பிரதிநிதித்துவங்கள் பாதிக்கப்படாத வகையில் முன்னாள் போராளிகளை இணைத்துகொண்டு சுயேட்சையாக போட்டியிட ஜனநாயகப் போராளிகள் கட்சி தீர்மானித்துள்ளதாக அதன் ஏற்பாட்டாளர், முத்த ஊடகவியலாளர் வித்தியாதரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் போட்டியிடுவதால் அங்கு தமிழ் பிரதிநிதித்துவத்தில் பாதிப்பு ஏற்படலாம் அது தொடர்பாக போராளிகள் கலந்தாலோசித்துள்ளனர். இதனால் யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக வித்தியாதரன் தெரிவித்தார்.

வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவது குறித்து இன்னமும் முடிவு எடுக்கப்படவில்லை என்று கூறிய அவர் போராளிகளை உள்ளடக்கிய கட்சியொன்றை உருவாக்க போவதாக பத்திரிகைகளில் ஆறு மாதங்களுக்கு முன்னரே விளம்பரம் செய்ததாவும், ஆகவே இந்தக் கட்சி தேர்தலை நோக்கமாக கொண்டு உருவாக்கப்பட்டது அல்ல என்றும் குறிப்பிட்டார்.

முன்னாள் போராளிகளுக்கு தேர்தலில் போட்டியிட அல்லது அரசியலில் பங்கு கொள்ள தகுதியில்லை என்ற தொனியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தங்கள் கோரிக்கையை நிராகரித்து விட்டதாகவும் கவலையுடன் கூறிய வித்தியாதரன் சுயேட்சையாகப் போட்டியிடுவது என்ற தீர்மானத்தை மக்கள் ஏற்பார்கள் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

## கொலைக்...

டது. அந்தக் காலப்பகுதியில் யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளராக இருந்த தற்போதய யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற ஆணையாளரான திருமதி கனகா சிவபாதசுந்தரம் முன்னிலையில் யாழ்.மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை இடம்பெற்று வந்தது.

இதன் காரணமாக நேற்று தீர்ப்பு வழங்கும் போது, யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளராக கனகா சிவபாதசுந்தரம் மன்றில் ஆஜராகினார்.

மனைவியை மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொலை செய்தார் என்பதை சாட்சியங்கள் ஊடாக உறுதிப்படுத்திய ஆணையாளர், அவரைக் குற்றவாளியாக இனங்கண்டு மரண தண்டனை வழங்கினார்.

## பல்கலைக்கழக...

வுத் திருமணம் செய்து கொண்டு பால்பண்ணை வீதி, திருநெல்வேலியில் வசித்து வந்த நிலையிலேயே மாணவி கணவன் வெளியில் சென்ற வேளையில் கடந்த 6 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் தீ மூட்டியுள்ளதாகவும் சிறிது நேரத்தில் வீட்டுக்கு வந்த கணவனாலும் அயலவர்களாலும் தீ அணைக்கப்பட்டு யாழ்.போதனாவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை மாணவி உயிரிழந்துள்ளார்.

இத்தீ விபத்து தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (இ)

## அபிவிருத்திப்....

அரசியல் பலத்தை எமக்கு தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். இதில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க நிர்வாக உறுப்பினர் தேவராஜன் மற்றும் ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி பிரதேச அமைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் உரையாற்றினர்.

இதன்போது மக்களினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் செயலாளர் நாயகம் பதிலளித்தார்.

## திருமலையில்

ளது. திருகோணமலை நகரிலுள்ள விளையாட்டு மைதானத்திற்கு அண்மித்த பகுதியில் இடம் பெற்று வரும் அகழ்வுப் பணிகளின் போது இவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ஆம் தேதி மக்கெய் ஸர் விளையாட்டு மைதானம் புனரமைப்புப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இந்த பகுதியில் சில மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன.

## சந்திரிகா...

தார். இந்த நிலையிலேயே அவர் பிரித்தானியா சென்றுள்ளது தெற்கு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

சந்திரிகா குமாரதுங்க லண்டன் சென்றுள்ளதை உறுதிப்படுத்தியுள்ள அவரது ஊடக இணைப்பாளர், அது தொடர்பாக சுருக்கமான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

## வேட்புமனுவில்...

வெளியாகியிருந்தன. பிரசன்ன ரணதுங்க விவகாரத்தினால், வேட்பு மனுவில் கையெழுத்திடுவது இழுபறியில் இருந்தது.

நேற்றுக் காலை பிரசன்ன ரணதுங்கவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட இடமளிக்கப்பட்டதையடுத்து, மகிந்த ராஜபக்ஷ வேட்பு மனுவில் கையெழுத்திட்டார்.

இதையடுத்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கிய தலைவர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோரும் வேட்புமனுவில் கையெழுத்திட்டனர்.

மகாவலி நிலையத்தில் வைத்து வேட்புமனுவில் கையெழுத்திடும் பணி இடம்பெற்று வருகிறது.

அதேவேளை, குற்றவியல் மற்றும் ஊழல் வழக்குகளில் சிக்கியுள்ள சஜின் வாஸ் குணவர்த்தன, துமிந்த சில்வா, மேர்வின் சில்வா, சரண குணவர்த்தன ஆகியோருக்கு வேட்பாளர் பட்டியலில் இடமளிப்பதில்லை என்று இருதரப்பும் இணக்கம் கண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தங்க நகை திருட்டு

வவுனியா குட்செட் வீதியில் நகைக்கடை ஒன்றின் உரிமையாளர் ஒருவரின் வீட்டில் 27 பவுண் நகைகள் நேற்று முன்தினம் இரவு திருட்டுப்போயுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது, வவுனியா, குட்செட் வீதியில் உள்ள நகைக்கடை உரிமையாளரின் வீட்டின் சமையலறைப் பகுதியில் உள்ள யன்னல் ஒன்றைக் கழற்றி உள் நுழைந்த திருடர்கள் அறை ஒன்றில் இருந்த அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த தாலிக்கொடி, மோதிரம், தோடு உள்ளிட்ட சுமார் 11 இலட்சம் ரூபாய் பெறுமதியான 27 பவுண் நகைகளை திருடிச் சென்றுள்ளனர். வீட்டின் உரிமையாளர் காலை எழுந்து பார்த்த போது தமது படுக்கை அறையில் உள்ள அலுமாரியில் இருந்த நகைகள் திருட்டு போயிருந்த விடயம் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து வவுனியா பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து மேப்ப நாயின் துணையுடன் தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த வீட்டில் இருந்த உரிமையாளர் மற்றும் மனைவி ஆகியோருக்கு தமது அறையில் திருட்டுப் போன சம்பவம் தொடர்பில் எதுவுமே தெரியாது எனவும் திருட வந்தவர்கள் தமக்கு மயக்க மருந்து ஏதாவது தெளித்திருக்கக்கூடும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## சஜின்வாஸ் தனித்துப் போட்டி

அரச சொத்துக்களை முறையற்ற ரீதியில் பயன்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன எதிர்வரும் பொதுத் தேர்தலில் சுயேட்சையாகக் களமிறங்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுயேட்சைக் குழுவொன்றின். ஊடாக காலி மாவட்டத்தில் இவர் போட்டியிடவிருப்பதாக அறியமுடிகிறது.

ஜனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமான வாகனங்களை முறையற்ற வகையில் சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சஜின்வாஸ் குணவர்தன, தொடர்ந்தும் விளக்கமறியலில் உள்ளார்.

பிணையில் செல்வதற்காக அவரால் அடுத்தடுத்து விடுக்கப்பட்ட கோரிக்கைகளை நீதிமன்றம் நிராகரித்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போராளிகளுக்காக கதவுகள் திறந்தே உள்ளன

## சங்கரி சொல்கிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் ஜன நாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்து செயற்பட எண்ணியதை தமிழர் விடுதலைக் கூட்டணி மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது. அவர்களின் பெயரைப் பயன்படுத்தி நாடாளுமன்றம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், முன்னாள் போராளிகளின் அமைப்பிற்கு ஓர் இடத்தையாவது வழங்க மறுத்தது வருந்தத்தக்க விடயம் மட்டுமல்ல கண்டிக்கத் தக்கதுமாகும்.

ஏன் இன்றும் த.தே.கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு சிலர் அவர்களின் பெயரை உச்சரித்தே தங்களின் நாடாளுமன்ற பதவியின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளவிரும்புகின்றனர்.

எம்மைப் பொறுத்தளவில் அவர்கள் சுயேட்சையாகப் போட்டியிடுவது எதிர் காலத்தில அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிவரும் என நாம் எண்ணுகின்றோம். எனவே அவர்கள் தங்களது முடிவை மீளப் பரிசீலனை செய்து எம்முடன் இணைய விரும்பா விட்டால், ஏதாவது ஒரு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியில் இணைந்துபோட்டியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்களுக்கு போட்டியாக எவரும் செயற்பட்டால் அவர்களை துரோகிகள் அல்லது இராணுவப் புலனாய்வாளர்கள் எனக் கூறுவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு கை வந்தகலை என்பது மட்டுமல்ல புலிகளையும் போர்க் குற்றங்களுக்காக சர்வதேச விசாரணைகளுக்கு உட்படுத்தவேண்டும் என்று கூறியவர்கள் அல்லவா அவர்கள்.

இவைகள் அனைத்தையும் முன்னாள் போராளிகள் சிந்தித்துச் செயற்படவேண்டிய தருணம் இது. முன்னாள் போராளிகளுக்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் கதவுகள் என்றும் திறந்தே இருக்கும் என்றுள்ளது.

## சட்டமா...

நிலைமைகள் தொடர்பாக ஆராயவுள்ளனர்.

இந்நிகழ்வு இன்று யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதியில் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கணேசராஜா தலைமையில் கலந்துரையாடல் இடம்பெறும். (18)

## சுயேட்சையாக..

தன்னையும் இணைக்கும்படி கோரிக்கை விடுத்திருந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (25)

## பெறுபேறுகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகள் அலகினால் நடாத்தப்பட்ட கலைமாணி பகுதி II, சிறப்புக் கலைமாணி, இசை மாணி, நடனமாணி - 2011ஆகிய தேர்வுகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகியுள்ளன. இன்று முதல் பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்வையிடலாம் எனவும் மீள்பரீட்சார்த்திகள் உடனடியாக மீள் பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறு வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவின் இணைப்பாளர் பா. நிமலதாஸ் தெரிவித்துள்ளார்.

## மோட்டார் குண்டு மீட்பு


(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பொதுச் சந்தைக்கு அருகாமையிலுள்ள வீதியிலிருந்து வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டது.

நேற்றுக் காலை இவ்வீதி துப்புரவு செய்யப்பட்ட வேளையிலேயே இக்குண்டு கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து இக்குண்டு தொடர்பில் இளவாலை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலினடிப்படையில் பொலிஸார் இம்மோட்டார் குண்டுகளை மீட்டுச்சென்றுள்ளனர்.(இ)

# தேர்தல் கால விதிமுறைகள் சரியான அமுலாக்கம் வேண்டும்

## தேர்தல்கள் ஆணையாளருக்கு டக்ளஸ் கடிதம்



தேர்தல் காலங்களில் வீதிகள் மற்றும் மின்கம்பங்களில் வேட்பாளர்களின் பெயர்கள், இலக்கங்கள் என்பன எழுதுவது தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு இடம்பெற்றால் குறித்த வேட்பாளர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கடந்த 6ஆம் திகதி தேர்தல்கள் செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அவர்களுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எழுதிய கடிதத்தில் மேற்படி விடயத்தை வரவேற்றுள்ளார்.

அதேவேளை,தேர்தல் காலத்தில் ஒரு கட்சியை அல்லது வேட்பாளரை பழிவாங்கும் நோக்குடன் ஒருகட்சியின் அல்லது வேட்பாளரின் பெயரையோ அல்லது இலக்கத்தையோ இன்னொரு கட்சியோ அல்லது வேட்பாளரோ வீதியிலோ அல்லது மின்கம்பங்களிலோ எழுதக் கூடிய வாய்ப்புக்கள் இல்லாமலில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் யாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது என்ற விடயம் மேலோங்குகிறது.

எனவே, இவ்விடயம் தொடர்பில் உரிய வகையில் மேலும் ஆராய்ந்தறிந்து தவறிழைக்காதவர்கள் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணையாளர் ஏற்பாடுகளை செய்வது அவசியமென்றும் மேலும் அக்கடிதத்தில் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

## மீண்டும் கட்டுப்பாடு

ஊடக ஒழுங்குமுறைக் குழுவை இலங்கை அரசு மீண்டும் அமைத்துள்ளதற்கு சர்வதேச ஊடக சுதந்திரத்துக்கான குழு கவலை தெரிவித்துள்ளது. ஊடகவியலாளர்களை சட்டத்தின் கீழ் தண்டிக்கவோ, அவர்களுக்கு அபராதம் விதிக்கவோ அதிகாரம் வழங்கும் ஊடக ஒழுங்கு முறைக் குழுவை இலங்கை அரசாங்கம் மீண்டும் அமைத்துள்ளது. மகிந்த ராஜபகஷ ஜனாதிபதியாக இருந்து போது அமுலில் இருந்து ஊடக ஒழுங்குமுறைக் குழுவை கடந்த ஜனவரியில் பதவியேற்ற ஜனாதிபதி மைத்திபால சிறிசேன நீக்கியிருந்தார். மேலும் ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகளையும் நீக்கினார். நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் நடக்க உள்ள நிலையில் இதுபோன்ற நடவடிக்கையை இலங்கை அரசு எடுத்திருப்பது குறித்து சர்வதேச ஊடகவியலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# தேர்தல் தோல்வி வெளிப்படும் அச்சம்



எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கொண்டுள்ள அச்சம் இப்போதே வெளிப்பட ஆரம்பித்துள்ளதென ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அவர், தமிழ் மக்கள் குறித்தும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் எவ்வித அக்கறையும் இல்லாத கூட்டமைப்பினர், தங்களது ஆசனக் கனவுகளை மட்டுமே வெளிப்படுத்தி இருக்கின்றனர்.

மக்களது பிரச்சினைகளை தேர்தலின் பின்னர் பார்த்துக் கொள்வோம் எனக் கூறுகின்றனர். இப்படியே பல தேர்தல்களுக்கும் முன்னர் கூறிக் கூறி, இதுவரையில் கூட்டமைப்பினர் எமது மக்களுக்காக எதையுமே செய்யவில்லை.

இப்போது அவர்களது கனவு 20 ஆசனங்கள் மட்டுமே. இந்த இலக்கு சாத்தியமில்லை என்று தெரிந்தும் பயத்தில் கத்துவது போல் 20, 20 என்று கத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உள்ளூற அவர்களுக்கு இருக்கும் அச்சம் அவர்களையும் அறியாமல் இப்போதிருந்தே வெளிப்பட ஆரம்பித்து விட்டது.

கடந்த 6 ம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன், செங்கலடியில் கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தில் உரையாற்றும் போது தங்களது தோல்வி குறித்த தனது அச்சத்தை வெளிப்படையாகவே வெளிப்படுத்தியிருக்கிறார்.

இதேநேரம், முதலைக்குடா விநாயகர் விளையாட்டுக் கழகத்தில் அதே தினம் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரனும், தாங்கள் அரசியலில் விளையாடிக் கொண்டிருப்பதாகவும், இப்போது வாக்குகள் சிதறடிக்கப்பட இருப்பதாகவும் கூறி தங்களது தோல்விப் பயத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்

மேலும் கூறியுள்ள அவர் நாங்கள் 8 வேட்பாளர்களை மட்டக்களப்பு மாவட்டத்தில் நிறுத்தவுள்ளோம். அந்த 8 வேட்பாளர்களையும் உங்களுக்கு பிடிக்காவிட்டாலும் அவர்கள் நீங்கள் நினைக்கும் தகுதியில் இல்லையென்றாலும் அந்தக் கட்சிக்காகவது நீங்கள் உங்கள் வாக்கை செலுத்துங்கள் என மன்றாடியிருக்கிறார்.

எனவே, தங்களது தோல்வி குறித்த அறிகுறிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இப்போதே அறிந்து கொண்டுள்ளனர் என சில்வேஸ்த்திரி அலென்ரின் உதயன் தெரிவித்துள்ளார்.

# கிழக்கின் தேர்தல் களம் கூட்டமைப்பின் வியூகம் என்ன?

அடுத்தமாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் எட்டாவது வேட்பாளர் யார் என்பது இன்னமும் முடிவாகவில்லை என்று தெரியவருகிறது.

வடக்கு, கிழக்கின் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும், நாளை பிற்பகல் 2 மணியளவில் ஒரே நேரத்தில் வேட்பாளர் பட்டியலைச் சமர்ப்பிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டமிட்டுள்ளது.

இந்தநிலையில், மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலில், தமிழரசுக் கட்சி சார்பில் 5 பேரும், ஈபிஆர்எல்எவ், புளொட், ரெலோ சார்பில் தலா ஒருவரையும் நிறுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ரெலோ சார்பில் மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் ஆர். துரைரெட்ணம், புளொட் சார்பில், தனியார் கல்வி நிறுவன ஆசிரியரான அமல் மாஸ்டர் எனப்படும், வியாகுலேந்திரனும் போட்டியிடவுள்ளனர்.

தமிழரசுக் கட்சியின் சார்பில், கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களாக இருந்த பொன் செல்வராசா, சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன் ஆகியோருடன் இரண்டு புதிய முகங்கள் களமிறக்கப்படவுள்ளனர்.

புதிய வேட்பாளர்களாக களமிறக்கப்படவுள்ள இருவரில், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜீ.சிறீநேசனும் ஒருவர் என்பது உறுதியாகியுள்ளது.

எனினும், தமிழரசுக் கட்சியின் சார்பில் நிறுத்தப்படவுள்ள ஐந்தாவது வேட்பாளர் யார் என்பது குறித்து இன்னமும் முடிவாகவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


## சுசில் கொழும்பில் போட்டி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த, எதிர்வரும் பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்து போட்டியிடுகிறார்.

அத்துடன், சுதந்திர முன்னணி கொழும்பு மாவட்ட வேட்பாளர் அணியின் தலைவராகவும் அவர் நியமனம் செய்யபபட்டுள்ளதாக கட்சியின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# கொலைக்குற்றவாளி சந்நியாசியாக



ராஜீவ் படுகொலை வழக்கில் கைதாகி வேலூர் தனிமைச் சிறையில் அடைபட்டிருக்கும் முருகன், முழு சந்நியாசி ஆகிவிட்டார்.

ஏன் இந்தத் திடீர் சந்நியாசம்? என்ற கேட்டபோது,

இதற்கான விதை, நான் பிறந்த இத்தாவில் கிராமத்திலேயே விதைக்கப்பட்டு விட்டது. என் தந்தை 12 வயதிலேயே தீட்சை பெற்று, அங்கு உள்ள முருகன் கோயிலுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். அவர் முழுமையான ஆன்மிகவாதியாக மாறிய பின்னர், பக்தி மார்க்கக் கருமங்களில் எங்களையும் ஈடுபடுத்தினார்.

சிறைக்கு வந்த நாளில் இருந்தே, என் மானசீக ஆன்மிகக் குருவான ராமகிருஷ்ண பரமஹம்சரின் சிந்தனைகளையும் விவேகானந்தரின் போதனைகளையும் படித்துத் தியானித்தபடி இருந்தேன். ஒருகட்டத்தில் என்னை முழுமையாக ஆன்மிகதத்துக்குள் இழுப்பது போல உணரவும் பயந்து பின்வாங்கிவிட்டேன். பின்னர் கிருஷ்ண பக்தி இயக்க ஸ்வாமிகளான ஜெய கோவிந்ததாஸ் அவர்களின் போதனைகள், என்னை மீண்டும் ஆன்மிகத்துக்குள் அழைத்துச் சென்றன.

இதுவரை நான் வாழ்ந்த வாழ்வில் என் விருப்பங்கள், ஆசைகள் எதுவுமே நிறைவேறாமல் போனாலும் கூட, அதை வாழ்க்கை என நம்பி எதிர்நீச்சல் எனும் அறியாமையில் உழன்று கொண்டிருந்தேன். ஆனால், இப்போது பரவசமான ஓர் உலகத்துக்குள் அடியெடுத்து வைத்திருக்கிறேன். கடலைச் சேரும் நதியில் சத்தம் இல்லாமல் நடனமாடிப் போகும் ஓர் இலை போல மென்மையானவனாக என்னை உணர்கிறேன்! என்றார்.


## விமானத்தில் வேலை செய்ய அரிய சந்தர்ப்பம்

விமானத்தில் தனியார் பகுதிக்கு மெசின், கவுண்டிங், க்ளினிங், பாதுகாப்பாளர் 18 - 45 வயதுடைய ஆண், பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் 18000-35000 வரை கொடுக்கப்படும். உணவு, பயிற்சி, தங்குமிட வசதி, கொடுக்கப்படும். (தம்பதிகள், நண்பர்கள், குழுக்களாகவும், சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். சிங்களம் கட்டாயம் இல்லை. இவ்வருடம் A/L எடுத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: 0776289655, 0766398366




(R/277)


இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.